Registered as a News paper in Ceylon ★ விலை சதம் 20

# ஈழநாடு

வாரமலர்




மலர் 12 | மார்கழி 27 | ஜுல்கஃ 13 | ( 11—1—71 ) | திங்கட்கிழமை | இதழ் 332

# காமன்வெல்த் மகாநாட்டில் கொந்தளிப்பு ஏற்படுமா?

## சர்ச்சைக்குரிய பிரச்னைகள் மீது விவாதம் நடக்கலாம்

சிங்கப்பூர், ஜன 10.

**சிங்கப்பூரில் இம் மாதம் 14-ம் திகதி ஆரம்பமாகும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கொந்தளிப்பு ஏற்படுமா? சர்ச்சைக்குரிய பல பிரச்னைகள் இம்மகாநாட்டில் கிளப்பப்பட்டு பிரதிநிதிகளிடையே காரசாரமான விவாதமும் கொந்தளிப்பும் ஏற்படலாமென அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.**

பிரிட்டன் தென்ஆபிரிக்காவிற்கு ஆயுதம் விற்பனை செய்வது இந்துமகா சமுத்திரத்தில் அமெரிக்கா தளமமைக்க ஆதரவு அளிப்பதுபோன்ற விடயங்களில் பல கறுப்பர்நாடுகள்கருத்து வேறுபாடுள்ளவையாயிருப்பதனால் இம்மாநாட்டில் பலகருத்துமோதல் ஏற்படக்கூடிய நிலைமை எதிர்பார்க்கப்படுகிறது.

தென் ஆபிரிக்காவிற்கு பிரிட்டன் ஆயுதம் விற்பனைத் தடுப்பதற்கு இதுவே கடைசிச்சந்தர்ப்பமாக இருக்கும் என தங்கானியா ஜனாதிபதி கூறியுள்ளார். பிரிட்டன் தொடர்ந்தும் தென் ஆபிரிக்காவிற்கு ஆயுதம் விற்பதென முடிவு செய்யுமானல் சாம்பியா, தங்கானியா போன்ற நாடுகள் சாம்ராஜ்ய நாடுகள்அமைப்பிலிருந்து வெளியேறக்கூடும். 1944-ம் ஆண்டு சாம்ராஜ்ய நாடுகளின் அமைப்பின் 18-வது மாநாடாகும் இது. 90கோடி மக்களைக்கொண்ட நாடுகளின் இம்மாநாடு இம்முறை உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இம்மாநாட்டில் இந்து மகாசமுத்திரத்தை அமைதிப் பிரதேசமாக்கக் கோரி இலங்கைப் பிரதமர் ஒரு தீர்மானம் கொண்டுவருவார்என எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ். திறந்தவெளி அரங்கில் பொங்கல்விழா

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தினல் திராவிட சிற்பமுறையில் புனரமைப்புச்செய்யப்பட்டுள்ள யாழ் திறந்தவெளியரங்கில் பொங்கல்தினத்தன்று மாலை பொங்கல்விழா சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது. இவ்விழாவுக்கு மாநகரசபை முதல்வர் திரு. தா. ச. துரைராசா தலைமைவகிப்பார், நாதஸ்வர கான கலாநிதி என். சோ. பத்மநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் யாழ் கலாஷேத்திர மாணவிகளின் நடனமும், கவியரங்கும் நடைபெறும்.

யாழ். நகரின்

கருமத்திலேயே கண்ணுயிருப்பவர்

ராஜா

செங்கோலோச்சும் ராஜா அல்ல; மக்கள் தேவையே தங்கள் தலையாய சேவை எனக் கொள்ளும் இவர்களே.

ராஜா கோர்ப்பரேஷன்

கொழும்பில் பிரபல ராஜா கோர்ப்பரேஷனின் புதிய 5வது கிளை இங்கே...

104; ஆஸ்பத்திரி ரோட்,

யாழ்ப்பாணம்.

இன்றே விஜயம் செய்து

உங்களுக்குத தேவையான

- ✶ பால் உணவுப் பொருட்கள்
- ✶ சாய்ப்புச் சாமான்கள்
- ✶ பலசரக்குச் சாமான்கள்
- ✶ பாடசாலை உபகரணங்கள்

இன்னும் பிறவற்றையும் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்று பூரண திருப்தியடையுங்கள்.

## பிரதமர் ஸ்ரீமாவோ புறப்பட்டுச்சென்றார்



(நமது நிருபர்)

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா நேற்றுப் பிற்பகல் 2 மணிக்குச் சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார். காமன்வெல்த்மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இவர் சென்றார். கட்டுநாயக்காவிலுள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்திலிருந்து பிரதமர் தமது கோஷ்டியுடன் புறப்பட்டுச் சென்றார்.

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு இம்மாதம் 14ந் திகதி சிங்கப்பூரில் ஆரம்பமாகிறது. இது 18வது மகாநாடாகும். பிரதமர் நான்கு தினங்களுக்கு முன்னதாகவே அங்கு போய்ச் சேருகிறார். அவர் அங்குள்ள வீடமைப்புத் திட்டங்களையும் நிறுவனங்களையும் பார்வையிடுவார்.

## உல்லாசப் பிரயாணிகளால் நாட்டுக்கு வருவாய் அதிகரிப்பு

(நமது நிருபர்)

இலங்கைக்கு உல்லாசப் பிரயாணிகளாய் வரும் வெளிநாட்டவர்களால் இலங்கைக்கு அந்நியச் செலாவணி, முன்னைய ஆண்டுகளை விட இவ்வாண்டு அதிகமாகக் கிடைத்திருப்பதாக உல்லாசப்பிரயாணிகள் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

1969-ம் ஆண்டு உல்லாசப் பிரயாணிகளால் கிடைத்த அந்நியச் செலாவணியை விட 32 சதவீதம் அதிகமாக 1970-ம் ஆண்டு அந்நியச்செலாவணி கிடைத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

அவ்வதிகாரி மேலும் தெரிவித்ததாவது: 1969-ம்ஆண்டு பெற்ற வருவாயைவிட 1970-ம் ஆண்டு 48 லட்சம் ரூபா அதிகமாகக் கிடைத்தது. இந்த ஆண்டில் ஜுலை மாதத்திற்கும் செப்டம்பர் மாதத்துக்குமிடையில் 9022 உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். இத் தொகை 1969-ம் ஆண்டுத் தொகையைவிட இரண்டாயிரம் அதிகமாகும் என்றார் அவர்.

வாடகைக்கு

பஸ்நிலைய முன்பாக

3,000 ச. அடி அளவுள்ள சகல வசதிகளுடன் கூடிய பரந்த மண்டபம் வாடகைக்குண்டு. வியாபாரம் நிர்வாகம் (Hall) அல்லது தொழிற்சாலை அமைக்கச் சிறந்த இடம்.

போன். 515

விபரம்
5 & 7, கிருன்ட்பஜார்,
யாழ்ப்பாணம்.

2717

# அரசியல் அரங்கு

# காமன்வெல்த் குடும்பத்துக்கு பெரிய ஆபத்து பிரிட்டிஷ் ராஜ தந்திரத்துக்கு ஒரு சோதனை

சென்ற வெள்ளிக்கிழமை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பெயரை 'பண்டாரநாயகா சர்வதேச விமானநிலையம்' என்று மாற்றிய விழா ஈழத்தின் சரித்திரத்திலே முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும்.

அந்த வைபவத்துக்கு, கனடாவின் ஹைகமிஷனரும், ஆண்டி அம்பலக் கிராம சபைத் தலைவர் முதலியவர்களும் வந்திருந்ததாகச் செய்திகள் தெரிவித்தன. ஆண்டி அம்பலக் கிராம சபை எல்லையில்தான் கட்டுநாயக்கா விமான நிலையம் இருக்கின்றது போலும். ஆண்டி அம்பலம் என்று அக்கிராமத்திற்கு ஏன் பெயர் வந்தது? கட்டுநாயக்கா என்பவர் யார்? என்று ஏதேதோ எண்ணங்கள் என் மனதில் ஓடின. இதைப் பற்றிச் சரித்திர மாணவர்கள் ஆராய்ந்து அறிவித்தால் பல ருசியான உண்மைகள் தெரியவரலாம்.

அது ஒருபுறமிருக்க, அந்த விமானத் தளத்திலே பிரிட்டிஷ் கொடியை, பிரிட்டிஷ் தற்காலிக ஹைகமிஷனர் கீழே இறக்கியதும் அச்சமயம் இலங்கையின் பிரதமராக இருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அவர்கள் இலங்கையின் கொடியை ஏற்றிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வைபவத்தைக்காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பிரதமர் கூறியதுபோல் அன்றுதான் இலங்கையின் அரசியல் சுதந்திரம் பூரணமாயிற்று. திருக்கோணமலை கடல் தளத்தையும், கட்டுநாயகா விமானத் தளத்தையும் அமைதியான முறையிலே இலங்கையிடம் கையளித்தது சரித்திரம் காணாத ஓர் அதிசயமாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அவ்விரு தளங்களும் இப்பகுதியில் உயிர் போன்றவை. எவ்வளவு ஆண்டுகளாகப் பாடுபட்டு அவர்கள் இதை அமைத்தார்களோ! என்றாலும் போர் எதுவுமின்றிச் சமுகமான முறையிலே, அவற்றை ஒப்புவித்தபோது அவர்கள் இலங்கையிடம் அவர்களது மனம் எப்படி இருந்திருக்கும்!

அந்த நிகழ்ச்சி முடிந்ததும், அங்கிருந்த ஒரு பிரிட்டிஷ் ஹைகமிஷன் அதிகாரியைக் கண்டேன். அவர் முகத்தில் சிறிதும் மகிழ்ச்சி இல்லை. முக்கியமான இந்தத் தளத்தை இழந்துவிட்டோமே என்ற வருத்தம் இருக்கத்தானே செய்யும். சரித்திரம் காணாதமுறையில் மிகப் பெருந்தன்மையுடன் பிரிட்டன் சாதித்த இக்காரியத்தை இலங்கை என்றும் மறவாதென்றும், இலங்கையின் அபிமானத்தையும், நல்லெண்ணத்தையும் இதன் மூலம் பிரிட்டன் ஈட்டிக் கொண்டுவிட்டதென்றும், இராணுவத் தளங்களைவிட, மக்களின் அபிமானம் பிரிட்டனுக்கு அதிக லாபகரமாக இருக்குமென்றும் அவருக்கு ஆறுதல் கூறினேன். உடன் அவர், கொழும்புத்துறைமுக அபிவிருத்தி வேலைக்கான பெரிய ஒரு 'கண்டிராக்டை' பிரிட்டனுக்குக் கொடுக்காமல், வேறோர் ஐரோப்பிய நாட்டுக்கு இலங்கை அளித்துள்ளதென்றும், பிரிட்டனிடம் நல்லெண்ணம் இருப்பதற்கு இது எவ்விதம் அத்தாட்சி ஆகும் என்றும் கேட்டு என்னை மடக்கினார். என்ன பதில் சொல்லுவதென்று சற்றே திகைத்தேன். இதற்கு வேறு முக்கிய காரணங்கள் இருக்கக்கூடுமென்றும், பல நாற்றாண்டுகளுக்குப் பின் அரசியல் சுதந்திரம்பெற்ற உணர்ச்சி வேகத்தில் சில தவறுகள் ஏற்படுவதும் சாத்தியமென்றும், போகப்போக எல்லாம் நன்மையாகவே முடியுமென்றும் ஒருவிதமாகச் சொல்லி சமாளித்தேன். என்னுடைய பதில் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை என்பது அவரது முகத்திலிருந்தே தெரிந்தது.

இதை இப்போது ஏன் நினைவுபடுத்துகிறேன் என்றால், பிரிட்டன் செய்த ஒரு மகத்தான நன்றியை நாம் மறந்துவிடக்கூடாதென்பதற்காகவே. இந்த இராணுவ விமானதளத்தை மீட்டு, இதை சர்வதேச விமானநிலையமாக இலங்கைப் பொதுமக்களுக்கு அளித்த பெரிய பண்டாரநாயகாவை இலங்கை எப்படி நன்றியுடன் போற்றுகிறதோ, அதேபோலநமக்கு சுமுகமான முறையில் உண்மையான பூரண சுதந்தரமளித்த பிரிட்டனையும் போற்றக் கடமைப்பட்டுள்ளோம். மனமொப்பி அவர்கள் இவ்விதம் செய்திருக்காவிடில், இராணுவ பலமற்ற நாம் இதைப் பெற்றிருக்க முடியுமா? பிரிட்டனுடன் நமக்குக் கருத்துவேற்றுமைகள் என்ன இருப்பினும், அவர்கள் செய்த பெரும் தன்மையை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

சிங்கப்பூரிலே இம்மாதம் 14-ந் திகதி முதல் 22-ந் திகதி வரை நடைபெறும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக நேற்று இலங்கை பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயகா பலமான ஒரு கோஷ்டியுடன் புறப்பட்டுச் சென்றிருக்கிறார். 32 நாடுகள் கலந்துகொள்ளும் இம்மகாநாடு பிரிட்டனுக்கு வெளியே ஓர் ஆசியநாட்டில் கூடுவது இதுவே முதல்தடவை. காமன்வெல்த்தையே கலைத்துவிடக்கூடிய உண்மையான ஆபத்து கனடிய பிரதமர் ஷபரி ட்ரூடோ எச்சரித்துள்ளதுபோல் இப்போது ஏற்பட்டுள்ளது. காமன்வெல்த்திலிருந்து விரட்டப்பட்ட தென்னாபிரிக்காவுக்கு ஆயுதங்களை விற்பனைசெய்ய பிரிட்டிஷ் பிரதமர் ஹீத் உத்தேசித்திருப்பதை காமன்வெல்த்திலுள்ள பெரும்பாலான நாடுகள் பலமாக ஆட்சேபித்துள்ளன. இவ் விஷயத்தில் பிரதமர் ஹீத் பிடிபிடிவாதம் காட்டுவாராயின் காமன்வெல்த்திலிருந்து இலங்கையுள்ளிட்டு பல நாடுகள் வெளியேறவேண்டிய நிலை ஏற்படக்கூடும். சில நாடுகள் காமன்வெல்த்திலிருந்து வெளியேறினாலும், காமன்வெல்த் நீடித்திருக்கும் என்றும் சவால் விடுகிறார். காமன்வெல்த்திலிருந்து இந்தியா உள்ளிட்டு ஆசிய ஆபிரிக்க நாடுகள் வெளியேறத் தீர்மானிப்பதாக வாதத்துக்காக வைத்துக்கொள்வோம். அந் நாடுகள் விலகிவிட்டால் காமன்வெல்த்திலே எவ்வளவுபேர் இருப்பர்? அதற்கு உலகில் என்ன சக்தியும் செல்வாக்குமிருக்கும்? தென்னாபிரிக்காவுக்கு ஆயுதங்களை விற்கும் விஷயமாக பிரிட்டிஷ் மந்திரிசபையிலேயே கருத்து வேற்றுமை இருக்கிறதாம். நிறவேற்றுமைக் கொள்கையைப் பிடிவாதமாகக்கடைப்பிடிக்கும் தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதங்களை எக்காரணம்பற்றியும் விற்பதாயின், அது மறைமுகமாக, அக்கொள்கையை ஆதரிப்பதாகவே கருதப்படும்.

பிரான்சும் தென்னாபிரிக்காவுக்கு ஆயுதங்களை அதிகம் விற்றிருப்பதாகவும், ரஷ்ய ஆபத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ளவே, தென்னாபிரிக்காவுக்கு ஆயுதங்களை விற்பதாகவும் பிரிட்டனின் சார்பாக சமாதானம் சொல்லக்கூடும்.

இதேகாரணம்கூறி, இந்து மகாசமுத்திரத்தில் ஒரு தீவிலே ஒரு பலத்த தளம் அமைக்க அமெரிக்காவுடன் பிரிட்டன் முன்வந்துள்ளது. இப்படிச் செய்வதால். இந்துமகாசமுத்திரப் பகுதியில் யுத்த ஆபத்து அதிகரித்து இலங்கை உள்ளிட்டு பலநாட்டு மக்களின் அமைதியும் கெடுமென்பதில் ஐயமில்லை. லுஸாகாவில் கூடிய கூட்டுச்சேரா நாடுகள், இது பற்றிப்பலமாகஆட்சேபித்து ஒருமனதாய்த் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. என்றாலும்இதற்கும்பிரிட்டிஷ்பிரதமர் செவிசாய்ப்பாரா என்பது மிகவும் சந்தேகம், இந்துமகா சமுத்திரத்தில் ரஷ்ய யுத்தக் கப்பல்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும், தங்கள் கப்பல் பாதைகளைப் பாதுகாத்துக்கொள்ள, புதிய தளம் அவசியமென்றும் பிரிட்டன் சொல்லுகின்றது. திருகோணமலை, கட்டுநாயகா கடல். விமானத்தளங்களை இழந்தபின், இப்பகுதியில் ஒரு மாற்று காவற்கூடம் தேவையென்று பிரிட்டிஷ் அமெரிக்க வல்லரசுகள் கருதுகின்றன. சிங்கப்பூர் மகாநாட்டில் இவ்விஷயம்பற்றியும் பலத்த தகராறு ஏற்படும்.

காமன்வெல்த் குடும்பத்தைக் கலைத்துவிடுவதுபெரிய காரியமல்ல. காமன்வெல்த்திலிருந்து பிரிட்டன் வெளியேற்றப்படும் நிலையும் ஏற்படலாமென்று அறிஞர் பெர்னாட்ஷா ஒருசமயம் வேடிக்கையாகக் கூறினார். அவ்விதமான ஒருநிலை இப்போது ஏற்பட்டுள்ளது. பிரிட்டன் தனது காமன்வெல்த் சகாக்களின் கருத்துக்களை மதிக்காமல், தன் சுயநலத்தில்மட்டும் குறியாக இருப்பின், காமன்வெல்த்திலிருந்து பிரிட்டனை வெளியேற்றவேண்டிய அவசியம் ஏற்படலாம். மக்களை வைத்துத்தான் காமன்வெல்த். அப்படிப் பார்க்கையில் இந்தியா, பாகிஸ்தான் முதலிய ஆசிய, ஆபிரிக்க நாடுகள்தான் காமன்வெல்த்தின் அத்திபாரம். அவ்விதமான ஆபத்து ஏற்படாமல் தடுத்துக்கொள்ள பிரிட்டனுக்குப் போதிய ராஜதந்திரமுண்டு என்றுநம்புவது மிகையல்ல.

**- பராசரன் -**

## -புதுமைதரச் சிரிக்கிறாள்-

[திருமலை அ. சந்திரன்]

சீர் எடுத்து சிறப்பெடுத்து
ஊர் சிறக்க உயர்வெடுத்து
யாருக்கும் பொதுவாக வருகின்றாள்-தைப்
பேரழகி புதுமைதரச் சிரிக்கின்றாள்!

வாழவழி அற்றதொரு
ஏழைமகன் நெஞ்சினிலும்
பாலைப்போல் இனிமைதரப் பூக்கின்றாள்-அவன்
பஞ்சம்தீர உறுதிதந்து காக்கின்றாள்!

மாடிமனை வீடுகளில்
மிகுத்திருந்த மகிழ்வையெலாம்
தேடிக்கொண்டு குடிசையிலும்சேர்க்கின்றாள்-ஏழை
சிரிக்கக்கண்டு தானுமதில் ஆர்க்கின்றாள்!

பட்டாடை கலகலக்க
பட்டாசு வெடிவெடிக்க
சிட்டாகும் சிறுவர்களை அணைக்கின்றாள்-தூய
அன்பாலே உயிரையெலாம் பிணைக்கின்றாள்!




திருக்கேதீச்சரப் புராணம்
ஆசிரியர்:சிவஸ்ரீ ச.கு.வைத்தீசுவரக்குருக்கள்
வெளியிடுவோர்:திருஞானசம்பந்த மடாலய பரிபாலனசபை,
வேலணை.

இன்றைய உலகில் மனிதனது நம்பிக்கைகள் விஞ்ஞானத்தின் அதி தீவிர போக்குடன் ஒத்திசைகின்றன. இந்த நிலையில் ஆன்மீக நம்பிக்கை கொண்டவர்களுக்கு. அருள்வழி காட்டும் பெற்றிமை ஊட்டக் கூடியதாக இந்நூல் யாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சிறந்த புராணத்தை வெறும் கல்வி அறிவுடையார் மட்டும் ஆக்கிவிட முடியாது. இறையன்பில் திளைக்கின்றவர்களால் தான் முடியும். இக்கருத்தை 'இத்துணைச் சிறப்பு வாய்ந்த இப்புராணத்தை சிவாகம உணர்ச்சியும், புராணங்களில் அளவிறந்த பயிற்சியும் இலக்கணஇலக்கிய முதிர்ச்சியும் சைவ சித்தாந்த அறிவும் திருமுறைகளிலே மிக்க பயிலவும் ஒருங்கமைந்து, கவிதா சாமர்த்தியமும் படைத்துத் தெய்வபக்தி கனிந்த ஒருவராலேதான் இயற்ற முடியும்' என்று அணிந்துரையில் திரு. சி.க. குறிப்பிடுவது வலியுறுத்துகின்றது.

'செல்வன் கழலேத்தும் செல்வமேசெல்வமே' என்ற ஞானப்பாலுண்ட சம்பந்தமூர்த்தி நாயனாரின் திருவாய் மொழிக்கமைய இந்நூல் பெருமானின் திருவடியைத் துதிக்கின்ற வாழ்க்கைக்குத் துணை செய்கின்றது.

சைவத்தில் தீவிர சிரத்தையும் நம்பிக்கையும் கொண்ட பெரியார்கள் இந்நூலைப் பல்லாற்றானும் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

திருக்கேதீசுரப் பெருமானின்பெருமையைப்புலப்படுத்தும் திருஞானசம்பந்த சுவாமிகள்தேவாரப்பதிகம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப்பதிகமென்பன இந்நூலுடன் இணைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியரின் பாடலுள்ளே விரவிக் கிடக்கும் அருஞ்சொற்களுக்கு பொருள் விளக்கமும் இணைக்கப்பட்டுள்ளமை படிப்பவர்க்கு வசதியாகவுள்ளது.

—இ.நா.

கலைக்குயில்
(கலை இலக்கிய இதழ்)
ஆசிரியர்: எம். எஸ். நாதன்.
விலைசதம்:25

கலைக்குயிலின் இரண்டாவது குரல் கிடைக்கப் பெற்றோம். தமிழுணர்வூட்டும் குழுவின்வெளியீடு இது என்பதை.

'சோலையிலே
குயில் கூவும்
ஒலியில் எங்கள்
சுதந்திரத்தின்
உயிர் மூச்சின்
ஓசை உந்தும்
ஆலையிலே
கரும்பினைப் போல
எனது மக்கள்
அவதியுறும் மலையகத்தின்
உயிர்ப்பை மீட்க' என்ற கவிஞர் சக்தி ஏ. பாலையாவின் கவிதை வரிகள் புலப்படுத்துகின்றன.

'கந்தனுடன் உள்ளம் கலந்த சுவைக் கணங்கள்' என்று தாட் தோன்றிக் கவிராயர், மறைந்த எழுத்தாளர் திரு. அ.ந. கந்தசாமியை நினைவூட்டி எழுதிய கவிதையும் கலைக்குயிலுக்குப் பொலிவூட்டுகின்றது. இ.நா.

# வையம் புரக்கும் வெய்யவனை வணங்கும் தையின் முதல் நாள்

தைப்பொங்கல் சூரியனை வணங்கிப் பொங்கலிடும் நற்றினம். சூரியனைப் பற்றி பல தோத்திர நூல்களும் இலக்கிய நூல்களும் புகழ்ந்து சொல்லுகின்றன. அவற்றுள் சிலவற்றை எடுத்துக்காட்டுதலே இச்சட்டுரையின் நோக்கமாகும்.

## இருள் பருகும் பரிதி

பகலைக் கொடுப்பது சூரியன். சூரியன் உதிப்பதைக் கண்டு பறவைகள், விலங்குகள் யாவும் மகிழ்ச்சியடைகின்றன. மக்களும் மகிழ்ச்சியடைகிறார்கள். நாகசர்ப்பம்போன்ற கொடிய பாம்புகளும், கொடிய விலங்குகளுமே பகலை வெறுக்கின்றன. ஆனால் இரவும் மக்களுக்கு தேவைதான். நித்திரை கொள்ளவும் அயர்ச்சி நீக்கவும் உதவுவது இராக்காலம். சூரியன் மறைவதன் மூலம் இராப் பொழுதையும் சூரியனே கொடுக்கிறான் என்பர் உரைகாரர். என்றாலும் இருள் அகற்றுதலே சூரியன் செய்யும் பயனுள்ளதும், பண்பு பொலிந்தியதுமாகிய செயலாகும். இதனையே "குடதிசை மாய்ந்து குணமுதற்றோன்றி பாயிருளகற்றும் பயன் கெழுபண்பின் ஞாயிறு" என்று பதிற்றுப் பத்தில் கூறப்பட்டுள்ளது. "அகலிருவிசும்பிற் பாயிருள் பருகிப் பகல்கான்றெழுதரும் பல்கதிர்ப் பரிதி" என்பது பெரும்பாணாற்றுப் படை.

## அரசரும் பரிதியும்

சிறந்த அரசர்களுக்குப் பல பண்புகள் தேவை. கண்ணோட்டம், கொடைமுதலிய நற்பண்புகளுடன் எல்லை கடவாத சினமும் தேவை. பகைவரை அடர்த்தற்கும் கொடியோரை ஒறுத்தற்கும் செங்கோல் செலுத்தும் அரசற்கு அளவான சினம் தேவை. இவ்வாறான அரசரின் சினத்தை சூரியனது தன்மைக்கு உவமையாகக் கூறுவர். "ஈண்டு நீர்மிசைத் தோன்றி இருள் சீக்கும் சுடரேபோல் வேண்டாதார் நெஞ்சுட்க வெருவந்த கொடுமையும்" என்பது கலித்தொகை. 'ஞாயிற்றன்ன வெந்திறலாண்மையும் திங்களன்ன தண்பெருஞ் சாயலும்" எனப் பாண்டிய அரசன் ஒருவனைப் புகழ்கின்றது புறநானூறு. திருமாலின் சிறப்பையும் மறக்கடுனையும் கூறுமிடத்து "நின வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள' எனப்பரிபாடல் கூறுகிறது.

## அருளும் அருக்கனும்

சூரியனது தன்மைகளை இறைவனோடும் அவரது தன்மையோடும் ஒப்பிட்டுக் கூறுதல் மரபு. சூரியனால் பயிர்கள் வளர்கின்றன. மழை பொழிகின்றது. இது விஞ்ஞானிகளும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இறைவனுடைய அருளே உயிர்களை வழிநடத்துகிறது. அவரவர் பூர்வவினைக்கேற்ப அனுபவங்களை உண்டாக்குகின்றது. எனவே சூரியனின் செய்கையை இறைவன் அருட் செய்கையோடு ஒப்பிட்டனர் பெரியோர்.

"பெருக்க நுகர்வினைப்
பேரொளியாய் எங்கும்
அருக்கன் என நிற்கும்
அருள்"

என்பது திருவருட்பயன்.

## ஞாயிறேய் முருகன்

முருகப்பெருமானது அழகினைச் சூரியனுக்கு உவமையாகக் கூறுவர். "ஞாயிறேய் நிறத்து நளினத்துப் பிறவியை" என்று பரிபாடல் கூறுகின்றது. காலைநேரத்தில் நீலக்கடல் மீதுஉதயமாகும் செஞ்ஞாயிற்றை, நீலமயில்மேற்றோன்றும் முருகப்பெருமானைக் கண்டார் நக்கீரர். மற்றோர் புலவர் மலைக்கு மேல் தோன்றும் உதயசூரியனை குமாரப் பெருமானைக் கண்டார். "குன்றெறிந்த கதிர்போல் மேனிக் குமரவேள்" என்பது அவர் வாக்கு.

## தாரகையும் சூரியனும்

காலை நேரம் சூரியன் உதிக்கின்றான். ஆகாயத்தில் உள்ள தாரகை எல்லாம் மறைந்து போகின்றன. இந்தக் காட்சியிலிருந்து மற்றோர் காட்சியை நமக்குக் காட்டுகிறார் மணிவாசகர். தேவர்கள் எல்லாரும் திருவண்ணாமலையில் உள்ள இறைவனை வணங்கச் செல்கிறார்கள். அவர்கள் தங்கள் பெருமைக்கேற்ப முடியணிந்து செல்கிறார்கள். முடியிலே நவரத்தினங்கள் பதிக்கப் பெற்றுள்ளன. அவை ஒளி வீசுகின்றன. ஆனால் அவற்றின் ஒளியெல்லாம் இறைவன்பேரொளியில் வீறடங்கி விடுகின்றன.

"அண்ணாமலையான் அடிக்
கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின்
மணித்தொகை வீறற்
றாற்போல்
கண்ணாரிரவி கதிர்வந்து
கார்கரப்ப
தண்ணாரொளி மழுங்கி
தாரகைகள் தாமகல"

என மணிவாசகர் பாடுகிறார்.

**— வ. குகசர்மா —**

## இறைவன் நடனம்

சூரியன் காலையில் கடலில் தோற்றுவதை சிவபெருமான் நடம்புரிய வானரங்கில் தோற்றியதுபோலிருந்ததெனக் கம்பர் கூறுகிறார். சூரியன்உதிக்கும்போது மாந்தர் யாவரும் வணங்குவர். அந்தணர் மறைபாடுவர். கின்னரர் இசைபாடுவர். சமுத்திர அலைகளின் சத்தம் மத்தளம்போல விளங்குகின்றது. இறைவன் சிவந்த திருமேனி சூரியன். கதிர்கள் அவரது சடை. ஆடும் அரங்கு வானம்.

"எண்ணரிய மறையினொடு
கின்னரர்கள்
இசைபாட உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும்
வேதியரும் கரங்குவிப்ப
வேலை யென்னும்
மண்ணுமணி முழவதிர
வானரங்கில்
நடம்புரிவா
னிரவி யான
கண்ணுதல்வானவன்கனகச்
சடைவிரித்தாலென
விரிந்த
கதிர்களெல்லாம்"

## மும்மூர்த்திகள்

வடமொழியிலே சூரியனதுதோத்திரம் ஒன்று, சூரியன் காலையில் படைத்தற் கடவுளாகிய பிரமதேவராக இருக்கிறார். மத்தியானத்தில் சிவபெருமானாக அதாவது சதாசிவமூர்த்தியாக விருக்கிறார், மாலையில் விஷ்ணுவாக இருக்கிறார் எனச் சொல்கிறது. எனவே மும்மூர்த்திகளாக சூரியனை வணங்கலாம்.

"பிரும்ம ஸ்வரூப உதயே
மத்யான் ஹேது ஸதாசிவ
அஸ்தகாலே ஸ்வயம்
விஷ்ணு:
த்ரயீ மூர்திர் திவாகர:

எனவே இச்சிறந்த தைப் பொங்கல் நாளிலே சூரியனை வணங்குவதன்மூலம் சகல தெய்வங்களையும் நினைத்து வணங்கும் பலனை அடைவோமாக.

---

சென்னை இசைவிழா

'ஒரு காதோட்டம்'

# புதிய வித்வத் பரம்பரை உருவாகிறது

தமிழ் நாட்டில் நூற்றுக்கணக்கான சங்கீத வித்வான்களும் வித்வாம்சினிகளும் இருக்கிறார்கள். பலப்பல வாய்ப்பாட்டுக்காரரும் வாத்திய விற்பன்னர்களும் இருக்கிறார்கள். இலைமறை கனிகளாக எத்தனையோ மேதைகள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே சென்னையில் ஆண்டுதோறும் நடக்கும் டிசம்பர் இசை விழாவில் பங்குபற்றுவதில்லை. காரணங்கள் பலப்பல. சென்னை நகரத்தில் மிகப்பிரபலமான மியூஸிக் அகடமி, தமிழிசைச் சங்கம், தென்னிந்திய நுண்கலைக் கழகம் முதலிய நாலைந்து சங்கீத சபைகளில் தான் இசைவிழாக் கச்சேரிகள் நடக்கின்றன. ஒவ்வொன்றிலும் தினமும் மூன்று சிறந்த கச்சேரிகள் நடந்த போதிலும் பத்துப் பன்னிரண்டு நாட்களுக்குள் திறமான வித்வான்கள் எல்லோருக்கும் இடம் அளிப்பது முடியாத காரியம். அது போக நேரில்போய் கச்சேரிகளைக் கேட்க முடியாதவர்கள் சென்னை வானொலி ஒன்றையே நம்பியிருக்கிறார்கள். வானொலியும் என்ன செய்யலாம்? எல்லாக் கச்சேரிகளையும் அது அஞ்சல் செய்வது முடியாத காரியம். சில வருடங்களுக்கு முன்பு சில கச்சேரிகளை ஒலிப்பதிவு செய்து வைத்து மறு நாட்களில் ஒலிபரப்பி வந்தார்கள். இப்பொழுது அந்த வழக்கமும் நின்றுவிட்டது. எல்லாமே நேரடி அஞ்சல்தான். ஆகையால் வானொலியில் வந்ததைத்தான் என் போன்றவர்கள் கேட்க முடிந்தது. முக்கியமான சில நிகழ்ச்சிகளை இரவு 9 1/2 மணிக்குப் பின் 11,12 மணிவரை அஞ்சல் செய்தார்கள். இதைக் கேட்டு ரஸிக்க எல்லோருக்கும் சமய சந்தர்ப்பங்கள் ஒத்துவர மாட்டா, எனவே இது மேலெழுந்த வாரியான ஒரு 'காதோட்டம்'.

பழைய சங்கீதப் 'புலிகள், எத்தனையோ மறைந்து போய் விட்டன. அரியக்குடியின் ஆத்மானந்த நாதத்தையும், மஹாராஜபுரத்தின் மர்மானந்த கீதத்தையும், மதுரை மணியின் மதுவானந்த மோஹனத்தையும், ஜீ. என். பி. யையும், செளடையாவையும், துவாரத்தையும், பாகவதரையும் இன்னும் பல மேதாவிகளையும் இனிமேல் கேட்க மாட்டோம். பதிலுக்கு ஒரு புதிய வித்வத் பரம்பரை உருவாகி வருவதைப் பார்க்கிறோம்.

இம்முறை இசை விழாவில் எனக்கு ஒரு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்து விட்டார் சீர்காழி கோவிந்தராஜன். அடாடா, இப்படிப் பிரமாதமாகப் பாடக் கூடிய மனிதன் இந்த சினிமாவுக்குள் ஏன் போய் தலையை மாட்டிக்கொண்டார் என்று தான் தோன்றியது! பணம் கலையை வென்று விட்டதற்கு இது ஓர் அத்தாட்சியா? ஆஹா என்ன திடகாத்திரமான சாரீரம், என்ன கணீரென்ற கார்வை, என்ன மணியான பிர்க்கா! கிட்டப்பாவுக்கு ஈடு கொடுக்கும் அந்த மதுரமான தீங்குரல் சிறிதுநேரம் என்னை ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தி விட்டது. ருத்ரப்பிரியாவுக்கு ஓர் உருவம் கொடுத்து, அழகு செய்து, மெருகு ஊட்டியது, ஒரு கற்பனாசித்திரம். சீர்காழி வருங்கால 'சீனியர்' வித்வான்களில் ஒருவராக விளங்குவாரென்பதில் சிறிதும் ஐயமில்லை.

அரியக்குடியின் சீடன் கே. வி. நாராயணஸ்வாமி கடந்த 25 ஆண்டுகளாகப் பாடி வருகிறார். இப்பொழுதான் பூரண பக்குவம் பெற்றுப் பொலிவுடன் திகழ்கின்றார். அசா

## "லாவண்யம்"

த்தியமான கற்பனையுடன் கூடிய சங்கதிகளும் பிர்க்காக்களும் அணுவேனும் பிசிறுபடாத அற்புதமான கமகப்பிடிகளும் கார்வைக் கோர்வைகளும் தீப்புனலாற்று வெடித்துத் தாற்வ போலநாதவெள்ளம் கொட்டியது அவரது பாட்டு. நன்னு பாலிம்ப'வின் நடையும் வேகமும் துடிப்பும் மனதைக்கொள்ளைகொண்டு விட்டன. கீரவாணி ராகத்தில் எத்தனை அழகுக் கோலங்கள் உள்ளனவோ அத்தனையையும் பிடித்து எழிலோவியமாக விளக்கிக் காட்டினார் நாராயணஸ்வாமி.

சண்டமாருதமெனப் புயலடிக்க நாகத்தை நடுங்க வைக்கும் இடிஇடிக்க, கண்ணைப் பறிக்கும் மின்னல் பொறிக்க, எலும்பைத் துளைக்கும் குளிரில் மழை சொட்டச் சொட்ட குடையுமில்லாமல் சிறிதுதூரம் நடந்து களைத்தபின் உஷ்ணம் ஊட்டும் அறைக்குள் வந்து நின்றது போலிருந்தது மதுரை சோமுவின் தோடி ராகாலாபனை முடிந்தவுடனே! 'சக்கைப்போடு' போட்டார் என்று சொல்வார்களே அதுதான். சோமு சொந்த சாகித்தியங்களும் போட ஆரம்பித்து விட்டார் போலத் தெரிகிறது. எப்படியிருந்தாலும் இன்றைய முன்னணி வித்வான்களில் சோமுவும் ஒருவர் என்பதற்கு சந்தேகமேயில்லை.

டி. கே. பட்டம்மாளும் எம். எஸ். சுப்புலட்சுமியும் பழைய பல்லவியைத்தான் பாடினார்கள். முந்திய காலத்து விநோதங்கள் ஒன்றுமில்லை மாமூல் பிரகாரம் இனிமேல் அவர்களிடம் புதுமையை எதிர்பார்ப்பது நியாயமில்லை,

ராகத்தின் ஆரம்பம், சஞ்சாரம், முடிவு எல்லாமே பிர்க்காவாக இருக்கவேண்டுமென்ற நினைவில் கர்நாடக சங்கீதத்தின் தனித்துவமான கமகங்களைப் புறக்கணித்து ராகலட்சணத்தைக் கெடுத்துவிடுகிறார்கள் ராதாவும் ஜெயலட்சுமியும். சிறிய உருப்படிகளை கச்சிதமாக அழகு சொட்டப் பாடுவதே இவர்களின் சிறப்பு. மேல் சஞ்சாரங்களில் பொய்ச் சாரீரமும் பிர்க்காவும் பேசுவது எம். எல் வசந்தகுமாரியின் சேர்க்கையினாலோ?

லால்குடி ஜெயராமன் மிகவும் அற்புதமாக வயலின் பக்கவாத்தியம் வாசிப்பார். ஆனால் ஸோலோ வாசிப்பில் அவர் சித்தி பெறவில்லை. சில பக்கவாத்தியக்காரர் கற்பனை செய்வதற்கு பாட்டுக்காரரின் தூண்டுதல் அவசியம் போலும்.


இன்றே வருக! நன்றே கொள்க!!

தங்க, வைர நகைகள்

வியாபாரத்தில்

முன்னணியில் நிற்கும் சிறந்த

நாணயமுள்ள ஸ்தாபனம்

ராணி

ஆபரண மாளிகை

224, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

மனேஜர்: A. KARAPUTUGALA.

# நமது நாட்டு பொருளாதார முன்னேற்றத்தின் சின்னம் கிழக்கிலங்கை காகித ஆலையே!

**ஆலையின் உற்பத்தி தொடக்கம், இன்று யாம் ஆலையினால் பெறும் நன்மைகள் பற்றியெல்லாம் புள்ளி விபரத்துடன் விளக்குகின்றது இக் கட்டுரை. ஆ—ர்**

**— ஆ. சிவநேசராசா —**

இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தில் மீன்பாடும் தேன்நாடு எனப் பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு காலத்தில் சந்தடியற்றுக் கிடந்த. மூற்றிலும் காட்டுப்புறம் போன்ற வேரர் சூழ்நிலையில் உயர்ந்து வானளாவி நிற்கும் புகைப் போக்கிகளும், நீண்டகட்டிடத் தொகுதிகளும், யந்திரங்களும், நூற்றுக்கணக்கான மனிதர்கள் உற்சாகமாக வேலைசெய்கையில் எழும் பல் வேறுஒலிகளுடனும் சக்கரங்கள்சுழல்வதால் ஏற்படும்இயந்திரங்களின் ஓசையுடனும் மைல் கணக்கும் நீளமான காகிதம் வெளிவந்தவண்ணமிருக்குமிடத்தை இரவில் நோக்குவோமாயின் சூழவிருக்கும் இருளின் நடுவே, நமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் நமக்கு நம்பிக்கை ஊட்டுவது போன்று பிரகாசிக்கும் வெளிச்சத்தில், எமது நாட்டின் உள்ள ஒரே ஒரு காகிதத் தொழிற்சாலையைக் காண்பீர்கள்.

இங்கேதான் நாளொன்றுக்கு 18 தொன் வீதம் ஆண்டொன்றுக்கு 5000 தொன் காகிதம் உற்பத்தி செய்யும் காகிதஆலை அமைந்துள்ளது. இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து சராசரி 1500க்கு மேற்பட்டோர் (மாதமொன்றுக்கு) இவ் ஆலையைப் பார்வையிட வருகின்றனர்.

வாழைச் சேனையிலிருந்து கொழும்பு வரையிலான வீதியை 36 மணித்தியாலங்களில் போர்த்திவிடக்கூடிய வேகத்தில் காகிதம் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. இது அனைத்தும் கழிவுக் காகிதத்திலும், வைக்கோலிலுமே உண்டாக்கப்படுகின்றது.

இது தன்னியக்கமாகக் கூடிக் கொண்டேவரும் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணிச் சேமிப்பை எடுத்துக்கொள்ளாதலை கிழக்கிலங்கை காகித ஆலைகள் கூட்டுத்தாபனத்தின் பெருமைகளில் ஒன்றாகும்.

## ஆரம்பம்:

வாழைச்சேனையிலுள்ள காகித ஆலை பல்வேறு தரங்களையும் சேர்ந்த 3,750 தொன்காகிதத்தை மட்டுமே வருடமொன்றுக்கு உற்பத்தி செய்யக்கூடியதாக நிறுவப்பட்டது. இதற்கு முன் சிலாபம் மாவட்டத்திலுள்ள சாக்காப்பள்ளியில் இதிலும் சிறிய ஒரு தொழிற்சாலை இருந்தது. இது மேலுறை இடுவதற்கான காகிதத்தை உற்பத்தி செய்யவே நிறுவப்பட்டது.

இவ் அனுபவத்தைக் கொண்டு வாழைச்சேனைக் காகிதத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. 1952-ம் ஆண்டில் இத்தொழிற்சாலையின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1955-ம் ஆண்டின் 19ஆம் இலக்க கூட்டுத்தாபனச் சட்டத்தின்படி இதன் நிர்வாகம் கிழக்கிலங்கை காகித ஆலைகள் கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

1956 செப்டம்பர் மாதம் 11-ந் திகதியன்று இத் தொழிற்சாலை உற்பத்தியை ஆரம்பித்தது. தொழிற்சாலையில் உற்பத்தி ஆரம்பித்த முதல் மூன்று வருடங்களில் மொத்தம் 2718 தொன் நிறையுள்ள காகிதமே உற்பத்தி செய்யப்பட்டது. இதனால் எவ்வளவோ நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் ஆரம்பிக்கப்பட்ட இத் தொழிற்சாலையின் மூலம் ஆண்டுதோறும் மிகுந்த நட்டம் ஏற்படலாயிற்று. தொழிற்சாலையை நிரந்தரமாக மூடிவிடுவதே உத்தமம்எனவும் சிலர் கருதினர். இவ்வாறு தொழிற்சாலையை மூடிவிடுவதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படக் கூடிய அதிக நட்டத்தைத் தவிர்க்க முடியுமெனவும் சிலர் அபிப்பிராயப்பட்டனர்.

## வெற்றிச்சரிதம்

வாழைச்சேனை காகித ஆலை அதன் பன்னிரண்டு கால வாழ்க்கையில் எத்தனையோ மேடு பள்ளங்களை அனுபவித்திருக்கிறது. இம் முயற்சி முன்கூறியதுபோல இலாபகரமாக இல்லாததால் இதனைக் கைவிட்டு விடவேண்டுமென 1958-ல் யோசனை கூறப்பட்டது. புதிய அதிபதிகள் சபையும் ஆலையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களும், தொழிலாளரும் ஒன்றுசேர்ந்து 1959-ல் ஆலையைத் தொடர்ச்சியாக இயக்கிய தன் விளைவாக அவ்வருடத்தில் 4,187 தொன் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டதனால் ஆலையின் ஆயுள் நீடிக்கப்பட்டது. 1956, 1957, 1958 ஆகிய மூன்று வருடங்களிலும் 3,024 தொன் காகிதம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டதென்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இத்தொழிற்சாலையில் ஆகக் கூடுதலான உற்பத்தியைப் பெறுவதற்காக தொழில் நுட்ப மாற்றங்களுடன் உற்பத்திப் பொருட்களை வேறுபடுத்திக் கொள்வதும் பகுத்தறிவிற்குரியதுமான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை கனேடிய ஆலோசகர்களின் கோஷ்டியொன்று சிபார்சு செய்த பிறகு மேற்கொண்டும் தொழில்நுட்ப அபிவிருத்திகள் ஏற்பட்டன. இச்சிபார்சுகள் என்பது லட்சம் ரூபா செலவில் நிறைவேற்றப்பட்டன. இத் தொழிற்சாலை இரவு பகலாக ஒய்ச்சல் இல்லாமல் வேலை செய்ய ஆரம்பித்தது.

விளைவுகள் எதிர்பார்த்தவைகள் அனைத்தையும் மீறிவிட்டன. 1966-இலும் 1967இலும் வருடாந்த உற்பத்தி 9.000 தொன்களுக்கும் அதிகமாகும்.

இன்று இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள மிகவும் வெற்றிகரமான கைத்தொழில் முயற்சிகளுள் வாழைச்சேனைக் காகிதத் தொழிற்சாலையும் ஒன்றாகும்.

## மூலப்பொருட்கள்

மரங்களிலிருந்தும் அவற்றைப் போன்ற இதர விவசாயப் பொருட்களிலிருந்தும் எடுக்கப்படும் நாரியற் பொருட்களைக்கொண்டு காகிதம் உற்பத்தி செய்யப்படுகிறது. வைக்கோல், கரும்பு பண்ணைகளிலிருந்து பெறப்படும் கழிவுப்பொருட்கள், பருத்திக் காம்புகள், மூங்கில், தேவதாரு வகைகள் கெட்டியான மரங்கள், ரப்பர் ஆகிய அனைத்தும் இலங்கையில் காணப்படுகின்றன. இவற்றுள் வைக்கோலே மிகவும் இலகுவில் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது.

வாழைச்சேனையைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் ஏராளமாகக் காணப்படும் இப்பொருள் மிகவும் மென்மையான எழுதுகாகிதமாகவும் அச்சுக்காகிதமாகவும் தயாரிக்கப்படுகிறது. உண்மையில் இது காகிதம் உற்பத்தி செய்யும் பல நாடுகளில் பெருமளவில் உபயோகிக்கப்படுகின்றது.

காகித உற்பத்திக்கும் பல இரசாயனப் பொருட்கள் தேவை. சோடாச்சாம்பல், கந்தகம், குளோறின், எரிசோடா, சீனுக்காரம், குங்கிலியம், மாப்பொருள், சைனுக்களி ஆகியவையே.

பொரலெஸ்கமுவாவிலுள்ள இலங்கை பீங்கான் பொருள் கூட்டுத்தாபனத்திலிருந்து சைனுக்களி பெற்றுக் கொள்ளப்படுகிறது.

குளோரீனும், எரிசோடாவும் பரந்தன் இரசாயனப் பொருள் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகிறது. பரந்தனில் உப விளைவுப்பொருளாகப் பெறப்பட்டு, சிலிண்டரில் அடைக்கப்பட்டுக் கொண்டு வரப்படும் குளோரீன் வாயு வைக்கோலை வெளித்தறப் பாவிக்கப்படுகிறது.

## காகிதத் தயாரிப்பு

வைக்கோலையும், இலுக் புல்லையும் ஒப்பிடும்பொழுது வெண்மையான காகிதம் செய்தற்குவேண்டிய அதிக பிரகாசமுள்ள காகிதக் கூழை வைக்கோலிலிருந்தே பெறமுடிகிறது. ஆனால் இலுக் புல்லிலிருந்து தயாரிக்கப்படும் காகிதக்கூழ் கூடிய வலிமையுடையதும், பயனுடையதுமாயிருக்கிறது. இதனாலேயே இவ்விரு பொருட்களையும் கலந்து தயாரிக்கும் முறையையும் உபயோகிக்கின்றனர்.


உற்பத்திக்குத் தேவையான வைக்கோலைப் பெறும்பொருட்டு வாழைச் சேனையிலும், அதைச்சுற்றியுள்ள இடங்களிலும்வைக்கோல் சேகரிப்புநிலையங்களை இக்கூட்டுத்தபானம் நிறுவியுள்ளது. இச் சேகரிப்பு நிலையங்களுக்கு விவசாயிகளால் எடுத்துச்செல்லப்படும் வைக்கோல், இடத்துக்கிடம் நகரும் நவீன பொதி செய்யும் இயந்திரங்களால் அந்நிலையங்களில் வைத்தே பொதி ( Parcel ) செய்யப்பட்டு, அங்கிருந்து மோட்டார் லொறிமூலம் தொழிற்சாலைக்குக் கொண்டுசெல்லப்படுகிறது. முன்பெல்லாம் இவ்வைக்கோலில் கால்நடைகளுக்குத் தீனியாகப் பயன்பட்டதுபோக பெரும்பகுதி வயலிலேயே தீக்கிரையாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இவ்வைக்கோலைத் தொன்னுக்கு 50/- வீதம் விற்றும் பெரும் பயனடைகிறார்கள் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள். கிழக்கு மாகாணத்திலும், அதைச் சுற்றிலுமுள்ள விவசாயிகள் 1967-ல் காகித ஆலைக்கு வைக்கோல் விற்பனை செய்ததன் பயனாகப் பத்து லட்சம் ரூபாவுக்கும் அதிகமாகச் சம்பாதித்தார்கள்.

இவ்வாறு பெறப்பட்ட வைக்கோலில் நாளொன்றுக்கு 30 தொன் காகிதத்தைப் பெறுவதற்காக 90 தொன் வைக்கோல் உபயோகப்படுகிறது.

பொதி செய்யப்பட்டுத் தொழிற்சாலைக்குக் கொண்டுவரப்பட்ட வைக்கோல், தூக்கிச்செல்லும் ஒரு பட்டையில் இடப்படுகிறது. இப் பட்டை இதனைச் 'சமைத்தற்காக' வெட்டுக் கருவியினூடாகச் செரிமானம் செய்யும் இயந்திரத்துக்கு எடுத்துச் செல்கிறது. இவ் வைக்கோல், வெட்டும் இயந்திரங்களால் 2 1/2 அல்லது 8 அங்குல நீளத்துண்டுகளாக வெட்டப்படுகிறது. இவ்வாறு வெட்டப்பட்ட வைக்கோல் சோடியஞ்சல்பைட்டு, கோஸ்ரிக்சோடா (எரிசோடா) போன்ற இரசாயனப் பொருட்களோடு கலக்கப்பட்டு, இதற்கென உள்ள விசேஷ அழுத்தப் பாத்திரமாகிய பிரமாண்டமான சுழலும்உருக்குப்பாத்திரங்களுக்குள் கொண்டு செல்லப்படுகிறது. இக் கலவை சுமார் 5 1/2 மணித்தியாலங்களுக்கு அவிக்கப்பட்டு கூழாக்கப்படுகிறது. இவ்வாறு தயாராகிய காகிதக் கூழ் வெளிறச்செய்யப்படுமுன் ராட்சத தொட்டிகளிலிடப்பட்டு. நன்கு கழுவ

(14-ம் பக்கம் பார்க்க)

## காகித உற்பத்தி 1956 - 1967




(கணக்கு விபரங்கள் யாவும் காகித ஆலையின் வெளியீடுகளிலிருந்து பெறப்பட்டன)

**காதல் என்றால் என்ன? சம்பிரதாய பூர்வமாகத் திருமணம் புரிந்து கொண்டால் மட்டும் அது நிறைவெய்தி விடுகிறதா? அவள் அவனைக் காதலித்தாள். ஆனால் அவன் அவளை விட்டு தொலைவுக்கே சென்று விட்டான். அவள் இன்னும் அவனுடன் வாழ்கிறாள் . . . . எப்படி?**

# 'பூமா'

"என் அன்பை ஏற்க உனக்குக்கூடப் பிடிக்காமல் போய்விடுமாம்மா; நீ கூட... எனக்குத் துரோகம் செய்து விடுவாயா...?"

பூமா தன்னை மறந்து பொங்கும் துயருடன் கேட்கிறாள். தேக்கிவைத்த துயரம் அணையுடைத்த தன் பிரதிபலிப்பு இது.

"என்னடி இது...?" பூமாவின் கரத்தை வெடுக்கென்று பற்றி தாபத்தோடு குரல்கொடுக்கிறாள் சாந்தா.

"ஒன்றுமில்லையடி...!" பூமா துன்பத்தினூடே சிரிக்க முயல்கிறாள். அவள் வார்த்தைகளில் தெறித்த கனதி சாந்தாவின் உள்ளத்தில் இறங்கிவிட்டாற்போன்று வேதனையில் சாந்தாவும் தேங்கிவிடுகிறாள்.

"அர்ச்சனை...!"

ஐயரின் நீட்டிய கரத்தில் பணத்தைக் கொடுத்த பூமாவின் இதழ்கள் மெல்ல அசைகிறது.

"ஆனந்தன் ...... புரட்டாதி......

பூமாவின் அருகே நின்ற சாந்தா வெடுக்கென்று தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்த பார்வையில் "என்னடி இன்னமுமா?" என்ற கேள்வி தொக்கி நின்றது. பூமா அவள் கையை உறுதியுடன் பற்றிக்கொள்கிறாள்.

"சாந்தா...அவரை என்னால் தனியாகப் பார்க்க முடியவில்லையடி!" இதயம் பொங்கிவிட அவள் கூறிய போது பூமா ஆனந்தன்மேல் கொண்டுவிட்ட காதல் என்னும் ஆணிவேர் ...சைக்க முடியாத தீவிரத்தை ஊட்டிவிட்டதை சாந்தாவால் உணர முடிகிறது ஐயர் நீட்டிய தீபத்தை அவனுக்குமாகச் சேர்த்துக் கண்களில் ஒற்றிக்கொள்கிறாள்.

"தாயே இது அவருக்கும் உரியதாகட்டும!" பூமாவின் வேண்டுதலில் அவள் நலமும் மகிழ்ச்சியும் தொக்கி நிற்கிறது. "என் மனசு உனக்குப் புரியுமம்மா. உன்னில் கொண்ட நம்பிக்கை தான் என்னை வாழவைக்கிறது. என் இதயத்தில் இருக்கும் அவரையும் சேர்த்து ஆசீர்வதியம்மா" என அவள் மானசீகமாக வேண்டி விழிகளை மூடியபோது அவள் இதயத்தில் இருக்கும் அவன் சிரசும் அவள் சிரசுடன் பணிகிறது. அவ்விக்கிரகத்தின் கரங்கள் உயிர் பெற்று ஆசீர்வாதமுடன் தூவும் மலர்கள் இருவரின் சிரசுகளிலுமே உதிர்வதுபோன்ற நினைவிலும் அவன்தான் முன்நிற்கிறான்.

ஆம். அவனைத் தன் ஆத்மாவுடன் பிணைத்து, நினைவுகளுடன்சங்கமமாகி அவனேதானாகிவிட்ட அவளால் அவனைப் புறம்புபண்ண முடியாது. அவளுடைய நினைவில் "அவனைப் பொறுத்தவரை கோபத்துக்கும், வெறுப்புக்கும் இடமில்லை. குளிர்ச்சியும் விருப்பும். கனிவும் அவனுக்காகவே அவள் படைத்துவிட்ட ஒன்று.

விபூதியை வாங்கி அவனுக்காகவும் அணிந்துகொண்ட திருப்தியில் அவள் ஆழ்ந்துவிட்டபோது சாந்தா மறுபடியும் தன்னை மறந்து கேட்டுவிடுகிறாள்.

"உனக்கு இதயமேயில்லையடி?"

"அது என்றோ அவரிடம் சேர்ந்துவிட்டது" என்று கூறவேண்டும்போல் பிறக்கும் சுகத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டுபூமா புன்னகைக்கிறாள்.

"சாந்தா, நீ ஏனடி இப்படிப் பேசுகிறாய்?"

"பூமா நீ ஏனடி இப்படி இருக்கிறாய்?"

"ஏன்டி பூமா. இன்னும் எத்தனை காலத்துக்கு இப்படியிருப்பாய்? கோவிலிலிருந்து புறப்பட்டதும் சாந்தா இப்படி ஒரு கேள்வியைப் போடுவாள் என்று பூமா எதிர்பார்க்காததால் திகைத்துவிடுகிறாள். திகைப்பு நீங்கி அவள் புன்னகை பூத்தபோது சாந்தா ஆதங்கம் பொங்க எரிந்து விழுகிறாள்.

"என்னடிஎதைக்கேட்டாலும் இந்தச்சிரிப்புத்தானா? பேசடி... வாயைத்திறந்து பேசு!"

"......" பூமாவின் மௌனம் அவளை வெறிகொள்ளவைக்கிறது. ஆனந்தனுக்கும் கல்யாணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறாள் தெரியுமோ?' சாந்தாவின் கேள்வி பூமாவைச் சிரிக்கவைக்கிறது. அவள் சிரிப்பினூடே கேட்கிறாள் 'அவள் எப்பா என்னிடம் படிக்கவருவாள்?'

பூமா எத்தனை அமைதியாகக் கேட்கிறாள். சாந்தாவால் பொறுக்க முடியவில்லை. அவள் ஆத்திரம் பொங்க மறுபடியும் கேட்டுவிடுகிறாள்.

'சீ...நீ என்னடி பெண்ணா? உனக்கு இதயமேயில்லையா?' சாந்தாவின் கேள்வி பாணமாகப் பூமாவின் இதயத்தில் ஊடுருவுகிறது. இதயப்பேழையில் பூட்டி வைத்த உணர்ச்சிகளெல்லாம் பிறிட்டுவிட்டாற் போன்ற தாக்கத்தில் அவள் துடித்து விடுகிறாள்.

'சாந்தா... சா...ந்...தா...! என்றபோது பூமாவின் ஒவ்வொரு நரம்பும் துடித்து நடுங்க, அவள் சட்டென நின்றுவிடுகிறாள். அவள் சாந்தாவைப் பார்த்த பார்வையில் அவளின் இதயத்துத் துன்பமத்தனையும் அப்பார்வையின்மூலமே தன் இதயத்துள் இறங்கி விட்டாற்போல் துடித்து விடுகிறாள் சாந்தா. பூமாவைத் தொடர்ந்து நடந்தபோது எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியும் பாறையாகக் கனக்கிறது

ஆரம்பத்தில் பூமா தன் மனத்தைத் திறந்து அவளிடம் கூறியபோது சாந்தாவைப்போல் மகிழ்ச்சியுற்றவர்கள் யாருமே இருக்க முடியாது.

'பூமா... பூமா... அவள் எத்தனை மென்மையானவள் அவளின் மென்மையான இதயத்தில் இப்படியொரு பேரதிர்ச்சி ஏற்பட வேண்டுமா? ஐயோ தெய்வமே அவள் நம்பிக்கை இப்படியா குலைய வேண்டும்?' சாந்தா இதயம் பதற நினைவுகள் தாக்க, நடந்தபோது இதயப்பேழையின் பூட்டைத் திறந்துவிட்ட உணர்ச்சிகளின் தாக்கம் அவளையே அதிரவைக்கிறது.

0 0 0

அன்றொருநாள்.........!

பூமாவைப் படத்துக்கு வரும்படி சாந்தா எத்தனை ஆசையோடு அழைத்தாள். அவள் எத்தனை ஆவலோடு கேட்டாளோ அத்தனை ஏமாற்றத்தோடு திரும்ப நேரிட்டதை இன்றும் நினைக்கும்போதும் பூமா கூறிய சொற்கள் இதயத்தைக் குடைகிறது.

'சாந்தா, அவரும் இதே கேள்வியைத்தான் கேட்டாரடி! எத்தனை ஆசையோடு எத்தனை நம்பிக்கையோடு கேட்டார் தெரியுமா...? என்னால் மறுக்கவும் முடியவில்லை. ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லையடி...' பூமா தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்னையில் மூழ்கிவிட்டாற்போல் வெளியை நோக்கியபடி பூமா கூறிய வார்த்தைகள் அவள் இதயத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

'சாந்தா, என்று முறையாக அவர் விருப்பத்தை நிறைவேற்றுகிறேனோ, அன்றுவரை படமே பார்ப்பதில்லையடி... சாந்தா...நீ ... என்னை மன்னித்துவிடு!' பூமாவின் குரலில் அன்று தொனித்த உறுதி இன்றுவரை குலையவில்லை. ஆனால் அவள் எதிர்பார்த்த அந்த நாள்... சாந்தா வேதனையுடன் பூமாவின் பின்னழகை ரசித்தபோது பூமாவின் கூந்தலில் இருந்த நெல்லியிலை அவளுக்கு எதையோ நினைவூட்டுகிறது.

பூமாவிற்கு மல்லிகையென்றால் உயிர். நிறையக் கோர்த்துத் தலையில் சூடுவதில் இனம்புரியாத இன்பம்! அவளுக்காகவே சாந்தா மல்லிகை மலர்கள் பறித்துக் கோர்த்துக் கொண்டு வருவாள். பூமாவின் நீண்ட கூந்தலில் சூட்டிவிடுவதில்—அவளின் அழகை ரசித்துத் திருஷ்டி கழிப்பதில் சாந்தாவுக்கும் ஓர் இன்பம்! வழக்கம்போல் அன்றும் கொண்டுவந்த மல்லிகை மலர்களைப் பார்த்ததும் பூமாவின் மலர் வதனம் வாடிவிடுகிறது. தலையில் சூட்டச் சென்ற அவள் கரங்களைப் பற்றிக்கொண்ட பூமாவின் விழிகள் சாந்தாவின் விழிகளைச் சந்திக்கத் தயங்கி நிலத்தை நோக்குகின்றன.

'மலர்களை அழகு பார்க்க வேண்டுமேயல்லாது தலையில் சூடுவது பாவமில்லையா எனக்கு அதுகொஞ்சம்கூடப் பிடிப்பதில்லை.' என்று அவர் கூறினாரடி. அவருக்குப் பிடிக்காதது எனக்கும் வேண்டாம் சாந்தா'' பூமா செஞ்சலும் உறுதியுமாகக் கூறியதுடன் மட்டும் நிறுத்தவில்லை. இன்றுவரை செயலிலும் காட்டியல்லவா வருகிறாள்.

இப்படி எதை எடுத்தாலும் பூமாவின் தீவிரமான அன்பு முன்னெழுந்து சாந்தாவைச் சிலிர்க்க வைக்கிறது. 'ஆண்டவனே இப்படிப்பட்ட அன்பு அழியலாமா? அன்பு அழியவில்லை. ஆனால் அவள் வாழ்க்கை அது அழிந்துவிட்டதே!'

சாந்தாவிடம் விடைபெற்று பூமா பூசைத்தட்டுடன் வீட்டினுள் நுழைகையில் தூத்தலாக இருந்த மழை பலக்க ஆரம்பிக்கிறது. இருண்ட வானத்தில் கரும்முகில்கள் பஞ்சுப் பொதியென மெல்லஅசைய

"நீலா"

சூரியனைச்சுற்றி வரம்பு கட்டியிருந்த வானவில் சிவப்பாய் மஞ்சளாய் நீலமாய நிறம் காட்ட, பனித்துளியாய் இறங்கும் மழையை முனபெல்லாம் இதயத்தே ...ங்கும் இன்ப உணர்வுடன் விழிகொட்டாமல் பார்ப்பாள் பூமா. அவள் நீண்ட நயனங்கள் அந்நேரங்களில் பட்டுப் பூச்சியாய்ப் படபடவென்று துடித்து மலரும்: இதயத்தே நிறையும் இதமான சிலிர்ப்பு அவள் சிவந்த முகத்தை வருடி மேலும் மலரவைக்கும். ஆம், பூமாவுக்கு மழையென்றால் நிரம்பவும் பிடிக்கும். 'சோ' வென்று கொட்டும் மழையில் தெப்பமாக நனைவதிலும் பார்க்க அமைதியாக ஓரிடத்தில் இருந்து மனதுக்குப் பிடித்த பாடலை அதரங்கள் இசைக்க, வாரடித்து வெள்ளிக்கம்பிகளாக குமிழிவைசத்து ஓடும் நீரைப் பார்த்துக் கொண்டிருப்பதில் இனம்புரியாத இன்பம் காண்பாள்.

இன்றோ......?

பூமாவால் எதையுமே ரசிக்க முடியவில்லை. சில்லென்ற காற்றின் வருடலில் பனித்த அவள் இதயம் மெழுகாகக் கரைந்து உருகி எதிலேயோ ஆழ்ந்துவிடத் துடிக்கிறது. ஆனால் அவள் எதிலே ஆழ முடியும்? எதிலே கரைய முடியும்? எதிலே சங்கமமாக முடியும்? பூமா தன்னை மறந்து தவிக்கிறாள்.

"சாந்தா... எனக்காடி இதயமில்லையென்றாய்? அது படும் வேதனையை என்னைத் தவிர யாரால் உணர முடியும்? மூடி மூடி உலகத்திற்கு மறைத்தாலும் எனக்கு மறைக்கவோ, என் இதயத்தை ஏமாற்றவோ என்னால் முடியவில்லையேடி!' பூமா விம்மி விம்மி அழுது விடுகிறாள்.

நம்பிக்கை...!

அது என்றோ அவளைக் கவிழ்த்துவிட்டபோதும் அவளால் அதைக் கைவிட முடியவில்லை. அதைப் பற்றிய நிலையில் அவள் உள்ளம் இன்னும் ஊசலாடுகிறது. அன்று அவனுடன் வாழவேண்டுமென்று துடித்தாள்: இன்றோ அவன் நினைவுடன் தன் காலம் முடிய வேண்டுமே என்று துடிக்கிறாள். ஆம், யாரில் நம்பிக்கை இழந்தபோதும் அவள் தன்னில் நம்பிக்கை இழக்கவில்லை.

ஆம், அவள் தன்னில் கொண்ட நம்பிக்கைதானே அன்று அவனுடன் எப்படியெல்லாமோ பேசவைத்தது. அவள் அவனுடன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் இன்றும் பசுமையாய் இதயத்தே நிற்கையில் அதற்கெல்லாம் காரணமான அவனோ...?

0 0 0

ஒருவருடத்திற்கு முன்...

வயிற்றிலே கட்டி காரணமாக அவள் ஆஸ்பத்திரியில் இருந்தபோது. அவள் பாடசாலைக்கு லீவு போட்டுவிட்டு எத்தனை நாட்கள் அவனருகே தவமிருந்தாள் அவனுடன் சேர்ந்து தானுமுண்ணாது அவன் நலனுக்காக விரதமிருந்து, அவன் பணியில் தன்னை மறந்து அவள் தவக்கோலம் பூண்ட போது, ஆனந்தன் கூறிய உருக்கமான வார்த்தைகள் இன்றும் அவள் இதயத்தில் அழியாமல் இருக்கையில் அவன் மட்டும்......

'பூமா..., நீயின்றி நானில்லை; நீயில்லாமல் என்னால் வாழமுடியாது என்ற நிலைமையை உன் தவத்தால் உண்டாக்கி விட்டாய். அப்படியொரு நிலைமையை உண்டாக்கிய நீ, எனக்கு முதலே போய்விடுவாய் போலிருக்கே பேசம்மா... போய் எனக்காகச் சாப்பிடம்மா. உன் நலனில்தானம்மா என் நலமேயிருக்கிறது.' அவன் வார்த்தையை மறுக்கமுடியாமல் அவள் சோற்றில் கை வைத்தபோது அவள் இதயம் மானசீகமாக அவனுக்கு முதலில் அர்ப்பணிக்கிறது. இன்றும் அது தொடர்ந்துவரும் போது அவன் வார்த்தை மட்டும்...!

எல்லாமே பொய் பொய் என்று கூறுவதுபோலத்தானே அவன் கடிதம் அமைந்தது. அக்கடிதத்துடன் அவன் அனுப்பியிருந்த அவன் போட்டோ அவளைப் பார்த்து நகைத்தது கூடப் பொய்யாகிவிடுமா?

பூமாவால் அன்று நம்பத்தான் முடியவில்லை 'அப்படியும் இருக்க முடியுமா? அப்படியும் நடக்க முடியுமா? அவர்கூட அப்படிச் செய்வாரா?' பூமாவின் உள்ளத்தே ஆழப்பதிந்துவிட்ட அவன்மேல் வைத்த நம்பிக்கை அவளைச் சிந்திக்க முடியாமல் தடுக்கிறது.

(12-ம் பக்கம் பார்க்க)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரீ சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

# தீ மிதித்தலின் வரலாற்றுப் பின்னணி

**கதிர்காமக்கந்தனின் பக்தர்கள் அண்மையில் சுகததாசா விளையாட்டரங்கில் முருகவழிபாடுசெய்து அரோகரா. அரோகரா என்று கோஷித்துக்கொண்டு தீ மிதித்தபோது, தீ மிதிப்புப் பற்றி டாக்டர் காளோ பொன்சேகா தந்த விஞ்ஞான ரீதியிலான கருத்துக்கெதிராக ஒரு கேள்விக்குறி தோன்றியது.**

தீ மிதிப்பதன் 'இரகசியம்' இரண்டே இரண்டுகாரணங்களிலேயே தங்கியுள்ளது என்பது டாக்டரின் வாதம். தீயின்மீது ஒவ்வொரு பாதமும் 0.3 செக்கனுக்கு மட்டுமே பதியும்படியாக நடக்கவேண்டும் என்பது முதலாவது கருத்து. இந்த வேகத்தைவிட மெதுவாக நடந்தால் பாதம் எரியுமாம். தீ மிதிப்பவரின் பாதத்தின் அடித்தோலின் தடிப்பு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு ஆறுதலாக ஒருவர் தீமிதிக்கலாம் இது இரண்டாவது கருத்து. இதன்படி மிருதுவான தோல் உடையவர்கள் தீயின் மீது ஓடலாமே அன்றி நடக்க முடியாது என்பது டாக்டரின் எண்ணம்.

ஆனால் முருகன் அடியார்களின் தீ மிதிப்பின் முடிவுகள் இக்கருத்துக்களை ஆதரிப்பனவாக இல்லை இந்த தீ மிதிப்பில் 'நடுவர்களாக' கலந்துகொண்ட எட்டுமருத்துவ நிபுணர்களின் அறிக்கையின்படி தீ மிதித்த நான்கு பக்தர்களின் பாதங்கள் தீயின்மீது 0.6 செக்கனுக்குப் பதிந்திருந்தன. இன்னும் அறுவரின் பாதங்கள் 0.5 செக்கனுக்குப் பதிந்திருந்தன? இவர்களின் பாதங்களில் எவ்விதமான தீக்காயமும் ஏற்படவில்லை. மேலும் இரு பச்சிளம் பாலகர்கள் (ஆறுவயது. ஏழு வயது). மிருதுவானபாதத் தோல் உள்ளவர்கள் 662 பாகை பரன்ஹைட் நெருப்பில் ஆறுதலாக நடந்தார்கள். இவர்களுக்குத் தீக்காயம் ஏற்படவில்லை.

இதுதான் தீ மிதிப்புப்பற்றிய கருத்துப் பரிவர்த்தனத்தின் இன்றைய நிலை. இந்தச் சூழ்நிலையில் தீ மிதிப்பின் வரலாற்றுப் பின்னணியை நோக்குவது சாலப் பொருந்தும். இதைப்பற்றிச் சுவையான பல தகவல்கள் உள்ளன.

இந்திய உபகண்டம், மலாயா, ஜப்பான், சீனா, பீஜி தீவுகள், தாஹித்தி சொசைற்றி தீவுகள், நியூசிலந்து, மொரீஷியஸ், பல்கேரியா, ஸ்பெயின் இன்னும் பல நாடுகளில் தீ மிதிப்பானது ஒரு சமயச்சடங்காகச் செய்யப்பட்டு வருகிறது. பிரித்தானிய கலைக்களஞ்சியம்தரும் ஆதாரம் இது. இதைவிட, புராதன கிரேக்கநாடுகூட தீ மிதிப்போடு சம்பந்தப்பட்டது என்றும் வரலாறு உண்டு.

கிரேக்க நாட்டைச் சேர்ந்த ஒரு வகுப்பினர் இன்றும் மேமாதத்தில் ஆண்டுதோறும் தீ மிதித்துவருகிறார்கள். இந்த வகுப்பினர் அனஸ்தினரைட் எனப் பெயர்பெறுவர் இவர்கள் கிரேக்கநாட்டின் வடபாகத்திலுள்ள லங்காடா என்ற கிராமத்தவர்கள். இந்த வழிபாடு முதன்முதலில் கிரேக்கநாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள அகாதாபொலிஸ் என்ற நகருக்கு அணித்தாக உள்ள கோஸ்தி என்ற கிராமத்தில் நடைபெற்றது. 1923-ம் ஆண்டு முதல் இம்மக்களின் இடப்பெயர்ச்சியோடு இவ்வழிபாடு மாஸிடோனியா பகுதிக்கும் பரவியது.

புனித புருஷர் கொன்ஸ்டன்டைனையும் அவரது அன்னையாகிய ஹெலினாதேவியையும் வணங்கும்முகமாகத் தீ மிதிக்கும் இம்முறையானது கிரேக்க நாட்டில் கிறிஸ்தவமதம் தோன்றுவதற்கு முந்திய காலத்தொட்டே இருந்துவருவதாகச் சொல்லப்படுகிறது.

தீ மிதிப்பு இங்கேதொடங்கியவிதம்பற்றி வியப்பூட்டும் வரலாறு ஒன்றுஉண்டு. பலநூற்றாண்டுகளுக்குமுன்பு அனஸ்தினரைட் மரபினர் வசித்துவந்த கருங்கடற் பிரதேசத்திலுள்ள ஒருகிராமத்தில் இச்சம்பவம் நடந்ததாம். ஒருநாள் இரவு கிராமம் தீப்பற்றிக்கொண்டது: தீக்கொழுந்துகள் அனஸ்தினரைட மரபினர் வழிபட்ட கோயிலுக்குப் பரவின அப்போது கோயிலிலுள்ள படிவங்கள் அலறும் சப்தம் கேட்டதாம் துணிச்சல்மிக்க சில கிராமவாசிகள் கொழுந்துவிட்டு எரியும் தீயினுள் தமது உயிரையும் துச்சமென மதித்துப் பாய்ந்துசென்று, படிவங்களைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்ததாகச் சொல்லப்படுகிறது.

இவ்வீரர்களின் உடலில் எவ்வித தீக்காயமும் காணப்படவில்லையாம், கொதிக்கும் தரையில் தணலினூடே நடந்துசென்ற அவர்களின் கால்களில்கூட கொப்புளங்கள் இருக்கவில்லையாம் இதன்காரணமாகவே ம் மரபினர் இத்தினத்தில் ஆண்டுதோறும் தீமிதித்து வருகிறார்கள்.

ஆர்கியனஸ்தினரிஸ் என்று அனஸ்தினரைட் மரபினரின் தலைவர் அழைக்கப்படுவார். இவரே தீமிதித்தலுக்குத் தலைமை தாங்குவார்,

தீ மிதிப்பு வைபவத்தன்று கிராமத்தின் ஒரு பொது இடம் சுத்தப்படுத்தப்படும். அடுத்து, பாதிரியார் புனித நீரை அவ்விடத்தில் ஊற்றி அதனைப் புனிதப்படுத்துவார்? தடித்த 'ஓக்' மரக்குற்றிகளைப்போட்டு அவ்விடத்தில் தீ வளர்ப்பர்

வாத்தியங்களின் ஒலி வானைப்பிளக்க, ஆர்கியனஸ்தினரிசும் அவர்களது மரபினர்களும் கொன்ஸ்டன்டைன், ஹெலினாதேவி ஆகியோர்களின் படிவங்களைத் தாங்கியவர்களாய்த் தீயை வலம்வந்து ஆடத்தொடங்குவர். இந்த நிலையில் தகதகவெனக் காய்கின்ற தீயின்மீதும் நடந்துகொண்டே ஆடத் தொடங்குவர். பலநேரம் தீயின்மீது நின்றுகொண்டே ஆடுவதும் உண்டு என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு தம்மை மறந்து ஆடும் பக்தர்களைக்கண்டு பரவசம் உற்ற நிலையில் இச்சடங்கினைப் பார்க்கவந்தவர்களும் தீயில் இறங்கி ஆடுவார்களாம்.

இவ்வாறு தீமிதிக்கையில் அவர்கள் பெருமூச்சு வாங்கும் சப்தம் ஏற்படுகிறது கிரேக்க மொழியில் அனஸ்தினஸோ என்றால் 'பெருமூச்சு விடுதல்' என்று பொருள் பெறும். ஆகவேதான் அனஸ்தினரைட் என்ற காரணப்பெயர் இம் மரபினருக்கு வழங்கி வருவதாகச் சொல்லப்படுகிறது.

தீயின்மீது இப்படி நின்று ஆடுகின்ற பக்தர்கள் 'தர்மத்தை நிலைநாட்டுங்கள். இன்றேல் ஆண்டவனின் கோபத்துக்கு உள்ளாவீர்கள்' என்று மனமுருகிக் கூறுவார்களாம். எனவே இத் தீ மிதிப்பு வைபவம் சமயத்தை மட்டுமல்ல— நீதியை, நெறியை. தர்மத்தைக்கூடப் புகட்டுவதாகச் சொல்லப்படுகிறது.

இதன்பின்னர் இவர்கள் மாதாகோவிலுக்குச்சென்று வழிபடுவர். பிரார்த்தனையின் பின்னர் கறுப்பு நிறக் காளைகளின் தலையில் சிலுவைச் சின்னத்தைப் பொறித்து அவைகளைப் பலியிடுவார்களாம் இவ்வாறாகத் தீ மிதிப்பு வைபவம் எட்டுநாட்களாகத் தொடர்ந்து நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது

தீ மிதிப்பு வைபவம் பற்பல முறைகளை அனுட்டித்து நடப்பதாகப் பிரித்தானிய கலைக்களஞ்சியம் தகவல் தருகிறது. சாதாரணமாகத் தணலின்மேல் நடப்பதைவிடப் பல முறைகள் உண்டாம் கொழுந்து விட்டுக் கட்டைகள் எரிகின்ற நெருப்பினூடாக பக்தர்களும் அர்ச்சகர்களும் சில வேளைகளில் நடப்பார்கள். பிஜீ, மொரீஷியஸ் தீவுகளில் தணலுக்குப் பதிலாகச் செந்நிறத்தோடு தகதகவென்று அனலாய்க் காய்கின்ற கற்களை உபயோகிப்பார்களாம், இன்னும் சில இடங்களில் நெருப்புத் தணலைத் தலையிலே கொட்டிக் குளிப்பதும் உண்டு. எரிகின்ற தீப்பந்தத்தினால் பக்தர்கள் தமது உடலை அடித்துக் கொள்வார்கள்.

'தீக்காயங்கள் ஏற்பட்டாலும் இவை நாம் எதிர்பார்ப்பதைவிட எவ்வளவோ குறைவான சந்தர்ப்பங்களில்தான் ஏற்படுகின்றன அதிலும் குறிப்பாக அடியார்கள் தீமிதிப்பதற்கு முன் தமது உடலைப் பாதுகாக்க எவ்வித செயற்கைத் தயாரிப்பையும் பூசுவதில்லை இதற்கு விளக்கம் இல்லை' என்று பிரித்தானியக் கலைக்களஞ்சியம் கூறுகிறது;

இதைவிட இந்நூல் உலகின் பல பாகங்களில் நடைபெற்றுவந்த 'அக்கினிச் சோதனைகள்' பற்றியும்கூறுகிறது இராமாயணத்தில் சிதை இராவணனிடத்திலிருந்து மீட்கப்பட்ட பின், தனது கற்பை உலகிற்கு நிலைநாட்டுவதற்காக 'தெய்வங்காள்! உங்களை வணங்குகிறேன்! மகரிஷி கணங்களே உங்களை நமஸ்கரிக்கிறேன்! அக்கினியே என் பரிசுத்தத்தை நீயறிவாய் இதோ உனக்குள் பிரவேசிக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு கொழுந்து விட்டெரியும் தீயில் குதித்து விழுந்தும் எரியாமல் விளங்கியதும் இங்கு கூறப்பட்டுள்ளது.

ஐரோப்பிய சட்டங்களிலும் இதிகாசங்களிலும் சார்ள்ஸ் தஃபாட் என்பவரின் மனைவியான றிச்சார்டிஸ் தான் குற்றமற்றவன் என்பதை நிலைநாட்ட மெழுகு பூசப்பட்ட ஆடை அணிந்து நெருப்பினூடாக நடந்தாள் என்று கூறப்படுகிறது. தீக்கொப்புளங்கள் எதுவும் ஏற்படவில்லையாம்.

பழைய ஜேர்மனியிலும் இங்கிலாந்திலும் மத்திய காலத்தின் ஆரம்பத்தில் விளங்கிய சாதாரண சட்டமுறை, குற்றஞ்சாட்டப்பட்டவர் வெறுங்காலோடு பழுக்கக் காய்ச்சிய ஒன்பது கொழுக்கள் மீது நடந்து தனது குற்றமின்மையை நிரூபிக்கவேண்டும் என்பதே. இதற்கேற்ப நடந்த சம்பவம் ஒன்று பற்றிச் சொல்லப்படுகிறது. எட்வர்ட் த கொன்ஃபெசர் என்பவருடைய தாயான எம்மா இராணியின் செஸ்டரினுடைய அல்வின்மேற்றிராணியாருடன் உறவு கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது. புனித புருஷர் சுவித்தின் அருளுடன் ஒன்பது பழுக்கக் காய்ச்சிய கொழுக்களின்மீது எரிகாயம் ஏற்படாது நடந்து தனது குற்றமின்மையை நிலைநாட்டினாள். இந்த ஒன்பது கொழுக்களின் நினைவாக வின்செஸ்டர் தேவாலயத்திற்கு அவள் ஒன்பது பிரபுக் கிராமங்களை வழங்கியதும் கூறப்பட்டுள்ளது.

(14-ம் பக்கம் பார்க்க)

**— க. இந்திரகுமார் —**

# பஞ்சாமிர்தம்

## மானிட தர்மம்

**ம**னிதன் மனிதனுக்கு சொந்தமானவன். மனிதர்களுக்கு மனிதனை நடந்து கொள்பவன் பாக்கியவான். கண்ணைத் திறந்து பாருங்கள். வேறு கதியற்றதாய், அனாதையாய், துணையற்றதாய் தனிமையில் துன்புறும் எத்தனையோ ஜென்மங்களை சுற்றிலும் காணலாம் ஒரு ஆறுதல்வார்த்தை, சில நிமிடக் கூட்டுறவு. ஒரு சிறிய சரீர உதவி- எதுவோ முடியுமானதை செய்யுங்கள் மனித குலத்துக்கு நீங்கள் செய்யும் இத்தொண்டின் பலாபலனை நீங்கள் அறிய மாட்டீர்கள். அது மறை பொருளாகவே இருக்கும்.

—அல்பேர்ட் ஷ்வெயிட்ஸர்

## அவர் எழுதிய தமிழ்

இப்படிச் சில நிமிஷம் முழங்கியபின் உடுக்கைக்காரர், 'டிங்கினனே, டிங்கினனே, டிங்கினனே' என்று சொல்லி ஆலாபனம் செய்யத்தொடங்கி விட்டார். ஜனங்களெல்லோரும் சந்தோஷஆரவாரம் செய்தனர். அவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் மட்டும் அந்த சந்தோஷத்தை அனுபவிக்கக் கொடுத்துவைக்கவில்லை. மேடையில் நடந்த கதை பாரதமென்று 'பீமசேன மவாராசா' என்ற சத்தத்தால் அறிந்தேன். அதற்குமேல் நான் கேட்ட முழக்கங்களின் பொருள் எனக்கு விளங்கவில்லை. கதை ஒரு வகையாக முடிந்ததென்பதைக்கூட்டம் கலைந்ததனால் அறிந்துகொண்டேன். வரும்பொழுது ஒருவரோடு பேசிவருகையில் பிரசங்கியார் சொன்ன வாக்கியம், 'ஒரு யானையை அடிப்பதற்குப் பீமசேனன் மரத்தைப் பிடுங்கினான்' என்பதென்று தெரியவந்தது.

உ. வே. சாமிநாதையர்

## போத்தல் யாத்திரை

1784-ம் ஆண்டு ஜப்பானிலிருந்து புறப்பட்ட ஒரு கப்பல் பசுபிக் சமுத்திரத்தில் கள்ளப் புதையல்களை தேடித்திரிந்து அலைந்துவிட்டு கடைசியாக முன்பின் தெரியாத ஜனசஞ்சாரமற்ற தீவொன்றின் பாறைகளில் மோதி படுசேதமுற்றது. அதிலிருந்த மாலுமி ஒருவன் தங்கள் அவலமான நிலைமையை ஒரு சிறு மரத்துண்டில் எழுதி அதை ஒரு போத்தலுக்குள் திணித்து கடலில் வீசினான். ஒன்றரை நூற்றாண்டுகள் கழித்து 1935-ம் ஆண்டு அந்த போத்தல் கண்டெடுக்கப்பட்டது. போத்தல்களில் செய்திகளையும் தகவல்களையும் அடைத்து கடலில் விடும் வழக்கம் வெகுகாலமாக இருந்து வருகிறது. போத்தல்கள் வருடக்கணக்காக பல்லாயிரம் மைல்கள் கடல்பிரயாணம் செய்தபின் எங்காவது ஓரிடத்தில் கரைசேரும். 2447 நாட்களில் உலகத்தையே வலம்வந்த ஒரு போத்தல் சமீபத்தில் அவுஸ்திரேலிய கரையோரம் மிதந்தது. சமுத்திர நீரோட்டம், மீன் கூட்டங்களின் நிலைப் பெயர்ச்சி முதலியவற்றை ஆராய்ச்சி செய்யும் கடல் விஞ்ஞானக்கழகங்கள் பல வெவ்வேறுமொழிகளில் வினாக்களை எழுதி அவற்றை போத்தல்களில் அடைத்து கடலில் விடுவதுண்டு. கண்டெடுத்தவர்கள் கண்டெடுத்த இடம், காலம், நேரம் முதலிய விபரங்களுடன் மேற்படிகழகங்களுக்குதிருப்பி அனுப்பினால் அவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படுகிறது. சிலர், பேனா நண்பர்கள் தேடுவது போல, தங்கள் பெயர் விலாசங்களை போத்தல்களில் அடைத்து கடலில் விடுவதுமுண்டு.

## நாக்கின் நிறை ஒரு யானை

இப்பூமியில் வாழ்ந்த பிராணிகள் எல்லாவற்றிலும் மிகப்பெரியது நீலத்திமிங்கலம். இது இப்பவும் வடதுருவத்தில் வசிக்கிறது. இதன் நீளம் 100 அடி. நிறை 120 தொன். அதன் நாக்கு மட்டும் ஒரு யானையின் எடை. பத்துலட்சம் வருடங்களாக நீலத்திமிங்கிலம் வாழ்ந்துவருகிறது. ஒரு பிராணியின் கொழுப்பை உருக்கி 20 தொன் எண்ணை எடுக்கலாம் யுத்த காலத்தில் இதன் இறைச்சியையும் மனிதர்கள் சாப்பிட்டார்கள்.

## வேண்டாம் அவமானம்

டாக்ஸிக்காரருக்கு சந்தோஷமாக பத்துச்சதம் 'டிப்' கொடுத்தார் பிரயாணி. 'இதென்ன பத்துச்சதம்? இது என்னை அவமதிப்பது போலல்லவா இருக்கிறது' என்றார் டாக்ஸிக்காரர். இன்னும் எவ்வளவு வேண்டும் என்றார் பிரயாணி இன்னும் ஒரு பத்துச்சதமாவது வேண்டும் என்றார் டாக்ஸிக்காரர்.

'சேச்சே, உன்னை இரண்டுதரம் அவமதிக்கப்படாது' என்று சொல்லி நழுவினார் பிரயாணி.

— தயாரிப்பு: வழிப்போக்கன்


# ஞான வாழ்வை மக்களுக்குப் போதிக்கப் பிறந்த கன்னி பெற்ற கடவுள்!

யாழ். மாநகர சபை மண்டபத்தில் கலைமணி, வண பிதா நீ. சவிரிமுத்து அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள திருமறைக் கலா மன்றத்தினர் 'கன்னிபெற்ற கடவுள்' என்னும் இசை உரை நாடக சித்திரத்தை மேடையேற்றம் செய்திருந்தனர். ஆதாம் ஏவாள் கட்டிக்கொண்ட பாவத்தின் நிமித்தம் மேலும் மேலும் மனிதர்கள் கட்டிக்கொள்ளும் பாவப் பிணைப்பைத் தகர்த்தெறிந்து ஞான வாழ்வை மக்களுக்குப் போதிக்கப் பிறந்த உலக உத்தமர் கிறிஸ்துவின் ஆரம்ப வரலாறுதான் 'கன்னி பெற்ற கடவுள்' இசை உரை நாடகச் சித்திரத்தின் கருவூலம். இந்நாடகத்தை எழுதி நட்டுவாங்கம் செய்தவர் கலைமணி வண பிதா. நீ. சவிரிமுத்து அவர்கள். கதை தெரிந்த கதை. கதை அம்சம் ஓரளவு சரியாக அமைந்திருக்கிறது. ஆனால் சம்பாசனையிலே இன்னும் ஒரு விறுவிறுப்பும் அர்த்த புஷ்டியும் சொல் சிக்கனமும் பொதுவாக வேண்டும். சில இடங்களில் சம்பாசனை எதுகைமோனை உருக்கொண்டு பாத்திர இயல்பை பரிகசிக்கச் செய்கிறது.

உயர்வு காட்டாமல் சப்பென்று இருக்கின்றது. இந்நாடகம் மேல்நாட்டு நாடக உத்திமுறைகளைப் பின்பற்றியவை காட்சியின்பின் காட்சியாக அடுக்கி வரும் இருபது முப்பது சீன்கள் கிடையாது. பூரண சந்திர பிம்பம் தோன்றும் வான நிர்ணயிப்பும் அழகிய தோட்டமுமே நாடக ஆரம்பத்தின் களம். ஒரே களம் தான். கதாபாத்திரங்கள் குறிப்பிட்ட இடத்தில் சமயத்திற்கு வந்துபோய் கதை முன்னேற்றத்திற்கு, வளர்ச்சிக்கு உதவக்கூடிய வகையில் தம் சம்பாசனைமூலம் கருத்துக்களை ஓடவிட்டு கதைத்தொடர்ச்சி ஏற்படுத்தி செல்லுகிற உத்தி கையாளப்பட்டது. பல காட்சிகளில் நிகழும் சம்பவங்களை அடுக்கிச் சம்பவங்களாகத் தராமல் நிகழ்கிற காட்சியில் அவை பற்றிய தகவல்களை இசை உரையின் மூலம் கொடுத்து கதையின் முன் நிகழ்ச்சிக்கும் பின் நிகழ்ச்சிக்கும் ஒரு தொடர்பு ஏற்படுத்துகின்றவகையில் கதை முழுமை பெறச் செய்வதற்கு இந்த உத்தி, இது நமக்குப் புதிது. இந்த உத்தி கையாளப்பட்ட முறையில் சிறு பிசகு என்னவெனில் திரை அடித்து இதே களத்தில் வேறு அழகிய காட்சிப் பொருட்கள் திடீரென வைக்கப்பட்டமை ஸ்தூலமாக சம்பவங்களை காட்சி நிகழ்ச்சிகளாகத்தான் நமக்கு வழக்கம். அதனால் இம்முறை கையாளப்பட்டிருக்கலாம். இது தவறு. இந்நாடகத்தில் வேறொரு விசேஷம் என்னவென்றால் வரலாற்றுத் தொடர்புமிக்க கிறிஸ்துவின் பிறப்புக் காட்சி நிகழ்கின்ற வேளையிலும் முன்பும் தற்காலத்தில் நடமாடும் மனிதர் சிலர் களத்துள் புகுந்து இசைஉரையின் மூலம் தங்கள் சங்கதிகளைப் பார்வையாளருக்கு அறியப்படுத்தினர். இது நாடகம் பார்ப்போரை நாடகக் கருத்தையும் நோக்கையும் அறியவைக்கக் கூடியதாக இருந்தது. இந்தமுறை எமது ரசிகர்களுக்கு ஒரு புது அனுபவம்தான். நடிப்பைப் பொறுத்தவரையில் ஆதாமாகத் தோன்றிய பாபு பாத்திர இயல்பு குன்றாது இசைக்குரிய பாவம் பிசகாது முழுமையாகத் தமது பாத்திரத்தை ஒழுங்குபடுத்தினார். ஏரோதனாகத் தோன்றிய ரீ. பிலிப் தமது வசனங்களை பாத்திர இயல்புக்கேற்ப உணர்ச்சிபொங்கி ஆவேசத்துடன் பேசுவதும், முக அபிநயங்கள் செய்வதும் நன்றாக இருந்தது. ஆனால் இவரது பின்னைய மனமாற்ற நடிப்பு எதிர் பார்த்த அளவு சோபிக்கவில்லை. சோகத்தைக் கொட்டிக் கண்ணீர் சிந்த வேண்டிய இடத்தை மிகச் சாதாரணமாகத்தான் செய்கிறார். ஏவாளாகவும் கன்னி மரியாளாகவும் தோன்றிய சுபா அருள்ராஜா பெண்ணுக்குரிய அசல்தோற்றத்துடன் தமது கைவந்த முகபாவ அபிநயங்கள்மூலம் தமது பாத்திரங்களை பூரணத்துவப்படுத்தினார். கன்னி மரியாள் பாத்திரம் இவரது நடிப்புக்கு ஒரு உச்சஸ்தானத்தைக் கொடுத்தது. மூவிராசாக்களாகத் தோன்றிய கி. யேசுராசா, கி. அன்ரன், ஜெனம் ஆகியோர் ஒருமித்துத் தோன்றி நன்றாகச் செய்திருப்பினும் பாத்திரச் சிறப்பின் காரணமாக ஜெனம் என்பவரின் நடிப்புக் குறிப்பிடக் கூடியதாக இருந்தது. பாத்திரக் குண இயல்புகளை தமது நலைசிறந்த நாட்டியத்தின் மூலம் சித்தரித்த திரு.வேல் ஆனந்தன் உண்மையில் ஒருநாட்டிய சிகாமணிதான். மற்றும் நடிகர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் பாத்திரங்களை உணர்ந்து செய்தனர்.

வேறு அலங்காரங்களை ஒப்பனைத்திலகம் கி. துரைராசா, ஸ்ரனில்லாஸ் ஆகியோர் ஏற்று மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர். இசை ஒலி, ஒளி எல்லாம் நன்றாகக் கையாளப்பட்டிருந்தன. மொத்தத்தில் பல தரப்பட்ட கலைஞர்களின் ஒத்துழைப்புடன் வெற்றி பெற்ற இந்நாடகம் தமிழ் ரசிகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

—பொன்:பொன்ராசா



கட்டடக் கலைஞர் திரு. ரீ. எஸ். துரைராஜாவினால் தயாரிக்கப்பட்டு வரும் 'குத்து விளக்கு' என்ற தமிழ்ப் படத்தில் செல்வி. லீலா நாராயணன் இப்படித் தோன்றுகிறார்.

# கலை அரங்கம்

## வளரும் கலை மன்றங்கள்

### புத்தூர் அற்புதாலயா

பிரபல சித்திரக் கலைஞர் எம்; அற்புதசிங்கத்தின் அயராத உழைப்பின் சின்னமே 'புத்தூர்' அற்புதாலயா கலா மன்றமாகும். கொழும்பு சினிமாஸ்லிமிட்டட்டில் சித்திரக் கலைஞராகப் பணியாற்றிவரும் திரு. அற்புதசிங்கம் நாடகக் கலைஞராவர். இவர் 'இன்பநாள்', 'இழந்தகாதல்', 'தங்கையின் வாழ்வு', 'மனிதவலை', 'பெற்றமகளைவிற்றதந்தை', 'நெஞ்சில் ஓர் முள்' முதலிய நாடகங்களைத் தயாரித்து டைரக் செய்துஇருக்கிறார். இந்த நாடகங்களின் மூலம் கலையுலகில் புகுந்த திரு.அற்புதசிங்கம் பல பாராட்டுப் பத்திரங்களையும், பரிசில்களையும் பெற்றுள்ளார்.

தற்பொழுது இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் திரு. கே. எம். வாசகர் எழுதிய 'கலையும் கண்ணீரும்' என்னும் நாடகத்தை நடாத்தி வருகின்றார். 'ஈழநாடு' நடாத்திய தீபாவளிக் கலை விழாவுடன் 33-வது மேடையேறிய 'கலையும் கண்ணீரும்' பல நாடகப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப்பெற்று மக்களின் அமோக பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. கலையும் கண்ணீரையும் பொறுத்தமட்டில் 'புத்தூர் அற்புதாலயா' கலா மன்றத்திற்கு இது ஒரு வெற்றியென்றே கூறவேண்டும். அத்துடன் கலைஞர் அற்புதசிங்கம் அவர்கட்கும் அதில் முக்கிய பங்குண்டென்றும் கூறலாம்.

இப்பொழுது அற்புதாலயா கலாமன்றம் 'உயிரோவியம்', 'ஏன் அழுதாய்', 'முடிவு', 'இருதுருவம்', என்னும் நாடகங்களைத் தயாரித்து வருகின்றது. இறுதியாக இக்கலாமன்றத்தின் சகல வளர்ச்சிகளுக்கும் கருக்கொள்ளக்காரணமாயிருந்து வருபவர் செயலாளர் இ. மயில்வாகனன் அவர்களாகும். இவர் யாழ். பரமேஸ்வராக்கல்லூரியின் கலைக்கழகக் காரியதரியாகவும் அண்ணா சொற்பயிற்சி மன்றத்தின முக்கிய உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

## வசூல் மன்னன் சிவாஜிதான்!



நடிகர்திலகம் சிவாஜி கணேசன் நடித்த ராமன் எத்தனை ராமனடி?(?) 'சொர்க்கம்' தமிழகத்தில் பெருஞ்சாதனையை நிகழ்த்தியுள்ளது. ஒருவார வசூல்: ஒருலட்சத்து 56 ஆயிரம் ரூபாய். இருவாரவசூல்: 3 லட்சத்து 393 ரூபாய். இப்படியான வசூலை வேறு எந்த நடிகரும் நடித்தபடங்கள் பெறவில்லை.

தகவல்:
புஷ்பராசா

## கீதாஞ்சலி!



இவர்தான் கீதாஞ்சலி! இவரைத் தெரியாதவர்கள் சிலர் இருந்தாலும் இவர் பெயரைக் கேள்விப்படாதவர்கள் இருக்கமுடியாது.

கீதாஞ்சலி நல்லையா என்றால் நாட்டிய நிகழ்ச்சி கண்முன்னே தெரியும்.

செம்பு நடனம் கண்முன்னே நிற்கும். இரண்டு செம்புகளில்தண்ணீர்நிரப்பி ஒன்றின்மீதுஒன்றை அடுக்கி அவற்றைத் தலையில் வைத்து அற்புதமாக ஒரு சிறுமி மேடையில் ஆடுகிறாள். செம்பு ஒன்றுவது தவறிவிழவில்லை; செம்பினுள்ளே இருந்து ஒருசொட்டுத் தண்ணீர்கூடத் தெறித்துவிளவேண்டுமே! ஊகூம்!

இந்த நடனத்தைப்பார்த்துக்கொண்டிருப்போர் மெய்மறந்துவிடுகின்றனர். திடீரென்று சுயநினைவடைந்ததும் கரகோஷம்செய்து பாராட்டுகின்றனர்.

அந்தச் சிறுமி கீதாஞ்சலி நல்லையாவிடம் நாட்டியம் கற்றுக்கொண்ட ஆயிரக்கணக்கான சிஷ்யைகளில் ஒருத்திதான்!

இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி ஆகியவைகளில் நாட்டிய ஆசிரியராகப் பணியாற்றிய கீதாஞ்சலி நல்லையா சென்ற தல் திகதியுடன் ஓய்வுபெற்றுள்ளார்.

கல்லூரிகளிலிருந்து தான் ஓய்வுபெற்றிருக்கிறார். இது நாட்டியக்கலையில் அவர் மேலும் அதிகம் ஈடுபடுவதற்கு நல்ல வாய்ப்பாகும்.

—தேனி



# வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு படுத்தப்பட்ட கு

## எங்கள் கிராமம் - 7

யாழ். இலக்கிய வட்டக் கூட்டம் முடிகிறது. சுப்பிரமணியம் பூங்காவை நோக்கி நடக்கிளுர்கள் சில எழுத்தாள நண்பர்கள். பலதும் பத்தும் பேசுகிளுர்கள். 'நாலும் எத்தனேயோ மண்டபங்களை- கட்டிடங்களை- வேலைப்பாடமைந்த நிறுவனங்களைப் பார்த்துவிட்டேன் ஆனல் இந்த யாழ். நகர மண்டபத்தின் அமைப்பைப்போல அழகான- அடக்கமான -அதே வேளை ஒரு தனிக்கொளுவுடன் கூடிய கட்டிடத்தைக் காணவில்லை' என்கிருர் ஒரு கவிஞர். 'இது ஆருடைய காலத்திற் கட்டப்பட்டது தெரியுமா? அக்காலப் பிரபல வழக்கறிஞர் திரு. ஆர். ஆர். நல்லையா அவர்கள் நகரசபைத் தலைவராய் இருந்த காலத்தில் அவரே அடிக்கல்நாட்டி அலங்காரமாக அமைப்பித்த கட்டிடமப்பா இது அவர் பிறந்த ஊர் எங்கள் குரும்பசிட்டி, என்று குதூகலிக்கிருர் இரசிகமணி அவர்கள். வட இலங்கையின் தலைநகராம் யாழ்ப்பாணத்தில் நிர்வாக நிறுவனமாய் இன்றும்நின்று இலங்கும் இம்மாநகரசபைக் கட்டிடத்தின் வரலாற்றுக்கும் - குரும்பசிட்டியை பிறந்தகமாய்க் கொண்டு, 1921—1924-ம் ஆண்டுவரை உத்தியோகபூர்வமற்ற அங்கத்தவராயும் மரணபரியந்தம் நகரசபை அங்கத்தவராயும் பல ஆண்டுகள் தலைவராகவும் பணி புரிந்த திரு. ஆர். ஆர். நல்லையா அவர்களுக்கும் தொடர்பு இருக்கிறது என உணரும்போது எனக்கும் புல்லரிக்கிறது. இவர் போன்ற பெருமக்களைச் சாதனை புரிந்த வீரரை ஈன்றெடுத்த ஒரு கிராமம் பற்றி அரசாங்க உத்தியோகஸ்தரால் மாதிரிக் கிராமமென அயல்தேச மேதைகளுக்கு பிரமுகர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்ட குரும்பசிட்டி பற்றி அறிய உங்களுக்கும் ஆவல் தானே!

பூமிசாஸ்திர ரீதியாகப் பின்தங்கிய ஊரோ என்று எண்ணுமளவிற்கு பிரதான வீதிகள் எதுவுமே ஊடுருவிச் செல்லும் கிராமமாக இது இருக்கவில்லை அன்று. எந்தப் பக்கம் போனாலும் கலட்டிகளை, வடலிகளை, பொட்டல் வெளிகளைத் தாண்டித்தான் முக்கிய வீதியை அடையலாம் என்ற நிலை. ஆமாம் நல்ல தெருவசதி அற்ற, முன்னேறுவதற்கு இயற்கையாகவே கஷ்டங்கள் நிரம்பிய கிராமமாக இருந்து நலிந்தது நமது கிராமம். மயிலிட்டிக் கிராமச் சபையைச் சேர்ந்த இரண்டு வட்டாரங்களை அடக்கிய ஒன்றரைச் சதுரமைல் விஸ்திரணமுடைய குறுகிய கிராமந்தான் இது. கிழக்கு எல்லையின் சற்றுத் தொலைவில் யாழ்-பலாலிரோட் நீண்டு செல்கிறது. வடக்கு எல்லையில் சதா விமானத்தளத்தில் எழும் விமான இரைச்சல் கேட்கிறது. உண்மை! விமானத்தளத்தின் ஒரு பகுதி எமது கிராமத்தின் வடக்குப் பக்கத்தைச் சார்ந்ததுதான் மேற்கே கட்டுவன். தெற்கே ஏழாலை வடக்கு. (குப்பிளான்) குடிசனம் மிகுதியாக வதியும் எமது பிராந்தியத்தில் தார் போட்ட ரோட் இல்லாத குறை பெருங்குறையாக இருந்து வந்தது ஒரு காலத்தில் மழை வெள்ளம் பாயும் வெள்ள வாய்க்காலாகவும் பின் கிராமச் சங்க ஒழுங்கையாகவும் இருந்த மிக ஒடுங்கிய பாதை மட்டும் கிழக்கு மேற்காகக் கிராமத்தின் நடுவாக ஒன்றரைமைல்வரை ஊடுருவிச் சென்றது இரண்டு வாகனங்கள் விலத்துவதே விலங்கமான விஷயம். மாரி காலத்தில் இந்தப் பாதையால் வந்த முன்னுள் இந்து சாதனம்' பத்திராதிபர் திரு. திருஞானசம்பந்தர் அவர்கள் எமது ஊர்ப்பாடசாலைக் கூட்டமொன்றில் பேசும்போது 'உங்கள் ஊர் தெருக்களில் ஆண் தவளைகளும் பெண்தவளைகளும் ஆனந்தமாக நாதமெழுப்பிக்கொண்டு உல்லாசமாக உறவாடுவதைக் கண்டேன். வெள்ளம் வற்றிளுலும் உங்கள் பாதையிலுள்ள பள்ளங்கள்போதும் தவளைகளின் குடும்ப விருத்திக்கு' என்று நகைச்சுவையாக முப்பது ஆண்டுகளுக்கு முன் பேசினுர். ஆனல் இன்று 'என்னப்பா சின்னமன்காடின் போல் இருக்கிறதே' என்று எமது கிராமத்துக்கு வருகை புரிபவர்கள் கூறுகிளுர்கள். அந்த அளவுக்கு கல்வீடுகள் — மாடிகள் — இருமருங்கும் மதில்கள் அணிசெய்யும்தார் வீதிகள் நிரம்பியதாக மிளிர்கிறது இக்கிராமம்.


எதுவும் மாற்றமடையலாம்: ஆனல் மண்தன்மை மாறமுடியுமா? நல்ல குங்குமநிற செம்பாட்டுமண் தான் எமது கிராமத்துமண். வீடுவாசலை அழகாக நவீன மோஸ்தரில் வைத்திருப்பவர்களுக்கு இது தருவது தொல்லை மதுரமான மாங்கனியை — பலா மற்றும்பழவகைகளைப் பதம்பார்ப்பவர்களுக்கு இதுதருவது இன்பம். ஆனல் தண்ணீர் எடுக்க இருபது முழம் வரை தோண்டத்தான் வேண்டும். எமது கிராமத்துத் தண்ணீரைக்குடித்தே உயிர்வாழலாம்' என்பார்கள் பெரியவர்கள். கிணறுகள் பல இருந்தாலும் ஒருகிணறு பிரசித்தமானது. அதன்பெயர் 'பேய்க்கிணறு'. அந்தப் பெயர் ஏன்வந்ததோதெரியவில்லை. ஆனல் இதுவும் ஒரு நிலாவரைதான். எவ்வளவுதான் மழைவெள்ளம் இந்தக் கிணற்றுக்குள் மாதக்கணக்காகச் சென்ருலும் அவ்வளவையும் இழுத்துஒருநிலையான மட்டத்தில் தண்ணீரை வைத்திருக்கும் அதிசயத்தை இக்கிணற்றில் காண்கிறோம்.

எமது அரசாங்க விவசாயப் பகுதி பலதடவை பரீட்சை நடாத்தி இக்கிணறு சிறிய நீர்ப்பாசனத் திட்டத்துக்கு உகந்தது என்று முடிவு கட்டியுள்ளது. இவ்வளவுதான் எமது கிராமப் பூமி சாஸ்திரம்பற்றி.

முந்நூறு குடிமனைகளை கிட்டத்தட்ட ஆயிரத்துஇருநூறு வாக்காளர்களைக் கொண்டதுதான் நமதுகிராமம். தமிழர் என்றதும் சைவம் அதனுடன் இணைந்து பிணைகிறதல்லவா. இதற்கமைய எமது கிராமமக்கள் எல்லாருமே சைவசமயத்தினர்தான். நாவலர் பெருமானின் அடிச்சவட்டைப் பின்பற்றியவர்களா இவர்கள் என்று எண்ணத்தோன்றுவதிலும் உண்மை இருக்கிறது. முப்பது ஆண்டுகளுக்குமுன் மாமிச உணவு உண்ணுவர்கள் தொகை அரைபபங்குக்குமேல இருந்தது. மதாபிமானமோ — தேசியவெறியோ - அன்றி இலட்சியவாழ்வோ இக்கிராமத்து முந்தையோரை ஆக்கிரமித்திருக்கவேண்டும்,

இக்கிராமத்து மக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டாலும் கமத்தைநாடுபவர்தொகை குறைவாக இருப்பது விந்தைக்குரிய விஷயமாய் இருக்கிறது. நூற்றுக்கு மேற்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் முப்பதுக்கு மேற்பட்டபென்சனர்கள் மற்றும் சுருட்டுக் கைத்தொழில் வர்த்தகம் என்பவற்றில் ஈடுபட்டிருக்கும் பெருந்தொகையாயினேர் வதியும் இக்கிராமத்துப் பொருளாதாரம் வலுவுற்று நிற்பது வர்த்தகப் பெருமக்களின் அயரா உழைப்பினலேயே. ஈழத்தின் பல்வேறு பிராந்தியங்களிலும் முக்கியமாக கெக்கரரவ, பூண்டுலோயா, கழுத்துறை, நீர்கொழும்பு போன்ற இடங்களில் நம்மவர் வர்த்தகம் செய்துவருகிருர்கள்; நன்மதிப்பையும் பெற்றிருக்கிருர்கள். சிங்களச் சகோதரர்கள் அதிகமுள்ள கெக்கராவா பட்டினசபையின் தலைமைப்பதவியை நமது கிராமத்தவர் ஒருவர் ஒருதடவை பெற்றமையே இதனை வலியுறுத்துகிறது. உத்தியோகஸ்தர் பற்றிக் குறிப்பிடும்போது ஒன்று கூறவேண்டும். ஆறு வீட்டுக்கு ஒரு ஆசிரியர் — ஒன்பதுவீட்டுக்கு ஒரு பட்டதாரி — இருபத்தைந்து வீட்டுக்கு ஒரு வைத்தியத்துறை அல்லது பொறியியற்துறை நிபுணர் என்ற விகிதத்தில் கற்றவர்கள் உளர் என்பது ஒரு சிறப்பு அம்சமாகும்.

ஆலயங்கள் பதினென்று எமது கிராமத்தவரின் ஆத்மீகத்துறை ஈடுபாட்டைப் பறைசாற்றினுலும் இருஆலயங்கள் பெருமளவில் பிரமாண்டமாய் அமைந்துள்ளன. மாதாமாதம் குறைவில்லாத அபிடேகங்கள், விசேடவிழாக்கள், வருடாவருடம் உற்சவங்கள், திருவெம்பாவைக்காலப் பிரசங்கங்கள்கோலாகலமாக நடத்தப்படுகின்றன. புராணபடனம் இன்றும் பேணப்படுகின்றது. ஆறுஆண்டுகளுக்கு முன் சமைக்கப்பட்ட அம்பாள் ஆலயச் சித்திரத்தேர் ஐம்பதினுயிரம் ரூபாவால் ஆய திருப்பணி. இதைவிட உட்பிரகார வேலைகள் — மண்டபங்கள் — தேர்முட்டி. தீர்த்தத் தொட்டி அலங்கார அமைப்பு, மடங்கள் என்று வருடாவருடம் திருப்பணிகள் நடப்பதைக் காணலாம், விநாயகராலயத்தில் இவ்வாண்டு பலபுனருத்தாரண வேலைகள் தொடர்கிறது. மனஞ்சலியாது வருடம் வாரிவாரி வழங் கள். எமது கி உழைப்பாளிகள்







(1) முன்னுள் இலங்கை - பிரித்தானிய உதவி ஸ்தானிகர் திரு. ஈ. என். கொஸ்டர்:

(2) முன்னுள் இலங்கை - அவுஸ்ரேலிய ஸ்தானிகர் திரு. பி. லி. பலாட்

(3) கொழும்பு சமூக சேவை பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. என். விஸ்வநாதன்.



கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார
சிசு - மாதா பராமரிப்பு நிலையத்தை 19
ஈழகேசரிப் பொன்னையா, வர்த்தகப் பிரமு
பல பிரமுகர்களை இப் படத்




பீ எச் சி
நெற் பூச்சி கட்டுப்பாட்டிற்கு
பீ எச் சி 10% தூள்.
சிறந்தது.
பீ எச் சி 6%
துணுக்குகளும்,
பீ எச் சி 20% ம், தண்டு அரிப்புக்கு உகந்தது.





களைக்கொல்லி
'M-50'
'எம்சியே' யின்
விசேஷ வருப்பாட
இக் 'களைக்கொல்லி
3-5 வாரம்வரை வள
ருக்கும் நெற்றாவிய
தெரிந்து அகன்
இலைக்களைகளையும்
கோரைப்புல்லையு
தெரிந்து அழிக்கவல்




வெங்மிகய
செலிங்கோ

# ...கு மாதிரிக் கிராமம் என ... அறிமுகப் ... குரும்பசிட்டி

...ர் கிறது. மக்கள் சலியாது வருடா வரு ...ாரிவாரி வழங்குகிருர் எமது கிராமத்து ...ப்பாளிகள் வருடாந் திற் பதினெரு மாதந்தான் உழைப்பவர்கள் என்தெரியுமா? ஒரு மாத ஊதி யத்தைக்கிராமத்து சமய — பொதுத் திருப்பணிகளுக்கு அர்ப்பணிப்பவர்கள் எனலாம்.



... டி. பண்டாரநாயகா அவர்கள் குரும்பசிட்டி ...லயத்தை 1950-ல் ஆரம்பித்து வைத்தல்; ...ர்த்தகப் பிரமுகர் பூ. சுப்பிரமணியம் உட்பட ...களை இப் படத்தில் காணலாம்.


எமது கிராமத்தின் இன்னெரு முக்கிய நிறுவனம் பொன் - பரமானந்தர் வித்தியாசாலை. 1900 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இக் கல்விக்கூடம் ஆற்றலுள்ள ஆசிரியமணிகளை, மற்றும் உத்தியோகப் பெருமக்களை உருவாக்க அத்திவாரம் இட்டுவந்தது இப்பாடசாலை. ஒருகாலத்தில் இது ஒரு சிறிய சர்வகலாசாலை போன்று மிளிர்ந்தது. எம்மூரிலும் அயலூரிலும் ஆசிரியர்களாய்க் கடமைபுரியும் நூறுபேர் இக்கல்விக்கூடத்தில் மேல்வகுப்புக் கல்வியையும் பெற்றனர். இன்று ஒரு கனிஷ்டபாடசாலையாக நடைபெற்று வருகிறது.

இதைவிட எமது கிராமத்தில் முதல் தர உபதபாற்கந்தோர் - மாலையில் கூடும் சந்தை - அரசினர் வைத்திய சாலை என்பன மக்களின் தேவையைப் பூர்த்திசெய்கின்றன.


எமது கிராமத்தின் மகோன்னதமான வளர்ச்சிக்குக் காரணம் இங்கே உள்ள சில பொதுஸ்தாபனங்களாகும். அவற்றுள் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னரேயே (1934) நிறுவப்பட்ட உன்னத ஸ்தாபனம் சன்மார்க்கசபையாகும். 'ஈழகேசரி'ப் பொன்னையா அவர்களின் தலைமையில் ஊர்ப் பிரமுகர்கள் பலர் இதனை உருவாக்கினர். மெய்ந்நெறியிலும் உலகியலிலும் பணிபுரிவதே இதன் இலட்சியமாயிற்று. கால் நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட எமது கிராமவாழ்வு -வளர்ச்சி என்பன இந்த ஸ்தாபனத்துடன் இணைந்து பிணைந்ததென்பதை மறைக்கமுடியாது. மணிவாசக நூல்நிலையம், சன்மார்க்க சனசமூக நிலையம், சன்மார்க்க இளைஞர்சங்கம், இந்து சமயவிருத்திச்சங்கம், சன்மார்க்க ஐக்கியசங்கம், சன்மார்க்க நாடகமன்றம், பால் நிலையம் போன்ற பல உபபிரிவுகளை உடையதாய் பல துறைகளிலும் அரிய நற்பணி புரிகிறது இச்சபை. கிராமத்தின் மத்தியில் பன்னிரண்டடி அகலத்தில் சென்ற ஒழுங்கையை இருபத்தினன்கு அடி அகலத்திற்குச்சிரமதானமூலம் 1947-ல் அகல்வித்துசெப்பனிட்டு அரசாங்கத்திடம்கையளித்து ஒரு பகிரங்க தெருவாக்கிய தொண்டு இச்சபை செய்த சேவைகளின் சிகரமெனலாம். இதன் காரணமாகத்தான் இக்கிராமம் தொடர்ந்து தபால் கந்தோர் - மின்சாரம் - பஸ் போக்குவரவு முதலிய தேவைகளையும் விரைவில் பெற முடிந்தது. சிசுமாதா பராமரிப்பு நிலையத்தைப் பெறும் விஷயத்திலும் சபை முழுமூச்சாய் உழைத்தது. பல ஆண்டுகள் எமது கிரா

(14-ம் பக்கம் பார்க்க)

**— ஏ. ரி. பொன்னுத்துரை —**



பெருந் தொகைப்பணத்தில் அமைக்கப்பெற்ற குரும்பசிட்டி அம்பாளாலய சித்திரத்தேர்.

# உங்கள் பரமவிரோதிகளை அறவே ஒழித்திடுக!

**களைக்கொல்லி 'M-50'**
'எம்சிபிஏ' யின் ஓர் விசேஷ வகுப்பாடான இக் 'களைக்கொல்லி,' ... வாரம்வரை வளர்ந்திருக்கும் நெற்தானியத்தில் தெழித்து அகன்ற இலைக்களைகளையும், கோரைப் புல்லையும் ...ரிந்து அழிக்கவல்லது.

**சுமிதியன்**
ஓர் பாதுகாப்பான, நிச்சய கிருமிநாசினி. விசேஷமாக ... கட்டுப் பாட்டுக்கு உகந்தது.

**'என்ட்ரெக்ஸ்' 20**
இன்று அதிகமாகப் பாவிக்கப்படும், அதிசிக்கனமான, 'சகல-நிவாரண' கிருமி நாசினி எல்லா நெற்களை அழிப்பிற்கும் உகந்தது.

**களைக்கொல்லி 'D'**
3-5 வாரம் வரையிலான நெற் தானியத்தில் தெழித்து அகன்ற இலைக் களைகளையும், கோரைப் புல்லையும் தெரிந்தகற்றும் 2, 4-D விகித 'எஸ்தர்' வகுப்பாடாகும்.

**'அசோட்றின்' 60**
ஏனைய கிருமிநாசினிகளால் அழிக்க முடியாத நெற் பீடைகளை முற்ற ழிக்க வல்ல, ஓர் வன்மைமிகு புதிய படிமுறை சகல-நிவாரண கிருமிநாசினியாகும்

**களைக்கொல்லி 'P-20'**
ஈரலிப்பான நிலத்தில் பயிரிடும் நெல்வகையின் வேளாண்மைக்கு முன் தெளிக்க உகந்தது. இவ் வேளை சகல தாவரங்களை யும் முற்றழிப்பிற்கும், முதல் மழையுடன் தெழிக்கச் சிறந்தது. வித்துக்கள் விதைத்தலின் பின்முளைத் தலைத்தடுக்க இம்முறை உகந்தது.

**'ஸ்டாம்' எப்-34**
7-18 நாள் வரையிலான நெற்தானியத்தைத் தாக்கும் அகன்ற இலைக்களை, கோரை, புல் அனைத்தையும் தெரிந்தழிக்க உகந்த புதிய சிராக்கிய 36% வகுப்பாடான 3, 4 டீபிஏ சேர்வையாகும்.




...ங்கிய இலங்கை லிமிட்டட்
செலிங்கோ ஹவுஸ் த. பெ. 919 கொழும்பு. டெலிபோன்: 28333

LANKEM
இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்.

சிறுவர் கவி நயம் 17

# அல்லியும் தாமரையும்

## —இரசிகமணி கனக. செந்திநாதன்—

"பூவேஉன்னைப்படைத்தவர் ஆர்? புது மணம் உள்ளே நுழைத்தவர் ஆர்? பலபல நிறங்கள் பண்ணியதார்? பார்க்க அழகுதந்தவர் யார்?" என ஒரு குழந்தைப் பாடல் இருக்கிறது. மணிதிருநாவுக்கரசன் என்ற தமிழ் அறிஞர் எழுதிய பாடல் அது கடவுளின் அற்புதச்செயலை பூக்களைப் படைத்து புதுமணத்தை நிறைத்து பலபலநிறத்தை அளித்து, பார்க்கநிறத்தைக் கொடுத்ததன் மூலம் வியக்கும் பாடல் அது. உன்னைச் செய்தோன் நல்லோனே உலகுக்கெல்லாம் வல்லோனே என அவர் பாடலை முடித்திருக்கும் அழகு அற்புதமானது.

இந்தப்பூக்களுக்குள்ளே அருமையான இரண்டு பூக்களை தாமரையையும் அலலியையும் எடுத்துக்கொண்டு ஒரு கவிஞர் பாடுகிறார். வெறும் புறஅழகை அவர் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை "காலைமலரும் தாமரையை மாலைகுவிவதேன் உரையே" என்று கேட்கவில்லை. இந்த மலர் தங்குவிதலைவைத்துக்கொண்டு ஒரு நாடகமே நடாத்தி விட்டார். கவிஞர் ஆம் பாடசாலைகளில் இதைக்கொஞ்சம் விரித்தெழுதி நாடகமாக்கலாம்.

அழகான ஒரு குளத்திலே இரண்டு பூக்கள் மணம் வீசி நின்றன. ஒன்று தாமரை மற்றது அல்லி இரண்டும் நல்ல நட்பாகப் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் தான் நின்றன. ஒரு நாள் விடிந்தது. பொன் போலச் சூரியன் தோன்றினுன் புட்கலம் எல்லாம் ஆர்த்தன. குளத்தில்இருந்த தாமரை மலர்ந்துசிரித்தது. பக்கத்தில்நின்ற அல்லியைப் பார்த்தது. அது மலரவில்லை, கூம்பியிருந்தது. தாமரை ஏளனமாக "இந்த அழகான சூரியனை பொன்னிற ஆதவனை தங்கநிறஞாயிறைப் பார்க்க உனக்குக்கண்ணில்லையா? பகலில் உனக்குத் தூக்கமா? சீ. சீ. வெட்கம்" என்று கேலிசெய்தது.

கவிஞர் பாடலைப் பாருங்கள்.

பொன் போல் சூரியன்
வந்தவுடன்
பூத்துச் சிரித்தது
தாமரையே
அருகில் நின்ற அல்லி
தனை
அழைத்துத் தாமரை
ஏளனமாய்
பகலில் நீ ஏன் தூங்குகிருய்?
பார்க்க உனக்குக்
கண்ணில்லை?
என்றே சொல்லிச் சிரித்
ததுவே
அன்றே இரவும்
வந்ததுவே

தாமரை சிரித்து வாய் மூடவில்லை. இரவுவந்து விட்டது. தண்மதி வானில் வட்டவடிவாய்த் தோன்றி விட்டது. பிள்ளைகள் நிலவில் விளையாடினர்கள். அலைகடல் ஆர்த்துக்கு தூகலித்தது. உலகமே மகிழ்ச்சியில் மூழ்கியது குளத்தில் நின்ற அல்லிமலர் குதூகலமாகச் சிரித்து அம்புலியை வரவேற்றது. பக்கத்தில் நின்ற தாமரையைப்பார்த்தது. பகலெல்லாம் தன்னைக்கேலி செய்ததாமரையைப் பார்த்தது. பகலில் மலர்ந்திருந்த அது இப்போது கூம்பிஇருந்தது. ஊமை பாலிருந்தது. அம்போதுதான் அல்லி பேசத் தொடங்கியது. தாமரையைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டது. குளிர்ச்சியான சந்திரன், பலரைமகிழ்விக்கும் மதி குழந்தைகளைக் கூடகுதூகலிக்கச்செய்யும் நிலா, ஆ! அதுவானில் வந்துவிட்டது. அதைப்பார்க்க உனக்குக் கண்ணில்லையா? ஏன் இந்த மௌனம்? என்று அல்லி மலர்திருப்பி அடித்தது.

பாடலைப் பாருங்கள்:

அம்புலி வானில்
வட்டமிட
அல்லி மலர்ந்து சிரித்
ததுவே
நிலவைப் பார்க்கக்
கண்ணின்றி
நீயேன் இங்கே
நிற்கின்றுய்?
என்று கேட்ட அல்லிக்கே
என்ன சொல்லும்
தாமரையே!

தாமரையால் பதில் சொல்ல முடியவில்லை. பதில் சொல்லமுடியாத கேள்வி அது. பகலில்என்ஞல் பார்க்க முடியாததைப்போலஇரவில் உன்ஞலும் பார்க்கமுடியாது என்று அல்லிகுத்திக் காட்டியது. தாமரைதலை கவிழ்ந்தது.

அல்லிமலர் இத்தோடு நிறுத்தவில்லை. இதைவைத்துக்கொண்டு அருமையான போதனை ஒன்றைச் செய்கிறது தம்பிதங்கைகளே! அந்தப்போதனைதான் உங்களுக்கு முக்கியமானது. அந்தப்போதனை என்னதெரியுமா?

பகலில் நீயே மலர்கின்ருய்
யார்நான் இரவில் மலர்
கின்றேன்
இரவும் பகலும் மாறி
வரும்
இதுபோல் அம்மா நம்
வாழ்க்கை
என்றே அல்லி மலர்
சொல்ல
ஏற்றுக்கொண்டது
தாமரையே

இரவும் பகலும் மாறி வருகிறது. அதுபோல செல்வமும் வறுமையும் மாறி மாறி வரும். இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். செல்வம் வரும்போது கர்வம்கொள்ளக்கூடாது. வறுமையும் வரும் என்று எண்ணி அடங்குதல் வேண்டும். இன்பம் வரும்போது எக்களிப்புக் கொள்ளுதல் தகாது. அடுத்து துன்பமும் வரும் என்ற நினைப்பு மனதில் தோன்ற வேண்டும்,

அல்லியும் தாமரையும் என்ற இந்தப்பாடல் மூலம் அரியபோதனையைச் சிறுவர்களாகிய உங்களுக்குத் தந்தவர் கவிஞர் தமிழ் ஒளி. அவரது பாடல் நூல் பாப்பாப் பாட்டு. மல்லிகைப்பதிப்பகத்தார்(சென்னை-17)இதனை வெளியீட்டிருக்கிருர்கள்.

பாடலை ஒரு சேர மீண்டும் பாடுங்கள்:

பொன் போல் சூரியன்
வந்தவுடன்
பூத்துச் சிரித்தது தாமரையே
அருகில் நின்ற அல்லிதனை
அழைத்துத் தாமரை
ஏளனமாய்
பகலில் நீஏன் தூங்குகிருய்
பார்க்க உனக்குக் கண்ணில்லை
என்றே சொல்லிச்
சிரித்ததுவே
அன்றே இரவும் வந்ததுவே
அம்புலி வானில் வட்டமிட
அல்லி மலர்ந்து சிரித்ததுவே
நிலவைப் பார்க்கக்
கண்ணின்றி
நீயேன்இங்கேநிற்கின்ருய்?
என்று கேட்ட அல்லிக்கே
என்ன சொல்லும் தாமரையே
பகலில் நீயே மலர்கின்ருய்
பார்நான் இரவில் மலர்
கின்றேன்
இரவும் பகலும் மாறிவரும்
இதுபோல் அம்மாநம்வாழ்க்கை
என்றே அல்லி மலர்
சொல்ல
ஏற்றுக் கொண்டது
தாமரையே.

# தெரிந்துகொள்ளுங்கள்!

1. இலங்கையிலே முதன் முதல் துவக்கப்பட்ட தமிழ்ப் பத்திரிகை உதய தாரகை (Morning Star) எனப்பட்ட கிறீஸ்தவப் பத்திரிகையாகும் இது. 1841-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றும் நடந்து வருகின்றது.

2. தென் அமெரிக்காவில் 4 முதல் 6 அடி வரை நீளமான அட்டைகள் காணப்படுகின்றன.

3. தவளைகள் தோலினுலும் சுவாசிக்கக்கூடியன வாயிருக்கின்றன. (Cutaneous Respiration) ஒரு தவளை தண்ணீருக்கடியில் 10 நிமிடங்கள் தோலினுல் சுவாசித்தபடி இருக்கும். இதற்குமேல் அதால் தோலினுல் சுவாசிக்கமுடியாமலிருப்பதால் அது நீர் மட்டத்திற்கு வந்துவிடும்.

4. இடி மின்னலுடன் பெய்யும் மழையே கமக்காரர்களுக்கு அதிக நன்மை விளைவிக்கின்றது. ஏனெனில் இம்மழை பயிர்களுக்குக்கூடிய பசளைத் தன்மையைத் தருகிறது.

5. எப்பொழுதும் உயரமான பொருட்களையே இடி தாக்குகின்றது. வெட்டவெளியில் ஒரு மனிதன் நின்ருல் அவ்விடத்தில் அவனே உயர்ந்தவனுகின்ருன். ஆகவே இடி அவனைத் தாக்குகின்றது. இடி முழங்கும்பொழுது ஒரு பொழுதும் உயர்ந்த மரங்களின் கீழோ வெட்டவெளிகளிலோ நிற்கக்கூடாது இடி முழங்கும்பொழுது மரங்கள் அடர்ந்த சோலையில் நிற்றல் ஒரு தனி மரத்தின்கீழ் நிற்பதிலும் ஆபத்துக் குறைவாகும்.

—றஞ்சன்

# "நீர் நிற்க, நாம் இருக்க!"

துறவிகளில் சிறந்தவர் பட்டினத்தார். "பட்டினத்துப்பிள்ளையைப்போல்ஆருந் துறக்கை அரிதரிது" என்பார்கள். அவருடைய இயற்பெயர் திருவெண்காடர். கப்பல் வியாபாரம் செய்து பெரும்பொருள் ஈட்டினுர். சோழ அரசனுக்குப் பெருந்தொகை தேவைப்பட்ட போதெல்லாம் திருவெண்காடரிடம் கடனுகக் கேட்டு வாங்கிக்கொள்வது வழக்கம். கடன் வாங்கினுலும் அரசனுடையமதிப்புப்போகவில்லை. திருவெண்காடர் மிகவும்அடக்கத்தோடுநின்றபடி பணத்தைக் கையிலேந்தி அளிக்க, அரசன் ஆசனத்தில் அமர்ந்தபடியே அந்தத்தொகையை ஏற்றுக்கொள்வான். எப்போதும் கொடுப்பவர் கைமேலேயும் வாங்கிக்கொள்பவரின் கை தாழ்ந்தும் இருக்குமல்லவா? அதற்கு நேர்மாருக இருந்தது இங்கே திருவெண்காடர் ஞானம்பெற்று காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்று எண்ணி எல்லாவற்றையும் துறந்துவிட்டார். அதுமுதல் அவரைப் பட்டினத்தடிகள் என்று யாவரும் அழைத்தார்கள்.

தமக்குப் பணம் முடைப்பட்டபோதெல்லாம்கடனுக வழங்கியவர் துறவியானுர் என்ற செய்தியைக் கேட்டுச் சோழ அரசன் மனமுடைந்து போனுன். அவரை அழைத்து வரும்படி ஆளை அனுப்பினுன். அவர் வரவில்லை, அமைச்சரை அனுப்பினன் அப்போதும் வரவில்லை, பிறகுதானேஅவரை நாடிச் சென்ருன். அரசன் ஒரு மரத்தடியிலே கோவணுண்டியாக அமர்ந்திருந்த அடிகளாரைக்கண்டதும் அரசன் திருக்குற்ருன் "எவ்வளவு சுகமாகருந்தீர்கள்' எல்லாவற்றையும் துறந்துவிட்டீர்களே! இப்போது என்னத்தைக் கண்டு விட்டீர்கள்?" என்று பரிவோடுகேட்டான்.

கால்மேல் கால் போட்டுக்கொண்டு அமர்ந்திருந்த பட்டினத்தார் உடனே "நீர் நிற்க, நாம் இருக்க!" என்று சுருக்கமாகப்பதில் உரைத்தார். முன்னை நிலையையும் இப்போதைய நிலையையும் சிலசொற்களிலே அவர் தெளிவுபடுத்தி விட்டார்.




## துணுக்கு

(ஜீ. சி. ஈ மாணவர் இருவர்)

குமார்: என்ன மச்சான் இண்டைக்கு பேப்பர் ஏதும் அவுட்டாகி இருக்கோ?

ரவி: ஓ இண்டைக்கு விடியப்புறம் நாலு மணிக்கே வெளியாகி விட்டது.

குமார்: (ஆவலுடன்) எது? கெமிஸ்ரிப் பேப்பரோ

ரவி: இல்லை மச்சான் ஈழநாடு பேப்பர்.

குமார்: ? ? ?

அத்தியடி சபா

# திராட்சை பறிக்க இயந்திரம்

வியன்ஸ்பர்க் (டாட்) திராட்சைப்பழக் கொத்துக்களைப் பறிக்க, ஓர் அதிசயமான இயந்திர சாதனத்தை ஜெர்மன் நிபுணர்கள் உருவாக்கியுள்ளனர்,

'வாக்குவம் கிளீனர்' போன்றதே இதுவும். நீண்ட குழாயுடன் 'வாக்குவம்' கருவி இணைக்கப்பட்டிருக்கிறது. திராட்சை குலைகள் அருகே இக்கருவி கொண்டு சென்றதும் ஏதோ மாயாஜாலம்போல திராட்சைக் குலை அப்படியே பறிக்கப்பட்டு குழாய் வழியாக வண்டியில் உள்ள பெட்டகத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது. சாதாரணமாக ஒரு மனிதர் பத்துமணி நேரத்தில் கையில் பறிக்கும் திராட்சைக் குலைகளை இக்கருவி ஒருமணிநேரத்தில் பறித்து விடும்.

# உழவர் பொங்கல்

— ந. கிரிதரன் —

உழைப்பில் வெற்றி யுற்றதனுல்
உழவர் உள்ளக் களிப்படைந்தே
களைப்புச் சோர்வு கலைந்திடவே
கன்னற் பொங்கல் பொங்கிடுவார்

அரிசி யுடன்பால் தேனுடன்தம்
அன்னை எல்லாம் கலமிட்டே
பரிதியை நோக்கி வணங்கிடவே
பைந்தமிழ்ப் பொங்கல் பொங்கிடுவார்

உலகுக் குயிராம் கதிரோனை
உழவன் வாழ்த்தி இசைபாடி
நலமே பொங்கும் நன்ஞளில்
நற்சுவைப் பொங்கல் பொங்குகிருர்

மழலை விருந்து 2: ஆமாம் ஐந்து ஆறு வயதுள்ள பாலகர்கள் பிறர் உதவியில்லாமல் தாங்களே பாடி மகிழக்கூடிய பாட்டுக்கள் இந்த விருந்தில் கிடைக்கும்.

# சுவாமி கும்பிடு

எங்கள் சாமி தேரினிலே
எழுந்து வாருர் பார்தம்பி!

நல்ல மேளம் டும்டும்டும்.
நாத சுரமே பீம்பீம்பீம்.

வெள்ளைச் சங்கு பூம்பூம்பூம்
விடும்பும் வெடிகள் டோம்டோம்டோம்.

கைகள் கூப்பி வணங்காயோ
காப்பாய் என்று கேளாயோ!

— 'முத்தண்ணு'

# பெண்மையின் நான்கு சக்திகள்

— சுத்தானந்த பாரதியார் —

பெண்மையில் நான்கு சக்திகள் உள்ளன. ○ மங்கல மலர் முகத்துடன், அழகின்பப் புன்னகையுடன், இல்லறத் திருவாக விளங்கும் இலக்குமி சக்தி. மாசற்ற இளம் பொலிவுடன் தெள்ளறிவாற் கலைகளை வளர்க்கும் சரஸ்வதி சக்தி. ○ வீரக் கனல் வடிவுடன் இடர்களையும், தீமைகளையும், அரக்கக் கொடுமைகளையும், அடிமைச் சிறையையும் தகர்த்தெறிந்து விடுதலை முழங்கும் காளி சக்தி. ○ அறிவும் அன்பும், அமைதியும், ஒளியும் சேர்ந்து வாழ்வைப் பேரின்பசோதி வளமாக்கும் மகேசுவரிசக்தி. இந்த நான்கு சக்திகளும் செறிந்திலங்கினால் பெண்மை வணங்குதற்குரிய பராசக்தி மயமாகும்.

## மூடக்கொள்கைகள் ஒழிந்தன

இப்போது சுதந்திர வாழ்விற்குத் தடையாக நிற்கும் சிறை, கல்வியின்மை, கட்டாயத்தாலி கைம்மை, காலுக்கும் கைக்கும் வாய்க்கும் பூட்டு ஆகிய மூடத்தனங்களெல்லாம் தவிடு பொடியாகி மஹாகாளியின் ஆவேசத்துடன் பெண்மை எழுந்துள்ளது. இவை பழம் பழக்கங்கள் அல்ல. நமது நாடு அடிமைத்தளையுற்றது! அந்நியர் நமது கைகால்களையும்கட்டி, வாயையும் மூடி, நமது நாட்டையும் அறத்தையும் கெடுத்து, நமது பொருளையும் கொள்ளையடிக்கத் துணிந்தனர். நமது வீரக்கனல் சாம்பல் பூத்தது. அந்த இருள் மயக்கத்தில் தோன்றிய மூடப்பேய்களே ஆண்மை பெண்மை இரண்டையும் உருக்குலைத்தன.

## வாழ்வளிக்கும் தெய்வம்

ஆண்பெண் அடங்கிலும் வெற்றி முழக்கத்துடன் யாத்திரை செய்கிறோம். நாட்டைப்பிடித்த தீமைகள் ஒழிகின்றன அடிமைத்தளைகள் முறிகின்றன மடமையிருள் மறைகின்றது; வேற்றுமைகள் விலகுகின்றன. தாராளமான கல்வி, பயனுள்ள தொழிலறிவு, வலிமைதரும் உடற்பயிற்சி, பொருளாதாரச் சுதந்திரம், காதல் மணம், மறுமணவுரிமை, பொதுநலவுரிமை ஆகிய சகல உரிமைகளும் வந்துகொண்டிருக்கின்றன. காலவெள்ளத்திற்கு யாரும் கையணை போடமுடியாது. பெண்மை பெருமை பெறுகிறது. 'சக்தியாய்ச் சிவமாகி' என்ற திருவாக்கெழுந்த நாட்டில் பெண் ஆணுக்குச் சக்தியாக விளங்கும். இரவிக்கும் கதிர்கற்றைபோல் ஆணுக்குப் பெண் வாழ்வையளிக்கும் இறைவனை மங்கைபாகனாக வணங்கும் தமிழர்பெண்ணைப் பத்தினித் தெய்வமாக வழிபடுவர்.

இளங்கோ அடிகள் கண்ணகி வாயிலாக, பெண்

## இளங்கோ வெளியிடும் 2 சக்திகள்

ணிடம் உள்ள இரண்டு சக்திகளைத் தெளிவாக்கியிருக்கிறார். 'மாசறு பொன்னே வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே தேனே' என்று பாராட்ட, ஆண் மகனுக்கு இன்பமளிக்கும் கற்புள்ள காதற்றிறன். 'யானோ அரசன், யானே கள்வன்' என்று நீதி கோரிய, அரசனுக்கு உணர்வுவரச் சினந்த வீரத்திறமை. நல்லதை ஆக்கிப் பொல்லாததை நீக்கும் சக்திகள் கற்புள்ள பெண்ணிடம் உறைந்துகிடப்பதை, சிலப்பதிகாரம் நமக்கு அறிவிக்கிறது. இராமன் காட்டிற்கெழுந்தருளும் போது 'வெண்ணகையாய் என்னுடன் போந்தால் நீ எல்லையற்ற இடர்தருவாய்' என்கிறான் இராமன். 'என்னைத் துறந்தபிறகேதான் உமக்கு இன்பமோ?' என்று சீறுகிறாள் சீதை வால்மீகியும், துளசிதாஸும் இங்கே பேச்சைப் பெருக்குகின்றனர். கம்பனின் இராமன் மறுபேச்சில்லாமல் சீதையை உடனழைத்துச் செல்கிறான். பெண்மையின் பொறுமையும், கற்புறுதியும், சக்திக்கனலும், இன்பத்திறனும் எழுந்து விளங்கினால் ஒரு நாடு அமர நாடாகும். பெண்மை அமரத்தன்மையளிக்கவல்லது

### வாயை திறக்காதீர்கள்

வெங்காயம் உரிக்கும் போது வாயைத்திறக்காதீர்கள்; கண்ணீர்சிந்த மாட்டீர்கள் என்கிறார் மிசிகன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் ஒருவர். பரீட்சித்துப் பார்த்ததில் பலர் உண்மை என்கிறார்கள் ஏன் என்பதுதான் ஒருவருக்கும் தெரியவில்லை!

# தட்டுப்பாட்டைச் சமாளிக்க.....

குடும்பச் சுடர்

தயாரிப்பு: குணம்

சில பொருள்களில் தட்டுப்பாடு ஏற்படும் போது நாம் அதைக்கண்டு அஞ்சிவிடாமல் எப்படி இதனைச் சமாளிக்கலாம் என்பது பற்றிச் சிந்திப்பதே நல்லது. சிற்சில வேளைகளில் இவ்வித தட்டுப்பாடு கூட நல்ல ஒழுங்கை ஏற்படுத்தி விடுகிறது.

தேவையில்லாத பொருட்களெல்லாம் நமது உணவில் கலந்துபின் அவையெல்லாம் அவசியம் என்ற நிலைக்கு நாம் ஆளாகி விடுவது கவலைக்குரிய விஷயம்தான். இது விஷயங்களில் பெண்கள் மிகவும் முன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

பெண்கள் தற்போது அடுப்படிப் பூச்சிகள் என்ற நிலையில் இருந்து விடுபட்டு வெளியே வந்து கொண்டிருந்தாலும் சிக்கனம் அவசியம் என்பதால் தேவைப்பட்டு வந்த ஒரு பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டால் அதையிட்டு அதிகம் அதிர்ச்சியடையாமல் அந்தப்பொருள் இல்லாமல் சமாளிக்கத் தயாராகவேண்டும்.

உதாரணமாகச் சீனிக்குத் தட்டுப்பாடு வந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். இப்படியொரு நிலையேற்பட்டால் அதிக பரபரப்பு அடையாமல் நமது உள்ளூரில் கிடைக்கக்கூடிய பனங்கட்டியைப் பாவிக்க நாம் பழகிக் கொண்டு விட்டால் இந்தப்பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக நமக்குத் தோன்றாது. அத்துடன் இது ஒரு சிக்கன நடவடிக்கையாகவும் இருக்கும்.

நமது மூதாதையர்கள் யாவரும் வெளிநாட்டுச் சரக்கை நம்பித்தான் வாழ்ந்தார்களா? அநேகமாக உள்ளூரில் கிடைத்த உணவுப் பொருட்களையேபயன்படுத்தி வந்தார்கள். அவை தற்போதைய இறக்குமதி உணவுப்பொருட்கள் சிலவற்றிலும் பார்க்கச் சிறந்தவை. நோய்நொடியை அணுகவிடாதவை. நாம் தினமும் காலையும் மாலையும் அருந்தும் கோப்பி, தேநீரும் அவற்றுக்குப் பயன்படுத்தும் சீனியும் ஆராய்ந்து பார்த்தால் உடலுக்கு உறுதியளிப்பவையல்ல. பல நோய்களை நமதுஉடலுக்குக் கொண்டு வரத்தக்கவை. எனவே இவைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் குடும்பப்பெண்கள் இல்லையே இல்லையே என அங்கலாய்க்க வேண்டியதில்லை. இப்பானங்களுக்குப்பதிலாக பால் மோர்போன்ற பானங்களைப் பருகலாம் அவை உடலுக்கு உறுதியானவை

எனவே மகளிர் தட்டுப்பாட்டைக்கண்டு பீதி கொள்ளக் கூடாது. தட்டுப்பாட்டைத்தட்டிக் கழித்து விட்டு கூடியளவு உள்ளூர் பொருட்களைப் பயன்படுத்த முயற்சிக்கவேண்டும் ஒய்வு வேளையில் அவற்றையுற்பத்திசெய்ய உதவவேண்டும் இதனால் நமது நாட்டின் பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணலாம். பிற நாட்டை நம்பியிருக்கவேண்டிய நிலையேற்படாது உணவுப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டிய நிலை ஏற்படும்.

சீனி போன்று நமது அன்றாட வாழ்வில் நாம் பிரதான உணவுப் பொருளாகக் கருதிவிட்ட பால்மா, மிளகாய் ஆகிய பொருட்களுக்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்படுவது யாவரும் அறிந்ததே. இவை அத்தியாவசிய மானவை தானா? கடும்காரம் உடலுக்கு நல்லதல்ல என்பது வைத்தியர்கள் நோயாளர்களுக்கு அடிக்கடி சொல்லும் வாக்கியம், இக்காரத்தை தட்டுப்பாட்டைச் சாக்காகவைத்துக் குறைத்துக் கொள்ளலாம் அல்லவா? இம்மிளகாய்க்குப் பதில் சிறிதளவு மிளகைப் பயன்படுத்தலாம். இதனால் உடலுக்கு ஆபத்து ஏற்படாது. இதைவிட மிளகாயை அத்தியாவசியமெனக் கருதினால் இறக்குமதி மிளகாய்க்கு ஏங்காது ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்கள் வீட்டின் பின்புறத்திலுள்ள சிறு நிலப்பரப்பில் 10, 15 மிளகாய்க் கன்றுகளை நாட்டி மிளகாயை தம் சுயதேவைக்கு உற்பத்தி செய்யலாமல்லவா அடுத்து ரின்னில் அடைத்த சத்துக்குறைந்த பால்மாவை விட ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒருபசுமாடு வைத்துப் பராமரித்தால் நல்ல பசும்பாலைப் பெற்றுக்கொள்ளலாமல்லவா? நமது முன்னோர் இப்பால்மாவுக்குத்தான் கையேந்திக் கியூவில் நின்றார்களா? பிறர்கையை நம்பி வாழும் இந்த ஒரு நிலை இடைக்காலத்தில் ஏற்பட்டது. அந்நியராட்சியின் பலனாக எங்கள் மூலப் பொருட்களைக் கொண்டு சென்று பாவனைப்பொருளாக்கி அனுப்பும் அன்னியரிடம் கையேந்தும் நிலையேற்பட்டது. இலங்கையின் இன்றைய சூழ்நிலையில் இத்தகையதொருநிலையை நாம் முறியடிக்க வேண்டும்.

### ஏழைகளின் ஆப்பிள்

அதிக சத்துள்ள பழம் ஆப்பிள். அதிக விலையுள்ள பழமும் ஆப்பிள்தான். எல்லாராலும் ஆப்பிளை வாங்கிச் சாப்பிட முடியுமா? ஆப்பிள் வாங்க முடியாதவர்கள் காரட்டை வாங்கலாம், காரட் ஏழைகளின் ஆப்பிள். ஆப்பிள் பழத்தில் எவ்வளவு சத்து இருக்கிறதோ, அவ்வளவு சத்து இந்தக் காரட்டிலும் இருக்கிறது பச்சைக் காரட்டை அடிக்கடி கடித்துச் சாப்பிடுதல் நன்று. உணவை விரைவில் செமிக்க வைக்கும் தன்மை இதற்குண்டு.

### 12 பூஜ்யம் கொண்ட தொகை

ஒரு "டிரில்லியன்" என்றால் எவ்வளவு? பிரிட்டிஷ்காரர் இதை 'பில்லியன்' என்கிறார்கள். சரி "பில்லியன்" என்றால்எவ்வளவு?

இதுகற்பனைக்கு அப்பாற்பட்ட தொகையாகும் வேறு விதமாக கூறுவதாயிருந்தால் இதில் 12 பூஜ்யங்கள் வரும்.

வானவியல்ரீதியாக பேசுவோமே.

100,000 கோடி கிலோமீட்டர் என்றால் பூமிக்கும் சந்திரனுக்குமுள்ள தொலைவில் மூன்றுமடங்காகும்.

நாணய ரீதியாகப் பார்த்தால் இத்தொகை 100,000 கோடி டொலர் முழு அமெரிக்காவும் 1970-ல் இவற்றிலிருந்த செல்வத்தின் மதிப்பாகும்.

### முதலுதவி

ஒருவருக்கு மயக்கம் வந்தால் உடனே பயந்து டாக்டரிடம் ஓடக்கூடாது. முதலில் மயக்கம் வந்தவருக்கு முதலுதவி செய்துவிட்டுத்தான் அப்புறம் டாக்டருக்கு சொல்லி அனுப்ப வேண்டும். மூளைக்குப் போதுமான அளவுக்கு இரத்தம் போகாவிட்டால்தான் மயக்கம் வரும். ஆகையால் மயக்கம் வந்தவரைப் படுக்க வைக்கும் போது அவருடைய தலை சற்றுத் தாழ்வான இடத்தில் இருக்கும்படி சாய்த்துப் படுக்கவைக்க வேண்டும். தலைக்குத் தலையணை போடாவிட்டாலேயே தலை சற்றுத் தாழ்வான நிலையிலிருக்கும் அல்லது ஒரு நாற்காலியில் உட்காரவைத்து முன்னால் குனியும்படி செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் இரத்தம் மூளைக்கு வேகமாகப் போகும். மயக்கமடைந்தவர் அணிந்திருக்கும் உடைகளைத் தளர்த்திவிடவேண்டும். முகத்தில் இலேசாகச் சிறிது குளிர்ந்த நீரைத் தெளிக்க வேண்டும். மயக்கம் தெளிந்ததும் சூடாகக் கோப்பியோ டீயோ உடனே கொடுக்க வேண்டும்.

### எத்தனை கப் காப்பி குடிக்கலாம்

காப்பி இல்லாமல் பொழுது விடிவதில்லை என்று சொல்லுகிற அளவுக்கு வந்து விட்டது இப்போதுநிலைமை கிராமங்களில் உள்ளவர்கள்கூடக் காப்பி குடிக்கும் காலம் இது. காப்பி குடிப்பது நல்லதா கெட்டதா? காப்பியை அளவுடன் குடிப்பதால் தப்பு ஒன்றும் இல்லை. ஒரு நாளைக்கு இரண்டு அல்லது 3 கப் காப்பி குடிக்கலாம். இதற்குமேல் குடிக்கக் கூடாது ஒரு கப் காப்பியில் 150 மில்லிகிராம் கபேன் என்னும் சத்து இருக்கிறது. இந்தச் சத்து அதிகமானால் விஷம்! ஒருநாளைக்கு 3 கப் காப்பிக்கு மேல் குடிப்பவர்களுக்கு இருதய நோய்வரும். ஆகையால் காப்பியை அதிகமாகக் குடிப்பவர்கள் அதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

ஓரங்க நாடகம்

# அமரத்துவம்

— யாழ்வாணன் —

**பாத்திரங்கள்:-**

| | | |
|---|---|---|
| ஞானி | — | எழுத்தாளன் |
| கைலாசம் | — | ஞானியின் மாமன் |
| கமலம் | — | ஞானியின் மனைவி |
| மாதவன் | — | ஞானியின் நண்பன் |
| வேந்தன் | — | எழுத்தாளன் |
| தென்னவன் | — | எழுத்தாளன் |

இடம் வீடு:

## காட்சி (1)

இரவு 8 மணி. அந்த வீட்டின் பழமையான பிரிட்டிஷ் சுவர்க்கடிகாரம் பல முறை ஒலித்து அடங்குகிறது. சாதாரணமான அந்த வீட்டின் முன்கூடம் மிகவும் எளிமையாக காட்சி அளிக்கின்றது. அங்கு பழைய நாற்காலியில் அமர்ந்து புத்தகமொன்றினை ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்த கைலாசம் உணர்ச்சிவசப்பட்டவராக, அப் புத்தகத்தை மூடியவாறு எழுந்து வானத்தை நோக்கியபடி அசைவற்று நிற்கின்றார். அவரது விழிகளிலிருந்து நீர்முத்துக்கள் பொலபொலவென்று உதிர்ந்து அவரது பெனியனை நனைக்கின்றன. உதட்டைக் கடித்தபடி உள்ளக்குமுறலை அடக்கிக்கொள்கின்றார். ஆனால் அவரால் முடியவில்லை.

உதடுகள் துடிக்க......
வார்த்தைகள் கம்மிய குரலில்......
வெடிக்கின்றது.

கைலாசம்:- "வீட்டைச் சூழ்ந்துவரும் இருள் விழுங்கும் மெழுகு வர்த்தியின் ஒளியிலே சகல வஸ்துக்களும் துலாம்பரமாகத் தெரிகின்றன. ஆனால்...?

ஒளியை தந்த மெழுகு வர்த்தியின் கதி?... உருகி உருகித் தன் உருவத்தையே அழித்துக்கொள்கிறது. இது தான் உண்மையான இலட்சியவாதிக்குரிய இலட்சணம்"

ச்... (உணர்ச்சிப்பெருக்குடன்) ஞானி? என் மருகனே! நீ இதை எவ்வளவு அர்த்த புஷ்டியுடன் எழுதியிருக்கிறாய். 'ம்' ஞானி, உன்னுடைய நினைவு வருகிறபோதெல்லாம் நான் இதைப் படிச்சுப்படிச்சு ஆறுதல் அடைகின்றேன்.

(கண்ணீரை வடித்து எறிந்துவிட்டு மீண்டும் நாற்காலியில் அமர்ந்து கொள்கிறார்.)

கமலம்:- அப்பா.

கைலா: வா கமலம், பிள்ளைகளெல்லாம் தூங்கிவிட்டாங்களா...?

கம: உங்க மூணுவது பேரன் மட்டும்தான் இன்னும் தூங்கவில்லையப்பா. நீங்க இல்லாம அவன் படுக்கவே மாட்டானே. மணி எட்டாச்சு. சாப்பிட்டுவிட்டு தூங்கப் போங்க. அவனும் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கின்றான்.

கைலா: இல்லையம்மா, இன்னும் கொஞ்சம் வாசிக்கவேண்டும். நீ போய்ச் சாப்பிடு பிள்ளையை இங்கே அனுப்பிவிடு.

கம: அப்பா உங்களுக்கு வேறை வேலையில்லையா? இத்தக் கண்டறியாத புத்தகத்தை எத்தனை தடவை தான் படித்துத்துலைக்கிறீங்கள். பேசாமல் அதை வைத்துவிட்டு வாருங்கள். எனக்கு அலுப்பாய் இருக்கு. நேரத்துடன் படுக்கவேண்டும்.

கைலா: எத்தனையெத்தனை தடவைதான் படிச்சாலும் தெவிட்டாத தேனமுதம்மா இந்தப்புத்தகம். கமலம். (ஆர்வம் மேலிட) இது யார் எழுதினது சொல்லு பார்க்கலாம்?

கம: (வெறுப்புடன்) இது தெரியாதா அப்பா? நீங்க யாருடைய புத்தகத்தை அதுவும் திருப்பித் திருப்பிப் படிப்பீங்களென்று? இந்த வீட்டுப் பச்சைப்பிள்ளையிட்டைக் கேட்டாலே சொல்லிப்போடுமே அப்பா. எழுத்து, இலக்கியம், கூட்டம் படிப்பு அது இது என்று சொல்லிச் சொல்லித் தானே என்னை ஏமாற்றி இப்படி நிர்க்கதியாக்கிவிட்டுச் சென்றுவிட்டார். கதை கதை என்று எழுதிக் குவித்தாரே! இலட்சியம் பேசினாரே! அவற்றால் என்னத்தை கண்டுவிட்டோம். அவையெல்லாம் அவரோடையே போய்த்தொலையட்டும். நாங்கள் அழிந்ததுபோதும். இனிமேலும் அவற்றைப்பற்றிக் கதைக்காதீர்கள்.

கைலா: அம்மா கமலம், என் மருமகன் காலமாகிவிட்ட பின்பு அவன்பணியை இப்படி நீ தூக்கி எறிந்து பேசுவது அவ்வளவு நல்லாயில்லை. இந்த நாட்டின் தலைசிறந்த இலட்சியவாதியொருவனின் மனைவி என்ற அந்தஸ்தைக்கூட நீ புரிஞ்சுகொள்ளுகிறதாக இல்லை. கமலம் அவன் பெருமையில் கூட உனக்குப் பங்குண்டல்லவா......?

கம: பெருமையாம் பெருமை (வெறுப்புடன்) அப்பா இந்தப்பெருமையை வைத்துக் கொண்டு இந்த வயிறும் பிள்ளைகளும் வாழ முடியுமென்றால் அதற்காகவாவது பெருமைப்படலாம். ஆனால்...

கைலா: கமலம்...

கம: அப்பா அடிக்கடி நீங்க இதைத்தான் திருப்பித் திருப்பி 'இராமபோன் றெக்கோட்' போலச் சொல்லுகின்றீர்களே! இந்தப் பெருமையும் அந்தஸ்தும் என் பிள்ளைகளை வாழவைச்சிடுமா? அல்லது இழந்த என் செல்வத்தை மெல் திருப்பித் தந்திடுமா? சிறும் சிறப்புமாக மற்றவர்களைப் போல சமூகத்தில் வாழ வேண்டுமென்ற எண்ணம் என்னளவுகூட அவருக்கு இருக்கவில்லையே?

கைலா: (துயரமாக) இந்த அற்ப சுகங்களுக்காக அவன் வாழவில்லையம்மா

கம: பிறகு எவைகளுக்காக அவர் வாழ்ந்தார்...?

கைலா: அதை அறிகிற மனப்பக்குவம் உனக்கிருந்தால் இப்படிக் கேட்கவே மாட்டாய் கமலம்.

கம: இப்படித்தான் அவரும் அடிக்கடி சொல்லிச் சொல்லி என் வாயை அடக்கிப் போடுவார். இன்றைக்கு உங்களின்ரை பென்சன் காசும் இல்லையென்றால் நானும் பிள்ளைகளும் பிச்சை எடுத்துத்தான் சீவிக்க வேண்டியிருக்கும் அப்பா. சீவிக்கவேண்டியிருக்கும்.

கைலா: சமுதாயம் அதை மறந்துவிடாது.

கம: சமுதாயமாம் சமுதாயம். எந்தச் சமுதாயத்துக்காக எங்களைப் புறக்கணித்து இரவு பகல், என்று பாராமல் எழுதி எழுதிக் குவித்தாரோ, அந்தச்சமுதாயம் அவரைப் பற்றிச் சிந்தித்ததா? அல்லது எம்மைப்பற்றி இன்றுவரை சிந்தித்ததா? நன்றிகெட்ட இந்தச்சமுதாயத்தைப்பற்றி நாம் சிந்திப்பதில் என்ன இலாபம் அப்பா?

கைலா: (கையிலிருக்கும் புத்தகத்தைத் தூக்கிக் காட்டி) இத்தகைய நூல்கள் காலத்தையும் மிஞ்சிவாழக் கூடிய அறிவுக்கருவூலங்கள். இவற்றை அவர்களைப் படிக்கவைத்துச் சிந்திக்க வைப்பதுதான் அந்த இலாபம் கமலம்.

கம: ஐயோ அப்பா. முதல் உள்வீட்டைச் சுத்தமாக்கிக் கொண்டுதான் வெளிவீட்டைச் சுத்தமாக்க வேண்டுமப்பா.

கைலா: நறுமணத்தைக் கொடுக்க வேண்டுமென்றால் சந்தனக்கட்டை தேய்ந்து தான் ஆகவேண்டும்.

கம: போதும் அப்பா. போதும். உங்கள் வியாக்கியானம். ஒரு எழுத்தாளனுக்கு வாழ்க்கைப்படுவதை விட முட்டாள்தனம் வேறொன்றுமில்லை என்பதை நான் அனுபவமூலமாக அறிந்து கொண்டதே போதும்.

கைலா: கமலம்... (லைமாகச் சிரிக்கின்றார்) கமலம்.

கம: அப்பா.

கைலா: கொடைவள்ளல் கர்ணனின் மனைவி கூடத் தன் கணவன் தேரோட்டி மகன் என்ற ஒரே காரணத்திற்காக அவனை வெறுத்தாளாம். ஆனால்— அவன்சாவிற்குப் பின்னால்தான் முடிமன்னர் குலத்தவன் தன் கணவன் என்கின்ற உண்மையை அவளால் அறியமுடிந்தது.

கம: அப்பா! இப்ப எந்த உண்மையும் எனக்கு வேண்டாம். கடந்த காலத்தைப் பற்றி மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தி என்னை வேதனைப்படுத்தாதீர்கள். வாருங்கள் போய்ச் சாப்பிட்டுவிட்டுப் படுப்போம். (அவர் அவசரமாக உள்ளே திரும்புகிறசமயம் வெளியே செருப்பின்ஒலி கேட்கிறது.)

கைலா: யாரோ வருமாப் போலிருக்கே! (வெளியேயிருந்துவேந்தனும், தென்னவனும் உள்ளே வருகின்றார்கள், வேந்தன் கைகளில் ஒரு பைல் இருக்கிறது). வாருங்க. வாருங்க...

(அவர்கள் நாற்காலிகளில் அமர்கிறார்கள், கமலம் உள்ளே போகிறாள்). மருமகன் இருக்கின்ற போது அடிக்கடி இங்கே வருவீர்கள். அவன் போனதற்குப் பிறகு இன்றைக்குத்தான் வந்திருக்கிறீர்கள். அதுவும் இந்த வேகத்தில்.

வேந்தன்: உண்மைதான் ஐயா! நீங்கள் தவறாக அதை எடுத்துக்கொள்ளக்கூடாது. உங்கள் ஞானியினுடைய சிந்தனையில் இருந்து பிறக்கின்ற உயர்ந்தகருத்துக்கள் ஒவ்வொன்றும் எங்களை இங்கே காந்தம் போல் இழுத்துக் கொண்டிருந்தன. அவருடன் கதைக்கும் போதெல்லாம் புதுப்புது விஷயங்களை நாம் அவரிடமிருந்து கற்றுக்கொண்டிருந்தோம். ஆனால்...அவர் எங்களைத் திடீரென விட்டுப் பிரிந்தபிறகு...

கைலா: என்ன செய்வது. எங்கள் தலைவிதி அது. அவனுக்குக் கொடுக்கப்பட்ட வாழ்க்கையின்காலம் ரொம்பவும் சொற்பம்தான். அதற்காக யார்தான் என்ன செய்யமுடியும்...?

வேந்: ஞானியின் வாழ்க்கையின்காலம் சொற்பமாகவிருக்கலாம். ஆனால், அவர் படைத்த இலக்கியச்செல்வங்கள் சொற்பமான காலத்தவையல்ல. அவை காலத்தால் சாகாதவை. காலத்தைஎதிர்நீச்சலடித்து இன்றும், என்றும் நிலைத்து அவர் புகழ்பரப்பக் கூடியவை.

(தட்டில் தேநீருடன் அங்கு எதிர்ப்படும் கமலம் இவர்களது உரையாடலைக் கேட்டுக்கொண்டு வாசலிலேயே நிற்கின்றாள்.)

கைலா: (வேதனையுடன்) என்ன இருந்தாலும் இந்த இளவயதில்மூன்று குழந்தைகளுடன் கமலத்தை விதவையாக்கி விட்டு...... (மீண்டும் தொடர்ந்து பேசமுடியாமல் சால்வையால் வாயைப் பொத்திக் கொள்ளுகிறார். உடல் ஒரு முறை குலுங்கிக் கொள்கிறது. கமலம் பற்களைக் கடித்துத் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறாள்.)

வேந்: என்ன செய்வது? மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள். ஞானியின் பிரிவு உங்களுக்கு எவ்வளவு நஷ்டத்தையேற்படுத்தியுள்ளது என்பதை நாம் உணராமலில்லை. இத்தகைய சிந்தனையாளனை இலக்கிய உலகு நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் காண்கின்றது என்ற உண்மைக்குஇலக்கணமாகத் திகழ்ந்தவர் ஞானி அவர்கள். அவர்களை, ஈழத்து இலக்கிய உலகம் என்றும் மறவாது. அதிலும் அவரது நல்லிலக்கியப் புலத்துக்குப்பசளையிட்டுஉதவினை புரிந்த அவரது இலட்சிய மனைவியை -உங்கள் அருமை மகளை......

(பேச்சை முடிப்பதற்குள் கமலத்தின் கரங்களிலிருந்த தேநீர் 'தட்டு' கீழே விழுந்து பெரும் ஓசையுடன் சிதறுகிறது. ஓசையைக் கேட்ட வேந்தன் முதலியோர் திகைக்கின்றனர்.)

கைலா: கமலம்என்னம்மா இது...? பார்த்து வரக்கூடாதா? (அவள் ஒன்றும் கூறாமல் திகைத்துக் கதவு நிலையைப் பிடித்தபடி வெருண்ட நிலையில் கைலாசத்தைப் பார்த்தபடி)

கமலம்: அப்பா...நான்

வேந்: பரவாயில்லை. தங்களுக்குச் சிரமம் தந்ததிற்கு மன்னிக்கவும். எங்களுக்குப் பல வேலைகள் இருக்கு. அவற்றைக் கவனிக்க நாம் செல்ல வேண்டும். உங்களை முதலில் சந்தித்துப் போகத் தான் வந்தனான்.

கைலாசம்: இப்படிக்கிட்ட வா கமலம். (கமலம் அவர்கள் முன் வந்து தலையைக் குனிந்தபடி (நிற்கிறாள்)

(14-ம் பக்கம் பார்க்க)

# சிறுகதை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று மட்டுமல்ல இன்னும் அவனை நினைக்கும்போதெல்லாம் ஒரு கனிவு அவள் உள்ளத்தில் சுரந்து அவள் உருவை இரமாக வருடும். 'அ...வ...ர்' என்ற சொல்லுக்கும் நினைவுக்கும்மேல் அவன் பெயரையே மனதில் நினைக்கவும் கூசும் அவளுக்கல்லவா அந்தச் சொற்களைக் கூசாமல் கூறினான்.

அவனிடமிருந்து வந்த கடிதத்துடன் அவள் அவனிடம் சென்றபோது அவன் முகத்தைப் பார்த்ததும் அவன் மார்பில் முகம் புதைத்து அழவேண்டும்போல் தவிப்பாக இருக்கிறது அவளுக்கு. கழன்[illegible] இதயத்தைப் பிடித்து நிறுத்திய அவள் "நீங்கள்... நீ...ங்...க...ள் மனசறிந்துதான்... முடிவு செய்தீர்களா?" என்று கேட்டு விடுகிறாள்.

பூமா, உன்னில் எனக்கும் அன்பிருக்கிறது. ஆனால் ஏனோ இப்போவெல்லாம் உன்னைப் பார்க்கவேண்டும், பேசவேண்டும் என்ற துடிப்போ, ஆர்வமோ. நீ இல்லாமல் வாழமுடியாதென்ற எண்ணமோ ஏற்படுவதில்லை, உன்னுடன் வர வர ஒட்டவே முடியவில்லை, அதற்கு மாறாக நீ எனக்காகச் செய்யும் தியாகம் ஒவ்வொன்றும், நான் என் தாய்தந்தையருக்குச் செய்துவிட்ட துரோகங்களை நினைக்கவைக்கிறது. அவர்கள் இதயம் குளிர உன் உள்ளத்தை வெறுக்க நான் துணிந்து விட்டேன் பூமா! என்னை மன்னித்துவிடு!

பூமா தன்காதில் காய்ச்சிய ஈயம் பாய்ந்துவிட்ட வேதனையில் துடித்து விடுகிறாள்.

"ஆண்டவனே ... — இது உண்மையா? — ... உண்மையா..." அவளால் ஏற்றுக்கொள்ளவோ, சீரணிக்கவோ முடியவில்லை. நீண்ட நேரத்தின்பின் அவன் அவளைப்பார்த்தபோது அவள் இதயத்தின் கட்டுப்பாடு அவள் பார்வையில் தெரிகிறது.

'நான் உங்களை என்றுமே தனியே வைத்துப் பார்க்க நினைக்கவில்லை. அதனால் என்றுமே எனக்குள் நீங்களும், உங்களுக்குள் நானும் இரண்டறக்கலந்துவிட்டோம். நீங்களோ ... ... என்னை — என்றுமே ... தனியேதான் ... ... பார்த்திருக்கிறீங்க ...... அதனால்தான் ... உங்களால் ... என்னை ... விலக்க ... முடிந்தது—போங்கபோங்க...என் உள்ளம் ...என்விருப்பு...என் ஆசை ... பாசம் ... எல்லாவற்றையும் என்னிடமிருந்து பறித்துவிட்ட நீங்கள் ... ... இப்போ ... இப்போ ... என் வாழ்க்கையையும் கூசாமல் பறித்துவிட்டீங்களே ... ... அவள் ஆற்றமுடியாமல் கேவிவிடுகிறாள்.

"பூமா ... பூமா ...!" ஆனந்தன் அவள் வேதனைகண்டு பதறிவிடுகிறான்.

'பரவாயில்லை, என்றைக்கும் நான் உங்களைத் தூற்ற மாட்டேன் ... ஏனென்றால் ... ... நீங்க ... ... என்னுடன் இரண்டறக் கலந்து விட்டீங்க ... என்னையே ... நான் ... சபிப்பேனா ... போங்க ... போங்க ... பூமா அவனருகே நிற்கவே முடியாமல் ஓடி வருகிறாள். அன்று மரத்த அவள்உணர்ச்சிகளை...இன்று அதுவும் அவள் தோழி சாந்தா வெறிவிட்ட வேதனையில் அவள் அலமந்து போகிறாள்.

பூமா எழுந்துசென்று தன் பெட்டியிலிருந்த அவன் போட்டோவை எடுத்து உற்றுநோக்குகிறாள். அதை நோக்கும்போது அவள் இதயத்தில் இருக்கும்அவன்உருவமே வெளிதாவதுபோன்ற பிரமை தட்டுகிறது.

... நீங்கள் என்னை மறந்திருக்கலாம். நான் ... மறக்கவில்லை. நீங்கள் எனக்குத் துரோகம் செய்திருக்கலாம். நான் செய்யமாட்டேன். ... பார்த்துக் கொண்டே இருங்கள் ... என்றவள் தன் துடிக்கும் உதடுகளைப் பற்களால் கடித்து உணர்ச்சிகளை மறுவடியும் இதயப்பேழையில் பூட்ட முனைகிறாள். அவள்விட மறந்துவிட்ட கண்ணீர்தான் மழையாகப் பொழிகிறதோ? எப்படியிருந்தாலும் தன்னில் அவளுக்கு நம்பிக்கையிருக்கிறது!

எந்தச் சாந்தாவாலும் அவளை மாற்றமுடியாது!

(யாவும் கற்பனை.)

# புதன் மேடும் அதன் குறிகளும்

சென்ற தொடர்களில் B-பகுதி மேடாகிய சனி மேட்டையும், சனிமேட்டுடன் தொடர்புள்ளதாகிய (ரேகை இலக்கம்-1) விதி ரேகையையும், C-பகுதி மேடாகிய சூரிய மேட்டையும், சூரிய மேட்டுடன் தொடர்புள்ளதாகிய சூரிய ரேகையில் (ரேகை இலக்கம் - 5) பற்றிப் பார்த்தோம்' அத்துடன் அந்த மேடுகளில் காணப்படும் குறிகளினதும், இவைகளினதும் பலாபலன்களையும், தன்மைகளையும் பற்றிச் சிறிது அறிந்தோம். படத்தில்தெரிவதுபோல dமேடாகிய புதன் மேட்டையும் அதுசம்பந்தமான விடயங்களையும்பற்றிப் பார்ப்பது நன்மை பயக்குமல்லவா? (விளக்கத்திற்குப் படத்தைப் பார்க்கவும்.)

படத்தில் தெரிவதுபோல் சுண்டுவிரலுக்கு அடிப்பாகம் (d - பகுதி) புதன்மேடுஎனப்படும். புதன்மேடு பிரதானமாகக் கல்விக்குரிய மேடாகும். கல்விக்குரிய மேடு என்று கூறும்பொழுது, கல்வி சம்பந்தமான சகல விடயங்களையும் அடக்கியுள்ளதென்பது புலனாகின்றது. மேலும் புதன்மேடு விசேடமாக கணக்குப் பகுதிகளுக்கெல்லாம் ஆதாரமாகின்றது. கல்வி முன்னேற்றமும், கல்வி சம்பந்தமான கணிதப்பகுதியாகியவைகள் எல்லாம் அடங்கும். புதன்மேடு காணப்படாவிடில்கல்விமந்த நிலையிலிருக்கும். இன்னும் எண்ணிக்கைக்குள்ள கணக்குகளில் சிறிதும் விருப்பமுண்டாகாது.

புதன்மேடு சாதாரணமாக அமைந்து இருப்பது விரும்பக்கூடியதாகும். ஒருவருக்கு சாதாரணமாக மேடு அமைந்திருந்தால் அன்னார் எந்த ஒரு விடயத்தையும் தீர்க்கமாகச் சிந்தித்து முடிப்பர். அன்னார் உற்சாகமுள்ளவராகவும், விநோதமாகவும் வேடிக்கையாகவும் பேசும் திறமையுள்ளவராகவும், கணக்கில் துரிதமுள்ளவராயும் படித்துப் பயனடைபவராயும், புதுமையான விசயங்களைக் கண்டுபிடிப்பதில் சிறந்த புத்திக்கூர்மையுள்ளவராகவும் பிரயாணத்தில் ஆர்வமுள்ளவராயும் சாஸ்திரங்களில் ஆராய்ச்சி உள்ளவராகவும் காணப்படுவர். (விரல்களைப்பற்றிய விடயங்களை வரவிருக்கும் அத்தியாயங்களில் அறியலாம்) விரல்களின் தன்மைகளுக்கேற்றவாறு புதன்மேடும் நன்கு அமைந்திருந்தால் அப்படியுள்ளவர்கள் ரெனிஸ், கிரிக்கட் முதலிய விளையாட்டுக்களில் கீர்த்தியுள்ளவராகவும் காணப்படுவர். மேலும் சிலர் சிறந்த வக்கீல்களாகவும் திகழ்வர்.

## கைரேகை அனுபவம் — 7


குறியுள்ளவர்கள் பொதுவாகப் பேய் பிசாசு என்ற கொள்கைகளையுடையவராகவும், மந்திரவாதிகளுடன் அதிகம் சிநேகிதம் கொள்பவருமாயிருப்பர். புதன் மேட்டில் தனித்த ரேகை சூலமாகஆரம்பித்து, அதன் மத்தியில் தீவு போன்ற குறியும் அமையப்பெற்று, சூரிய ரேகையும் குறுக்கிடுமாயின் துரதிர்ஷ்டத்தைக் குறிப்பதாகும். சிலர் மிகவும் சுறுசுறுப்புள்ளவர்களாகவும், விஞ்ஞான பாடங்களில் விசேடமாக கணக்குப்பகுதியில் கெட்டித்தனமாகவும் விளங்குவர். இத்தகைய தன்மையுள்ளவர்களின் கைகளில், புதன் மேட்டில் சிறுரேகைகள் முன்னும் பின்னுமாய் இருக்கக் காணலாம்.

புதன்மேடு அளவுக்கு மிஞ்சிப்பெரிதாயிருப்பின், முற்றிலும் தீயபலன்களையே கொடுக்கும். புதன் மேடு சாதாரணமாய் அமைந்திருக்கும் தன்மையினால் ஏற்படும் பலன்களுக்கு எதிர்மாறாகவே பலன்கள் நிகழ்கின்றன். புதன்மேடு அதிதமாகக் காணப்பட்டால், அன்னார் மற்றவர்களை வஞ்சிக்கக்கூடியவராகவும், கபடியாகவும், கொள்ளையடிக்கும் எண்ணமுள்ளவராகவும் காணப்படுவர். அன்னார் எவ்வகையிலும் பணம் சம்பாதிக்கவேண்டுமென்றஎண்ணம் உள்ளவராகக் காணப்படுவார். அவர் மிகுந்த சந்தேகியாகவும் கெட்ட எண்ணமுடையவராகவும் இருப்பர். சோதிடம் அல்லது ரேகை சாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டு பணம் தேடவேண்டுமெனவும் எண்ணுவர்.

படத்தில் தெரிவதுபோல் D பகுதி மேட்டைப் பார்க்கவும். இந்தமேடு புதன்மேடு எனப்படும். பொதுவாக எல்லோருடைய கைகளிலும் எல்லா அடையாளங்களையும் ஒரு மேட்டில் காண்பதரிது. சிலருடைய கையின் மேடுகளில் இருக்கும் அடையாளம் சிலருடைய கையின் மேடுகளில் இருப்பதில்லை. கையிலுள்ள மேடுகளில் கறுப்பு, சிவப்பு, வெண்மை போன்ற அடையாளங்களைக் காணலாம். மேலும் கையிலுள்ள மேடுகளில் சூலம், நட்சத்திரம், முக்கோணம், சதுரம் போன்ற குறிகளைக் காணலாம். இவ்வடையாளங்கள் எல்லாம் தோன்றிப் பின்சில காலங்களுள் மறைகின்றன. சில குறிகள் நிரந்தரமாய் இருக்கும். ஆனால் படத்தில் தெரிவது போல் பிரதானமான ரேகைகள் என்றுமே மறைவதில்லை. பலன்களும் அதற்கேற்றவாறு நிகழ்கின்றன. புதன்மேட்டில் ஒரு புள்ளி காணப்படில் தொழிலில் நஷ்டம் உண்டாகும். மேலும் அந்த மேட்டில் சூலம், நட்சத்திரம், ஏணி போன்ற குறிகள் காணப்படில், அன்னார் திருட்டுப் புத்தியுள்ளவராயும், மோசக்காரராயும், கொள்ளையடிக்கும் தொழிலையுடையவராகவும் காணப்படுவர். புதன் மேட்டில் ஒரு தனித்த ரேகையோ அல்லது முக்கோணமோவிருத்தல் அதிர்ஷ்டத்தைக்கொடுக்கும். பொதுவாகக் கிரக மேடுகளில் கறுப்போ அல்லது சிவப்புப்புள்ளியோ காணப்படில் அது தீங்குக்குரியதாகும். புதன்மேட்டில் வட்டம் காணப்படில் நீரினால் விபத்து ஏற்படும்.

சிலருடையகையில் சூலம் போன்ற குறியோடு ஒரு ரேகைபுதன்மேட்டை நோக்கிச்செல்வதைக் காணலாம். அத்தகைய குறியுள்ளவர்கள் பொதுவாக மந்திர சக்திகளை உபயோகப்படுத்துவதில் ஆர்வமுள்ளவர்களாகவும். தங்களுடைய எதிரிகளை அடக்குவதற்கு மந்திரங்கள்மூலம் மாயம் செய்ய முற்படுபவர்களாகவும் காணப்படுவர். இத்தகைய சிலர் தாம் எவ்வளவு முயற்சி செய்தும் பணத்தைத் தேட முற்பட்டபொழுதும் மிச்சம் பிடிக்க முடியவில்லையே என்று மனவருத்தமடைவர். அவர்களது வாழ்வில் அவர்கள் வரவுக்கு அதிகமாகவே செலவு செய்துகொள்வர். தீர்மானித்துச் சில செலவினங்களைச் சுருக்கிக் கொண்ட பொழுதும் எதிர்பாராமல் அதிக செலவு ஏற்படுகின்றது. இவற்றிற்கு விரல்களின் அமைப்பும்ஒரு காரணமாகின்றது. இவற்றைப் பற்றி வரவிருக்கின்ற அத்தியாயங்களில் அறியலாம். ஆனால்ஒருவருடைய கையில் புதன்மேட்டில் பல கலப்புள்ள ரேகைகள் இருக்ககாணலாம். பல கலப்புள்ளரேகைகள் என்று கூறும்பொழுது அது பலவிதமான தோற்றமுள்ள ரேகைகள் என்பதுதான் பொருள். இவ்வாறு பல கலப்புள்ள ரேகைகள் இருதயரேகையை நோக்கிச் சென்றிருந்தால் அன்னார் தாராளமான கொள்கையோடு பணத்தைச் செலவு செய்வர் என்பதைக் குறிக்கும்.

புதன் மேட்டின் தன்மைகளையும், புதன்மேட்டில் காணப்படும் குறிகளையும், அதன் பலன்களையும் பற்றிப் பார்த்தோம். படத்தில் தெரிவதுபோல் புதன் மேட்டருகில் (டி பகுதி) ரேகை இலக்கம் 4ஐப் பார்க்கவும். இந்தரேகை சுண்டு விரலுக்கடியில் இருதய ரேகைக்கு (ரேகை இலக்கம் -3) மேல் அமைந்துள்ளது. இந்த ரேகையை விவாக ரேகை அல்லது ஐக்கியரேகை என்பர். இந்த ரேகை பிரதானமாக விவாகத்திற்கும், விவாக சம்பந்தமான ஏனைய விடயங்களுக்கும் ஆதாரமாக இருக்கின்றது. சிலருடைய கையில் ஐக்கியரேகை (ரேகை இலக்கம் -4) ஒன்று இருக்கக் காணலாம். சிலருடைய கையில் இரண்டு அல்லது மூன்று ஐக்கிய ரேகைகள் இருக்கக் காணலாம். இவற்றிற்கெல்லாம் பலன் ஏனைய மேடுகளினதும் ரேகைகளினதும் தன்மையைப் பொறுத்தே நிகழ்கின்றது. சுண்டு விரலின் அடிப்பாகத்திலிருந்து அதாவது மூன்றாவது அங்குலாஸ்தியிலிருந்து எவ்வளவு இடைவெளி தூரத்திற்கு ஐக்கியரேகை அமைந்துள்ளதோ அவ்வளவிற்கேற்றாற்போலக் காலத்தின் எல்லையும் கணிக்கப்படுகின்றது. சிலர் விவாகத்தை நிச்சயித்தவிட்டு பின் குழப்பி விடுகின்றனர். சிலரின் நிச்சயித்த விவாகம் பல காரணங்களாலும் தாமாகவே குழம்பி விடுகின்றது. சிலரின் விவாகம் எதிர்பாராமலும் எண்ணாமலும் நடந்தேறுகின்றது. சிலர் காதலித்த பெண்ணையே விவாகம் செய்கின்றனர். சிலர் காதலில் தோல்வியுற்று விவாகம் செய்யாமலே இருந்து விடுகின்றனர். சிலர் விவாகம் செய்தும் பிள்ளைகளில்லாதிருக்கின்றனர். இவற்றைப் பற்றிய தன்மைகளை ஐக்கிய ரேகையோடு சம்பந்தப்பட்ட ஏனைய ரேகைகளுடனும் அறியலாம். இவற்றைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.



— மு. குணரத்தினம் —

'ஈழநாடு' பரிசு பெற்ற காவியம்

# தித்திக்கும் தேன் நிலவோ!

— ச. வே. பஞ்சாட்சரம் —

## 12. நச்சிப்பிச்சி!

இளமை யழகை மூடிப் போர்த்த
எளிய காவி ஆடை யோடு
கழுத்தில் உருத்தி ராட்ச மாலை
கட்டிக் கொண்டு கொடி தொடர்வள்!

மடங்கள் தம்மில் அன்ன தானம்
வழங்கும் நச்சிக் குதவியாக
ஒடுங்கு மடுங்கி ஓடி ஓடி
உணவை யாக்கிப் படைப்பள் யார்க்கும்!

கோயில் மண்ட பத்த மர்ந்து
கொடிபு ராணம் பார்த்துப் பாட
தூய நச்சி எதிர மர்ந்து
சொல்வள் பயனும் பக்தர் மகிழ!

மரநி ழற்கீழ் அமர்ந்து நச்சி
வான றங்கள் கூறக் கேட்டு
திருநி றைந்த கொடி பணிந்து
சிந்தை மகிழ்ந்து கேட்டி ருப்பாள்!

இத்த னையுமே பகத்க ளுவில்
எழுந்த வைகள் கொடியின் நெஞ்சில்!
பத்தி நெஞ்சன் நச்சித் தெய்வம்
படிய விட்ட கற்பனைகள்!

கூத்தி றைவன் காட்சி நல்கும்
கொடியின் இனிய பாடல்கேட்டு
பார்த்துத் தானும் பாடிப் பாடிப்
பழகி விட்டான் இனிது பாட!

கொடியின் வீட்டில் மட்டு மிறையைக்
கூடி வந்த நச்சி நினைத்த
இடங்க ளெல்லாம் பாடிப் பாடி
இறையைக் காணத் தொடங்கிவிட்டான்!

நச்சி வருகை நாடுங் கொடியோ
நாளும் வருகை குறைந்ததாலே
பிச்சுப் பிடித்த நிலையில் வீட்டில்
பெருகவிழியில் நீரிருந்தாள்!

தோட்ட வரம்பில் நிற்கும் போதும்
தொட்டில் மாட்டோ டிருக்கும்போதும்
வீட்டுக் குள்ளே சமைக்கும்போதும்
வெளியில் நடந்து செல்லும்போதும்

கோயில் குளங்கள் போகும்போதும்
கொடுக்கல் வாங்கல் செய்யும்போதும்
வாயில் முழங்கும் பாட்டி னாலே
மனதில் விளங்கும் இறைவன்கூத்து!

முத்தித் தலைவன் முனைவ னோடு
முயங்கும் மனைவி ஆன்மா எய்தல்
தித்திக் கும்நல் தேன்நி லாவோ
சிந்தை அள்ளும் அமுதக் கூத்தோ!

(வளரும்)

# அமரத்துவம்

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

வேந்: உங்கள் கணவரின் இலக்கியச் சேவையைக் கௌரவித்து எமது இலக்கியப் பேரவை விழாவொன்றினை நடாத்தி அன்னாரின் நூல் ஒன்றினை வெளியிட முடிவு செய்துள்ளது.

கைலா: (ஆவலாக) என் மருமகளுக்கா ......

வேந்: ஆமாம் ஐயா.

(தென்னவன் பையில் இருந்தொரு புத்தகத்தை எடுத்து வேந்தனிடம் கொடுக்க, அவன் அதனைக் கமலத்திடம் கொடுத்து ... ...)

இந்தாருங்கள் அம்மணி. அமரத்துவம். உங்கள் கணவரின் சிறு கதைத் தொகுப்பு விழாவில் உங்கள் கரங்களினாலேயே இதனை வெளியிட்டு வைக்க வேண்டுமென நாம் விரும்புகிறோம்.

கம: (நடுக்கத்துடன்) என் கைகளினாலா ......... ?

வேந்: ஆம். உங்கள் கைகளினால்தான் வெளியிட வேண்டும். சமுதாயம் என்ற வீட்டைச் சூழ்ந்த இருள் அழிந்து, ஒளியுமிழுவதற்கு எண்ணெயும், தூண்டிலுமாக இருந்த உங்களைத் தவிர இதற்கு வேறு யாருக்குத்தான் தகுதியுண்டு.

கம: நீங்கள் (ஆச்சரியமா) உண்மையாகத்தான் சொல்லுகிறீர்களா?

வேந்; நிச்சயமாக. தனிப் பூவிற்கு இல்லாத பெருமை மாலைக்கு உண்டு. சிறந்த எழுத்தாளன் என்னும் மாலையைத் தொடுக்க உதவியும், ஒத்தாசையும் புரிந்தவராக விளங்கிய உங்களைத் தவிர வேறு யாருக்கும் இந்தப் பாக்கியம் கிடைப்பது நியாயமாகாது.

கம: (தடுமாற்றத்துடன்) என்னங்க சொல்லுகிறீங்க... நான்......

வேந்: விழாவில் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைக்கிறீங்களா?

கம: (திடீரெனக் குமுறி அழுகிறாள்) அப்பா!

கைலா: (ஆவலாக) சொல்லம்மா......

(அவள் பெருங் குரலில் குமுறிக் குமுறி அழுகின்றாள். அவர்கள் ஒரு விநாடி திகைத்து விடுகின்றனர்.)

கமலம்!...என்னம்மா இது...? அவர்கள்! ?

வேந்: வேண்டாம் ஐயா. அவர்களைக் குழப்பாதீர்கள். மிகவும் உணர்ச்சி வசப்பட்டு விட்டார்கள். நாளைக் காலையில் நான் வருகிறேன். முடிவைச் சொன்னால் போதும்.

கைலா' போய் வாருங்கள் (அவர்களுடன் கைலாசமும் வெளியே சென்று விடுகிறார். குமுறிக் கொண்டு வரும் உள்ளத்தை அடக்க முடியாதவளாக உள்ளே செல்ல வேகமாகத் திரும்பிய கமலத்தின் கால்களில் சிதறிய தேநீர்க் கோப்பைத் துண்டு குத்த அவள் வீரிடுகிறாள்)

(அடுத்த வாரம் முடியும்)

# தீ மிதித்தலின்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கொதிக்கின்ற தண்ணீரில் அல்லது எண்ணெயில் அல்லது உருக்கிய ஈயத்தில் கையை அமிழ்த்தி அதிலிருந்து ஒரு கல்லையோ அல்லது மோதிரத்தையோ எடுப்பது இன்னொருவகையிலான அக்கினிச் சோதனையாகும். ஆபிரிக்கா, ஆசியாக் கண்டங்களின் சில பகுதிகளில் இவை இன்னும் வழக்கிலிருக்கிறதாம். நீக்ரோ இனத்தினர் கொதிக்கும் எண்ணெயையும் பர்மியர்கள் உருக்கிய ஈயத்தையும் பயன்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது.

கற்புக்கரசி கண்ணகி மதுரையை எரித்தபோது
பார்ப்பார், அறவோர்,
பசு, பத்தினிப் பெண்டிர்
மூத்தோர், குழவி
எனுமிவரைக்
கைவிட்டுத்
தீத் திறத்தார் பக்கமே
சேர்க என்று காய்த்திய
பொற்றொடி ஏவப்
புகை அழல் மண்டிற்றே

நற்றேரான் கூடல் நகர் என்று சிலப்பதிகாரம் பகர்கிறது. இச்சம்பவமும் இத்தகையதுதானோ?

# வெளிநாட்டு பிரமுகர்களுக்கு...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்து நீதிமன்றம் போல் பல சிறு சண்டை சச்சரவுகளைத் தீர்த்தும் வைத்துள்ளது. இதனால் கோடு ஏறாமல் சிக்கல்கள் தீர்ந்ததுண்டு. எல்லாத் தொண்டிலும் தலையாய தொண்டாக நாயன்மார் குருபூசைகள் நடாத்துதல், திருக்கேதீச்சரம்போன்ற திருத்தல யாத்திரைகளை நடாத்துதல், சமய தீட்சைவைப்பித்தல் என்பனவற்றைப் பெருந்தொண்டாகப் புரிகின்றது. இத்தகைய தொண்டுகள் காரணமாக இச்சபையை யாழ். குடாநாட்டின் முதல்தரசபை என அரசாங்கம் தீர்மானித்து 1954-ல் அதிகார் நாகநாதர் கேடயத்தை அளித்தது. 1935-ம் ஆண்டு முதல் இச்சபை செய்த அரிய சேவை குரும்பசிட்டிச் சரித்திரத்தில் ஆணித்தரமான செல்வாக்கைப் பெற்றிருக்கிறது.

எமது கிராமத்தின் மேற்குப்பகுதியை அணி செய்யும் ஸ்தாபனம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபமாகும். இதற்கு அணித்தாய் ஒரு திறந்தவெளிஅரங்கு உண்டு. கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நூல் நிலையம் ஒன்று இயங்குகிறது. மக்களின் தேவைகளை அரசாங்கத்திடம் பெற அரும்பாடுபடுகிறது இச்சங்கம். இதன் முனைப்பால் நிறுவப்பட்ட நெசவுசாலை எம்மூர் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இந்த மண்டபத்தே இயங்கும் இன்னொரு இளைஞர் இயக்கம் உதயதாரகை மன்றமாகும். . விளையாட்டுத்துறையில் இது நற்பணி புரிகிறது. அகில இலங்கை ரீதியில் போட்டியமைத்து பரிசுகள் அளித்து இத்துறையை ஊக்குவிக்கிறது. இத்துறையில் இம்மன்றம் ஆற்றும் சேவையை யாழ். பிராந்திய விளையாட்டுத் துறை வல்லுநர்கள் பாராட்டுகின்றனர்.

எமது கிராமத்தின் கிழக்குப் பக்கத்தேயும் வளர்மதி சனசமூக நிலையமும் அதனுடன் பிணைந்த ஒரு இளைஞர் மன்றமும் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டன. கலை-கல்வி-விளையாட்டுத் துறைகளில் இளைஞர்களின் வளர்ச்சியை இலக்காகக் கொண்டு இவை பணியாற்றுகின்றன. சில சிரமதான இயக்கங்களையும் புரிந்துள்ளன. இதைவிட மாதர் சங்கமொன்றும் மாதர் நலம்கருதி காலத்துக்குக்காலம் நற்பணிபுரிகிறது. குரும்பசிட்டி நலன்புரி சங்கம் ஒன்றை வெளியூரில் வேலை செய்பவர்கள் அமைத்து அதன்மூலம் நிதி திரட்டி எமது ஊர் பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுகிறார்கள். இதில் உள்ள பல இளம் கலைஞர்கள் 'கமலாலயம்' என்ற கலை நிறுவனத்தில் பங்கு கொண்டு கொழும்பு மற்றும், பல இடங்களில் நாடகங்களும் மேடையிடுகிறார்கள்.

எமது கிராமத்தில் நன்கு வேரூன்றியஇயக்கம் ஐக்கிய இயக்கமாகும். 300 குடிகள் உள்ள சிறு ஊரில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சன்மார்க்க ஐக்கிய நாணய சங்கம், சன்மார்க்க மாதர் ஐக்கிய நாணய சங்கம், குரும்பசிட்டி ஐக்கியநாணய சங்கம் என நான்கு கூட்டுறவு இயக்கங்கள் இருக்கின்றன. இரு ஐக்கிய நாணய சங்கங்கள் 'ஏ' தரத்திலும், மாதர் ஐக்கிய நாணய சங்கம் 'பி' தரத்திலும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் 50,000 ரூபா சொந்த மூலதனம் கொண்டதாகவும் இருப்பது எமது சிற்றூரின் பெருநோக்கைக் காட்டுகின்றன. எந்தக் குடிமகனும் ஐக்கிய இயக்கத்தில் ஈடுபடாமல் இல்லை என்ற நிலை ஒரு முற்போக்கு நிலையே. முதலாளித்துவம் உக்கிர வேகம் கொள்ளாத நிலைக்கும் இதுவே காரணம். இதைவிட எமது ஊரில் ஒரு மின்தறி நெசவு நிலையமும், மூன்று முக்கிய சுருட்டுத் தொழில் நிலையங்களும் இருக்கின்றன. இருநூறுக்கு மேற்பட்டோர் தொழில் புரியும் இவைகளும் எமது ஊர் செல்வங்களே,

[தொடரும்]

# நமது நாட்டுப் பொருளாதார

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விச் சுத்தஞ்செய்யப்படுகிறது.

## பதனிடுதல்

இதன்பின்னரும் கூழ் இரசாயனப் பொருட்களிலிருந்தும், இதர புறப்பொருட்களிலிருந்தும் கூழைப் பிரித்தெடுப்பதற்காக அது கழுவப்பட்டு, கழுவக்கூடிய நார்களைக் கூழிலிருந்து தெரிவுசெய்வதற்கு ஓர் அரிக்கும் இயந்திரத்தினூடாகச் செலுத்தப்படுகிறது. பச்சை நிறமான இக்கூழ் ஒரு பிரமாண்டமான கொங்கிறீற் தொட்டியில் சேகரித்துவைக்கப்படுமுன் இரசாயனப் பொருட்களாகிய குளோரின் முதலியவற்றைக்கொண்டு வெளிறச்செய்யப்படுகிறது.

காகித உற்பத்தியின் அடுத்த கட்டத்தில் பதப்படுத்தப்படாத இக்கூழ் (கையிருப்பு), இறக்குமதிசெய்யப்பட்ட மரக்கூழுடன் கலக்கப்படுகிறது. இவ்விரு பொருட்களும் பலதரப்பட்ட அளவுகளில் கலக்கப்படுமுன் அடித்து செம்மையாக்கப்படுகின்றன. மையையும் தண்ணீரையும்எதிர்த்து நிற்கக்கூடியதாகவும்; மேலும் காகிதத்தினது தரத்தை உயர்த்தும் பொருட்டும் கலக்கப்பட்ட கூழில் சீனக்களிமண் அலம், ரெசின் போன்ற இரசாயனப்பொருட்கள் கலக்கப்படுகின்றன. இக்கட்டத்தில் வர்ணக் காகிதங்களைத் தயாரித்தற்காக சாயங்களும் சேர்க்கப்படுகின்றன. இனி இந்தக்கூழ் ஒரு சுத்திகரிப்பு இயந்திரத்தினூடாகச் செலுத்தப்படுகின்றது: இவ்வாறுசுத்திகரிக்கப்பட்டபின் இக்கூழில் மேற்கொண்டும் தண்ணீர் சேர்க்கப்படுகின்றது. எனவே இக்கலவையில் இப்பொழுது 99 1/2 பாகத் தண்ணீருக்கு அரைப் பாகக்கூழ்மட்டுமேஉள்ளது. இவ்வளவு தண்ணீரைக் கொண்ட இக்கலவை, காகித இயந்திரத்தினுட்செலுத்தப்படுமுன் ஒரு மென்மையான திரையினூடாக அனுப்பப்படுகிறது.

## இயந்திரம்

காகித இயந்திரத்தில் ஈரலிப்பு எல்லை, வரண்டஎல்லை ஆகிய இரண்டு பாகங்கள் உள: கூழ் ஈரலிப்பு எல்லையினூடாக இயந்திரத்தில் பிரவேசித்து ஒரு வலைக்கண் வழியாக உறிஞ்சு பெட்டிகள் மீதாகவும், பாரமான அச்சு உருள்களுக்கிடையிலாகவும் செல்கின்றது: நிமிடத்துக்கு 400 அடி வேகத்தில் செல்லும் இக் கூழிலிருந்து தண்ணீர் படிப்படியாகப் பிழிந்தெடுக்கப்படுகிறது: ஈரமெதுவும் எஞ்சியிருக்குமானால்அது வரண்ட எல்லையிலுள்ள, நீராவியினால் சூடாக்கப்பட்ட, உலர்த்தும் உருளைகளின் மீதாகக் காகிதம் செல்லும்போது, நீராவியாக வெளிப்பட்டுவிடுகிறது. இங்கு உருவாகிய ஈரக் காகிதம் வரண்ட எல்லைக்குச் செல்லுமுன் ஒரு நீர்த்தாரை ஈரக் காகிதத்தை (கூழ்க்கலவை) தேவையான அளவில்வெட்டுகிறது.

உற்பத்தியாக்கப்பட்ட காகிதம், இக்கட்டத்தில் இன்னும் கரடுமுரடானதாகவும் நேர்த்தியற்றுமே காணப்படுகிறது.

## மெருகூட்டல்

ஒன்றையொன்று அழுத்தும் அதிகம்மினுக்கியஉருக்கு சடங்களைக்கொண்டகலண்டர்என்றழைக்கப்படும் ஓர் இயந்திரத்தைக் கொண்டு காகிதத்துக்கு மெருகூட்டப்படுகின்றது. இவ்வாறு மெருகூட்டப்பட்டுத் தயாரான காகிதம் தேவையான அளவுகளில்வெட்டப்பட்டு உருளைகளில் சுற்றப்படுகிறது.

இந்தக் காகிதத்தில் ஒரு பகுதி, விசேட இயந்திரங்களைக்கொண்டு பல்வேறு பொருட்களாக மாற்றப்படுகிறது. உதாரணமாக கொப்பி, புத்தகங்கள் முற்றுமுழுக்கத் தன்னியக்க முறையில் (Automatic) ஒரு நவீன இயந்திரத்தில் மணித்தியாலத்துக்கு 6,000 வீதம் உற்பத்திசெய்யப்படுகிறது. இன்னுமோர் இயந்திரத்தில் உயர்ந்தர மேலுறைக் காகிதம், சீனி, சிமெந்து, தேங்காய்த்துருவல் கோழித்தீனி முதலானவற்றை அடைத்தற்குப் பைகளாக மாற்றப்படுகிறது. மேலும் இரண்டு இயந்திரங்கள் பஸ் பிரயாணச் சீட்டுக் கருவிகள், கூட்டல்மானிகள் ஆகியவற்றிற்குத் தேவையான சிறிய காகிதச் சுருள்களைத் தயாரிக்கின்றன.

நீங்கள் யாவரும் அன்றாடம் பலவகைகளிலும் உபயோகிக்கும் காகிதம் எமது நாட்டு மூலப் பொருட்களிலிருந்து எம் தொழிற்சாலையில் எவ்வாறு தயாராகின்றது என்பதை நான் இதுவரை சுருக்கமாகக் கூறினேன்.

இவ் உற்பத்திமுறைகளைப் பற்றி மேலும் அறிய ஆவலுடையவர்கள் தொழிற்சாலைக்குச் செல்வார்களானால், அது ஓர் சுவையுள்ளதும் பயனுள்ளதுமான அநுபவமாயிக்கும் என்பதில் ஐயமில்லை.

காகித உற்பத்தியுடன், காகிதத்திலிருந்து பிற பொருட்களைச் செய்யும் வேலையும் ஓரளவுக்கு இங்கு நடைபெறுகிறது. கடந்த ஆண்டு நிறுவப்பட்ட ஓர் இயந்திரம் மணித்தியாலம் ஒன்றுக்கு 6,000 அப்பியாசக்கொப்பிகளைத் தயாரிக்க வல்லது. மாணவர்களுக்குப் பெரும்பாலும் உபயோகமாகும். இக்கொப்பிகள் இலங்கையில் ஆண்டொன்றுக்கு 20 லட்சத்துக்கு மேலாக தேவைப்படுகின்றது. மேலும் சிமெந்துத் தொழிற்சாலையிலும், ஏனைய துறைகளிலும் பயன்படக்கூடிய பலவடிக்கு காகிதப் பைகளை உற்பத்திசெய்யவும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை உற்பத்தி ஆரம்பித்த ஆண்டொன்றுக்கு சுமார் 180 லட்சம் காகிதப்பைகள் உற்பத்தியாகின.

தொழிற்சாலைக்குத்தேவையான இரசாயனப் பொருட்களில் சிலவற்றையே இலங்கையில் பெறமுடிகிறது. குளோரீன், எரிசோடா (Caustic soda) வெண்மையூட்டுவதற்கு வேண்டிய சுண்ணம்பு என்பன பரந்தனில் உள்ள இரசாயனச்சாலையிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகிறது. தண்ணீரைப் பதமாக்குவதற்கு வேண்டிய சுண்ணம்பும் இங்கேயே கிடைக்கின்றது. ஆனால் அலம், சீனக்களிமண், ரெசின், சோடாச் சாம்பல் போன்ற பல இரசாயனப் பொருட்கள் இன்னமும் வெளிநாட்டில் இருந்தே பெறப்படுகிறது.

காகித உற்பத்திக்கும் ஏனைய உபயோகங்களுக்கும் வேண்டிய தண்ணீர்தொழிற்சாலையிலிருந்து ஆறுமைல் தூரத்தில் உள்ள வாகனேரி குளத்திலிருந்து பெறப்படுகின்றது. நாளொன்றுக்கு 15 லட்சம் கலன்வீதம் பெருந்தொகையான தண்ணீர் அங்கிருந்து பெறப்படுகிறது.

## வெளிநாட்டு நாணய சேமிப்பு

எமக்குக் கிடைக்கும் காகிதம் எப்பொழுதுமேஉயர்ந்த தரத்தினதாக இருத்தலை உறுதிப்படுத்துவதற்காக அதன் சக்தி முதலான பல்வேறு தன்மைகளையிட்டு நன்கு பரிட்சிக்கப்பட்டபின்னரே உற்பத்திசெய்யப்பட்ட காகிதம் காகித ஆலையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்படுகிறது. காகிதம் உற்பத்திசெய்யப்படும் தறுவாயிலும் தரப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. மூலப்பொருட்கள், இரசாயனப்பொருட்கள், வைக்கோல், தண்ணீர் ஆகியன ஓர் ஆய்வுகூடத்தில் பரீட்சிக்கப்படுவதன்மூலம் இது நடைபெறுகிறது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் காகிதத்தையும் வெளிநாட்டிலிருந்தும் இறக்குமதி செய்வதாயிருந்தால் தேவைப்படும் வெளிநாட்டுச் செலாவணியில் 40 சதவிகிதம்மட்டுமேசெலவுசெய்யப்படும். காலக்கிரமத்தில் சுமார் 90 சதவிகிதத்தைச் சேமிக்கக்கூடியதாக இருக்கும்.

## காகித வகைகள்

அன்றாட வாழ்க்கையில் நாம் உபயோகிக்கும் பலரகமான காகிதங்கள் பின்வருமாறு:-

(அ) அச்சுக் காகிதம்- பாடப்புத்தகங்கள், வர்த்தமானிகள், தொலைபேசிநாமாவளிகள் பஸ் பிரயாணச் சீட்டுகள் ஆகியனவும், அதேசமாக சகல அரசாங்கப் பிரசுரங்களும்.

(ஆ) கொப்பிப்புத்தகங்கள், கணக்குப் புத்தகங்கள், முதலானவற்றிற்கான எழுத்துக் காகிதங்கள்.

(இ) கந்தோர் அலுவல்கள் அனைத்துக்குமான தட்டச்சுக் காகிதம்.

(ஈ) பிரதிபடுத்தும் இயந்திரங்களில் உபயோகிக்கப்படும் பிரதிபடுத்தும் காகிதம்.

(உ) காகிதப் பைகளுக்கும் சிமெந்து, கோழித்தீனி முதலியனவற்றைப் பொதிசெய்வதற்குமான 'கிருப்ட்' காகிதம்.

(15-ம் பக்கம் பார்க்க)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
கடைசி வாரம்
எம்.ஜி.ஆர் ஜெயலலிதா—லட்சுமி நடித்த
**மாட்டுக்கார வேலன்**
இத்துடன்
பரிசுத்த பாப்பரசரின்
இலங்கை விஜயம் தமிழில் காண்பிக்கப்படும்.

கடைசி 2தினங்கள் மட்டும்
**யாழ். வெலிங்டன்**
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
வாணிஸ்ரீ மற்றும்பலர் நடித்த
**கண்ணன் என் காதலன்**
அத்துடன்
பரிசுத்த பாப்பரசரின்
இலங்கை விஜயம் தமிழில்காண்பிக்கப்படும்

ஹிங்ஸ்லி 2-00, 6-00, 9-30
★ ஏ.வி.எம்.ராஜன், ★ வாணிஸ்ரீ
சிவகுமார் நடித்த
**அன்னையும் பிதாவும்**

கெப்பிட்டல் 2-00, 6-00 9-30
ஷர்மிலா தாகூர்—ராஜேஸ்கன்னா
மற்றும்பலர் நடித்த
சக்தி பிலிம்ஸ் **ஆராதனா**
பிலிம் பேயார்விருதுகள்மூன்றுபரிசுபெற்றஹிந்திச்சித்திரம்

சினிமா ரசிகர்களுக்கு சினிமாஸ் லிமிட்டெட்
ஸ்தாபனத்தாரின் பொங்கல் விருந்து!
ஸ்ரீதரின் கைவண்ணத்தில் உருவான
மகோன்னத படைப்பு!
சிவாஜி - காஞ்சனா ஜோடியின்
உயர்ந்த நடிப்பு
இதோ! 13ந் திகதி முதல்
கெப்பிட்டல் பிளாஸா வெலிங்டன்
திரைகளில்
**சிவந்த மண்**
(ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்)

மனோகரா - யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்கள் 10 30 மெற்னி
★ ராஜ்குமார் ★ ராதிகா
★ ஜோதிலட்சுமி
நடித்த
ஜாக்பாட்டில்
**ஸி. ஐ. டி. 999**
(ஜேம்ஸ் பொண்ட் படம்)

**வின்ஸர்**- யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினி கணேசன்
★ சௌகார் ஜானகி
★ ஏ. வி. எம்.ராஜன் ★ நிர்மலா
✱ நாகேஷ் ✱ மனோரமா ✱ சுந்தரராஜன்
✱ வசந்தா வி. எஸ். ராகவன்
✱ ஓ. ஏ. கே. தேவர் ✱ எம். ஆர். ஆர்.வாசு
நடித்தது
**சக்கரம்**


## உரும்பராய் உபதலைவர்


[உரும்பராய் நிருபர்]

உரும்பராய் - வசாவிளான் பட்டினசபையின் உப தலைவராக திரு. நல்லையா அரியரட்ணம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் அரசாங்க லிகிதராகக் கடமையாற்றி அரசகருமமொழிச் சட்டம் காரணமாகப் பதவியிலிருந்து ஒய்வு பெற்றவர். தமிழரசுக் கட்சியின் கோப்பாய்த் தொகுதி வாலிப முன்னணிச் செயலாளராக இருந்தவர். முதலாம் வட்டார உறுப்பினரான இவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டவர்.

— —

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**திங்கள் 11-1-71**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**
காலை 6-15 நாதஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 பௌத்த நற்சிந்தனை, 6-40 துதிப் பாடல்கள், 7-15 குரல் வகை, 7-45 திரை கானம், 8-00 பௌத்தநற்சிந்தனை, 8-15 ஞானமிர்தம், 8-30 சைவநீதி.

**344 மீ. அன்ட் 49 மீ.**
9-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 மதிதாப்பு, 10-30 படத்தில் இருந்து 11-15 சிறுவர் மலர், 12-00 எமது அதிதிகள், 1-05 பெண்ணுலகம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**
மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-30 பாட்டு, 6-15 மெல்லிசைப் பாடல்கள், 6-35 பெண்ணுலகம், 7-00 தாளவாத்திய கச்சேரி, 7-30 விவேகச் சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நிகழ்ச்சித் தொகுப்பு, 9-45 பாட்டு, 10-30 செய்தி தொகுப்பு.


வெஸ்லிசினிமா
காரைப்பாளி
தினசரி 2-30, 6-30, 9-30
எஸ்.எஸ்.ஆர். - தேவிகா
நடித்த
**முதலாளி**


## காகித ஆலை

(14-ம் பக்கத்தொடர்ச்சி)

(ஊ) கோப்பு உறைகளுக்கான காகித அட்டை.

(எ) சடிதத் தலைப்புகள், குறிப்புத் தலைப்புகள் முதலானவற்றை அச்சிடுதற்கான காகிதம்.

(ஏ) பஸ்பிரயாணச் சீட்டுகள், கணக்கு இயந்திரங்கள், தொலை அச்சுக் கருவிகள் முதலியவற்றிற்கான காகிதச் சுருள்கள்.

ஒரு காலத்தில் இலாபகரமாக இல்லாததால் மூடிவிட வேண்டுமென்ற ஆலோசனை கூறப்பட்ட இக்காகித ஆலை தற்போது வியத்தகு சாதனைகள் பல புரிந்து, இரவு பகலாக வேலையில் ஈடுபட்டு காகித உற்பத்தியைப் பெருக்கி, நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையாமல் பாதுகாக்க என் ஆசிகள் உரித்தாகட்டும்.

## காஷ்மீரில்

சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அரசாங்க அதிகாரியொருவர் கூறினார்.

## சந்தைக் குத்தகை விற்பனை விளம்பரம்

### கிராமச்சபை— கொக்குவில்

எமது சபையால் நிர்வகிக்கப்படும் பின்வரும் சந்தைகளின் 1971-ம் ஆண்டுக் குத்தகை விற்பனைக்கான கேள்விகள், தனித்தனி, எதிர்வரும் 15-1-71-ம் திகதி காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் எதிர்வரும் 13-1-71-ம் திகதி பி ப, 3 மணிவரை பத்திரப் பணம் ரூபா 1/-ம் கட்டுப் பணம் ரூபா 10/-ம் கட்டுவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

வேறுவிபரங்கள் தேவைப்படில் இவ்வலுவலகத்தில் அலுவலக வேளைகளில் அறிந்துகொள்ளலாம்.

**சந்தைகள்**

1. கொக்குவில் ஆடிய பாதம் வீதிச் சந்தை.
2. கோண்டாவில் ஸ்ரேஷனடிச் சந்தை.
3. கோண்டாவில் சந்திச் சந்தை.

இ. க. சபாபதி,
தலைவர்,
கிராமசபை,
கொக்குவில்.
2721

கி. ச. அலுவலகம்,
கொக்குவில்.

9-1-71


REGAL
Jaffna
Daily 4-45, 7, 9-45 p. m,
Poya days 4 shows
Anthony Quinn
in
THE SHOES OF THE FISHERMAN


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

**காணி**

கொக்குவில் காங்கேசன்துறை வீதி பூநாறி மரத்தடியில் யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்கு அண்மையில் அமைந்துள்ள கடைக் கட்டிடமும் வீடும் 1 பரப்பும் 15 குளி விஸ்தீரணமானது. விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு லான்ட் ரிரேட்ஸ் (Land trades), 35, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2641

**காணி**

(1) இராமநாதன் கல்லூரிக்குவடக்குஎல்லையில் மனை/தோட்ட நிலம் 15 பரப்பு (துண்டுகளாக அல்லது மொத்தமாக). (2) K.K S. ரோட்டுக்கரையில் 5 பரப்பு (கல்லூரிக்கு அண்மையில்) மு. சுவாமிநாதர் வைத்தியர், சுன்னாகம். 2638

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் 16 பெரிய அறைகள் கொண்ட வீடு உல்லாசப் பிரயாணிகள் விடுதி, பிரசவ விடுதி போன்றவற்றிற்கு உகந்தது. உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. LAND TRADS) லான்ட் ரிரேட்ஸ், 35, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 2624

ஆங்கில தட்டச்சு (OLIVETTI Lettera 22) Portable. இரும்புப் பெட்டி (IRON SAFE) இந்தியன். கிழமை நாட்களில் காலை 10 மணி தொடக்கம் 4 வரை பார்வையிடலாம். விலைகுறிப்பிட்டு 18-1-71க்கு முன் எழுதவும். 11 ஜீமும்சக் கட்டடம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2634

**காணி**

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் ரோட்டுக்கரையில் மூன்றரைப் பரப்புக்காணி விற்கப்படும். நல்ல தண்ணீர். இ. சிவகுருநாதன், அத்தியடி, யாழ்ப்பாணம். 2635

**டிருக்ரர்**

22 ஸ்ரீ 6000 தொடர் பிலக்கபேர்கூசன் (Farguson) டிருக்ரர் கலப்பையுடன் புதிய இருங்க் (Crank) இணைக்கப்பட்டது. திருமதி. அருமைத்துரை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். 2642

### கல்வி

சித்தி நிட்சயம்காலை/பகல் மாலை வகுப்புகளுக்கான பிரவேசங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஜீ.சி.ஈ. சாதாரணம்/ கலை/ விஞ்ஞானம்/ வர்த்தகம்/ மனையியல் உயர்தர கலை/ வர்த்தகம், ஜீ ஏ. கியூ. விசேஷ ஆங்கிலம்/ சிங்களம், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம், வர்த்தக கணிதம், உடுப்பு தயாரித்தல், மெஷின் எம்பிரோயிடறி பயிற்றப்பட்ட அனுபவமுள்ள பட்டதாரிகளால் நடாத்தப்படுகின்றன. விடுதி வசதியுண்டு. யூனைட்டெட் மகளிர் கல்லூரி, நெல்லியடி, கரவெட்டி. 2573

ஜீ. சி. ஈ. சாதாரண கலை/ விஞ்ஞான/ வர்த்தக காலை மாலை வகுப்புகளுக்கும், விசேட ஆங்கில சிங்கள வகுப்புக்களுக்கும் விண்ணப்பங்கள் 15ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, 107 பருத்தித்துறை வீதி, நல்லூர். 2630

### வாடகைக்கு

நவீன வசதிகள் யாவும் அடங்கிய புதிய கல்வீடு வாடகைக்குண்டு சிறுகுடும்பம் விரும்பத்தக்கது 217/4, கடைச்சாமி வீதி, வண்ணார்பண்ணை. 2637


ராஜா - யாழ்.நகர்
தினசரி காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30
**ஏகநாதர்**-தமிழ்
இப்படத்துடன்
அண்ணாவின் இறுதியாத்திரை
எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்
அத்துடன்
பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில்
40 நிமிடங்கள் வரை காண்பிக்கப்படும்.

## மணி மொழி!

இடைவிடாத உழைப்பின்பேரில் அறிவையும், அனுபவத்தையும் சம்பாதித்து, ஒரு கலைப் பண்பையும், நாகரிகத்தையும் சிருஷ்டித்த பிறகு அவற்றின் போக்குத் தடைப்படுகிறது. முற்போக்கு தடைப்படுவது மட்டுமின்றிப் பிற்போக்கும் ஆரம்பமாகிறது. கடந்த காலம் முழுவதையும் ஒரு திரை மறைத்தது போல் ஆகிவிடுகிறது. சில சமயங்களில் பழைமையை ஒருவாறு காணமுடிகிறதாயினும், அறிவு, அனுபவம் என்னும் மலையின்மீது மீண்டும் கஷ்டப்பட்டு ஏற வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு தடவையும் உயரப் போகப்போக மேற்கொண்டு ஏறுவது சுலபமாக இருக்கலாம்.

—ஜவஹர்லால்நேரு.




## முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் நீலசோப் போல் வேறு சோப்புகள் விற்பனைக்கு வருவதால் மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை கவனித்து எங்கள் விற்பனை வான்களில் வாங்குங்கள். வழமைபோல் மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை சேகரித்து பரிசுகளைப் பெறுங்கள்.

மில்க்வைற்
சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77 - யாழ்ப்பாணம்.


காங்கேசன்துறை பட்டின சபைத்தலைவர்

# 'கனவான் ஒப்பந்தத்தை' மதித்து ஜெயபாலசிங்கம் ராஜினமா!

(நமது நிருபர்)

காங்கேசன்துறை பட்டின சபை உறுப்பினர்கள் மூவருடன் செய்துகொண்ட 'கனவான்கள் ஒப்பந்தத்'தின்படி காங்கேசன்துறைப் பட்டினசபையின் தலைவர் திரு. கனக. ஜெயபாலசிங்கம் தமது ஒரு வருடப் பதவிக்காலத்தின் பின் தலைவர் பதவியை நேற்று ராஜினமா செய்துள்ளார். காங்கேசன்துறைப் பட்டினசபையின் 20 வருடச் சரித்திரத்தில் கனவான்கள் ஒப்பந்தம் முறையாக நிறைவேற்றப் பட்டது இதுவே முதல் தடவையாகும்.



1970ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ந் திகதி போட்டியின்றி ஏகமனதாகத் தலைவராகத் தெரிவுசெய்யப் பட்ட திரு. ஜெயபாலசிங்கம் இம்மாதம் 12ந் திகதி வரை தலைவர் பதவியில் இருக்கலாமென ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் அவர் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இரு தினங்களுக்கு முன்னதாகவே தனது ராஜினமாவை உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் நேற்றுச் சமர்ப்பித்துள்ளார்.

பட்டினசபை ஆரம்பமாகிய கடந்த 20ஆண்டுகளில் தலைவர்களாக வந்தவர்களில் வயது குறைந்தவர். 28 வயதில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள் ஒரு தொழிற் பதிவுக்கந்தோர் ஆரம்பிப்பதற்கு இவர் எடுத்த முயற்சியின் பயனாகத் தொழிற் பதிவுக்கந்தோர், பட்டினசபை அலுவலகத்திலேயே திறக்கப்பட்டுள்ளது.

இடையில் நிறுத்தப்பட்ட மயிலிட்டி மீன்பிடித் துறைமுக வேலைகளை மீண்டும் அடுத்த மாதம் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்துடன் பேச்சுகள் நடத்தி, நடவடிக்கை எடுத்ததோடல்லாமல் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திவேலைகளை தொடர்ந்துஅரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமென அரசை வற்புறுத்தியுள்ளார் காங்கேசன்துறைப் பட்டினத்தின் மின்சார அபிவிருத்திக்காக ரூபா 157,000 கடனுதவி பெறுவதில் வெற்றி கண்ட இவர். கட்டுப்பாடற்ற விலையில் விற்கப்பட்ட மாட்டிறைச்சியைக் கட்டுப்பாட்டு விலையில் விற்கப் படவேண்டுமென ஒரு சட்டத்தையும் அமுலுக்குக் கொண்டுவந்தார்.

திரு. ஜெயபாலசிங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் பூங்கா, குழாய் மூலம் நீர் வசதி ஆகிய திட்டங்களும் வெகு விரைவில் அமுல்நடத்தப்படவிருக்கின்றன. இவரின் விடாமுயற்சியால் காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள் சுமார் நாலரை லட்சம் ரூபா செலவில் ஒரு நவீன தபாற் கந்தோர் இவ்வருடத்தில் அமைக்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

புதிய தலைவர் தெரிவு செய்யப்படும்வரை உபதலைவர் திரு. ஜி. பேரின்பம் பதில் தலைவராகக் கடமையாற்றுவார்.

ஈழநாடு

சாதாரண வருடம் மார்கழி மாதம் 27-ந் திகதி [11-1-71]

## பொங்கல்

இவ்வாரம் தைப்பொங்கல் பெருநாள்வருகிறது. அதை அடுத்து மறுநாள் மாட்டுப்பொங்கல். மறுதினம் கன்றுப்பொங்கல். மனிதருக்கு மட்டுமன்று மாடு கன்று முதலிய கால்நடைகளுக்கும் பொங்கல் பொங்கிப்படைத்து விழாஎடுப்பது தொன்றுதொட்டு தமிழரின் பழக்கமாகும். சமூக பொருளாதாரத்தில் கால்நடைகளுக்கு எவ்வளவு முக்கியம் அளிக்கப்பட்டதென்பதை இதிலிருந்து அறியலாம்.

சமூகத்தில் யாவருக்கும்உணவளித்துப் பணியாற்றுவதே அக்காலத்தில் விவசாயிகளின் முக்கிய நோக்கமாகும். விவசாயிகளுக்கு மிக உதவியாகக் கால்நடைகள் இருந்துவந்தன. பசுக்கள் வேண்டிய பால் உணவுகளைத்தரும். எருதுகள் வயலில் உழும்; வண்டி இழுக்கும்; போர் அடிக்கும்' இன்னும் பலபல விதங்களில் உதவும்.

ஆனால் இன்றோ, விவசாயத்தின் நோக்கம் மக்களின் பசிப்பிணியைத் தீர்ப்பதல்ல. பணம், அதிக பணம் சம்பாதிப்பதுதான் விவசாயத்தின் நோக்கமாகவுள்ளது! விவசாயத்தில் நவீன முறை என்ற பெயரால், நம் உயிர் போன்ற கால்நடைகளை நாசமாக்கி, வெளிநாட்டு டிராக்டர்களையும் உரங்களையும் நம்பி இருக்கின்றோம். ஒரு புறம் அந்நிய நாடுகளுக்கு நமது செல்வம் வெளியேறுகிறது, 'பால் உணவுக்கு'க்கூட பிற நாடுகளை எதிர்பார்க்கின்றோம். இதனால் எவ்வளவு ஆபத்து ஏற்பட்டுவிடுகிறதென்பதை நம்மில் பலரும் உணரவில்லை. உப உணவுப் பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு விலைவாசிகள் உச்சாணிக் கொம்பில் ஏறியுள்ளன. காரணம், விவசாயத்தின் நோக்கம் சமூகத்துக்கு உதவுவதற்குப் பதில், பணப் பேராசையாக மாறி இருப்பதுதான்.

இந்த அவலநிலைமாறி, மீண்டும் முன்போல் சுபீட்சமேற்படவேண்டுமாயின் இன்றுள்ள நிலையில் பெரும் 'புரட்சி' ஏற்படவேண்டும். பணம் பேராசை எனும் அரக்கனிடமிருந்து விவசாயிகளைக் காப்பதுடன், கால்நடைகளின் முக்கியத்தை உணர்ந்து அவற்றைக் கூடுமானவரை பாதுகாக்கவேண்டும், அப்படிச்செய்தால்தான் மீண்டும் தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், கன்றுப் பொங்கல் இவற்றை மகிழ்ச்சியுடன் பொங்கி மக்களும் கால்நடைகளும் முன்போல்சுபீட்சமாக வாழமுடியும்.

### சமரக்கொடி இன்று வருகிறார்

யாழ்ப்பாணம், திங்கள் 'கூட்டரசாங்கமும் சோஷலிஷத்திற்கான போராட்டமும்' என்னும் பொருள்பற்றிய திரு எட்மன்ட் சமரக்கொடியின் பகிரங்க சொற்பொழிவு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் லேக் வியூ ஹோட்டல் மகா நாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. புரட்சிகர சமசமாஜக் கட்சி யாழ் கிளை இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இன்று பிற்பகல் 2மணிக்கு ஐக்கிய ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளைகளின் பொதுக் கூட்டத்திலும் திரு சமரக்கொடி பிரதமபேச்சாளராகக் கலந்து கொள்கிறார் இக் கூட்டமும் லேக் வியூ ஹோட்டலில் நடைபெறுகிறது.


### முக்கிய அறிவித்தல்

உடும்பராய் கிழக்கு ஞானமுத்து திருச்செல்வம் என்பவரிடம், 500 வாழைக் குட்டிகளுக்கு ஓடர்கொடுத்தவர் உடனடியாக வந்து பெற்றுக்கொள்ளவும். விலாசம் தவறியதால் ஓடர் கொடுத்தவருடன்தொடர்பு கொள்ளமுடியவில்லை.

2724

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள "வூல்வ்" எலக்ரிக் சான்டரும் 3/8" டிரிலும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு விளம்பர இல: 2644, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

2644

### விற்பனைக்கு

லிஸ்ரர் லைற் இன்ஜின் — F. R. 3 H. P. 24 — டைனமோ சிங்கிள்வேஸ் 13 K. V. A., 230 A C. 2 றெக்ரிவயர்- (Rectifiers) மாலை 2 தொடக்கம் 6 மணி வரையும் பார்வையிடலாம். லஷ்மி தியேட்டர், கரவெட்டி.

2444


### நன்றிநவிலல்

6-1-71ல் காலமான எழுவைதீவைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியரும் முன்னாள் எழுவைதீவு உபதபால் அதிபருமான திரு. நமசிவாயத்தின் இறுதிச்சடங்குகளில் பங்குபற்றிய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது நன்றி. தனித்தனியே நன்றிதெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். ந. செல்லத்துரை ஆசிரியரும் குடும்பமும், அனலைதீவு.

2643


### 'நினைத்தது நடந்ததா?'

கொழும்பு 'அரங்கு' தயாரித்து 'மயிற்' தாபனத்தின் ஆதரவுடன் அளிக்கும் சின்னையா சிவனேசனின் நவீன நாடகம்

13-1-71 புதன் மாலை 6-30 மணி
யாழ். வீரசிங்கம் மண்டபம்
கட்டணம்: 5/-; 3/-; 1/-;

2713

### பொங்கலோ!! பொங்கல்!!

எங்களால் தயாரிக்கப்பட்ட அண்டிப் பானை, புட்டுப்பானை, மட்லோ, அண்டி இங்கும் எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்
உலோகத் தொழிற்சாலை
250 – 254, கே. கே: எஸ். வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7049

கிளை,
6., பாங்ஷால்வீதி,
கொழும்பு.
தொலைபேசி: 26150


இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63 - ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு தை மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.